**7-8-2C06**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - x |
| Governor and Council of Ministers | xi - xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-25 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) திருப்பத்தூரில் விடுதலைப் புலிகளை ஆதரித்து புரட்சிகர இளைஞர் முன்னணி பேரணி நடத்தியது | 25-29 |
| (ஆ) சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் மின்தூக்கி அடிக்கடி பழுதாகிவிடுதல் | 32-33 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் | 29-32 |
| **4. விதி 110—ன்கீழ் அறிக்கை—** | |
| கிருஷ்ணா நதிநீர் பெறுவது மற்றும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் தொடர்பாக ஆந்திர அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை – மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை | 33-36 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் | 36-37 |
| (ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு மற்றும் நியமனம் | 198-207 |
| (i) மதிப்பீட்டுக் குழு | 198-199 |
| (ii) பொதுக் கணக்குக் குழு | 199-200 |
| (iii) பொது நிறுவனங்கள் குழு | 200-201 |
| (iv) அவை உரிமைக் குழு | 201-202 |
| (v) பேரவை விதிகள் குழு | 202-203 |
| (vi) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 203-204 |
| (vii) அரசு உறுதிமொழிக் குழு | 204 |
| (viii) மனுக்கள் குழு | 205 |
| (ix) பேரவை நூலகக் குழு | 205-206 |
| (x) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 206 |
| (xi) அவைக் குழு | 207 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—** | 38-198 |
| (அ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 11 – வணிக வரி மற்றும் பதிவுத் துறை – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | |





| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (இ) கோரிக்கை எண் 10 – வணிக வரி மற்றும் பதிவுத் துறை – வணிக வரிகள் | |
| • மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் | 38,62,89,91,92, 94,96,135, 165-174 |
| மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 78,90,158-165, 176 |
| • திரு. செ.ம. வேலுசாமி | 90,91,92,93-94, 95,96,97,175 |
| திரு. இரா. மாணிக்கம் | 112,113-122 |
| • திரு. பெ.சு. விஜயகுமார் | 122-132 |
| • திரு. தி.க. ராஜா | 132-134,135-140 |
| • திரு. வே. மாரிமுத்து | 140-145 |
| • திரு. எஸ். இராசசேகரன் | 145-150 |
| • திரு. எச். வசந்தகுமார் | 150-152 |
| திருமதி மு. சந்திரா | 153-157 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 208 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

227420
சென்னை-600 008



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V2॥, 31' 606
P06.8.1

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**19. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**25. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

**26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

**28. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**29. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**30. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

**3. Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Wasteland Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | .. | **The Hon. Thiru T. M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K. R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| 19. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| 20. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| 21. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| 22. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | .. | **The Hon. Thiru M. P. Saminathan:**<br>Highways and Ports |
| 25. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 26. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவர்ாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்
### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி–1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. | திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. | கோபாலன், திரு. போ. | - உதகமண்டலம் |
| 66. | கோபிநாத், திரு. கே. | - ஓசூர் |
| 67. | கோவிந்தசாமி, திரு. சி. | - திருப்பூர் |
| 68. | கோவை தங்கம், திரு. | - வால்பாறை (செ.வ.) |
| 69. | சக்கரபாணி, திரு. அர. | - ஒட்டன்சத்திரம் |
| 70. | சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 71. | சண்முகம், திரு. எஸ்.வி. | - மதுரை மேற்கு |
| 72. | சண்முகம், திரு. சி.வி. | - திண்டிவனம் |
| 73. | சண்முகவேலு, திரு. சி. | - உடுமலைப்பேட்டை |
| 74. | சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. | - வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 75. | சந்திரகாசி, திரு. மா. | - வரகூர் (செ.வ.) |
| 76. | சந்திரா, திருமதி மு. | - ராஜபாளையம் (செ.வ.) |
| 77. | சாமி, திரு. ஆர். | - மேலூர் |
| 78. | சாமி, திரு. கே.பி.பி. | - திருவொற்றியூர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | - வெள்ளக்கோவில் |
| 80. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | - ஆண்டிமடம் |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | - மன்னார்குடி |
| 82. | சிவராஜ், திரு. சு. | - ரிஷிவந்தியம் |
| 83. | சிவானந்தம், திரு. ஆர். | - ஆரணி |
| 84. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | - திருவள்ளூர் |
| 85. | சின்னசாமி, திரு. அ. | - பேரணாம்பட்டு (செ.வ.) |
| 86. | சின்னசாமி, திரு. ஆர். | - சிங்காநல்லூர் |



| | | |
|---|---|---|
| 87. | சின்னச்சாமி, திரு. செ. | - மருங்காபுரி |
| 88. | சின்னதுரை, திரு. கு. | - தலைவாசல் (செ.வ.) |
| 89. | சின்னப்பன், திரு. பொ. | - விளாத்திகுளம் |
| 90. | சின்னராஜ், திரு. ஓ.கே. | - மேட்டுப்பாளையம் |
| 91. | சீனிவாசன், திரு. கு. | - பூங்கா நகர் |
| 92. | சுதர்சனம், திரு. டி. | - பூந்தமல்லி |
| 93. | சுந்தரம், திரு. எம்.ஆர். | - ஆத்தூர் |
| 94. | சுந்தரம், திரு. ந. | - காரைக்குடி |
| 95. | சுந்தர், திரு. சு. | - உத்திரமேரூர் |
| 96. | சுப்பிரமணியம், திரு. ஓ. | - பவானிசாகர் |
| 97. | சுப்புராம், திரு. ராம. | - திருமயம் |
| 98. | சுப்ரமணியன், திரு. ந. | - குளத்தூர் (செ.வ.) |
| 99. | சுரேஷ் ராஜன், திரு. என். | - கன்னியாகுமரி |
| 100. | சூரியகுமார், திரு. என்.கே.ஆர். | - நாட்றாம்பள்ளி |
| 101. | செங்குட்டுவன், திரு. டி. | - கிருஷ்ணகிரி |
| 102. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | - கோபிசெட்டிப்பாளையம் |
| 103. | செந்தமிழன், திரு. ஞா. | - சைதாப்பேட்டை |
| 104. | செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. | - மேல்மலையனூர் |
| 105. | செந்தில் பாலாஜி, திரு. வே. | - கரூர் |
| 106. | செல்வம், திரு. கு. | - மங்களூர் (செ.வ.) |
| 107. | செல்வராஜ், திரு. என். | - முசிறி |
| 108. | செல்வராஜ், திரு. து. | - ஸ்ரீவைகுண்டம் |
| 109. | செல்வி ராமஜெயம், திருமதி | - புவனகிரி |

110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் திருமதி - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)
177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை



179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்–I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்
200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| 201. ராஜா, திரு. என்கேகே.பெ. | .. | ஈரோடு |
| 202. ராஜா, திரு. தி.க. | .. | திருப்பத்தூர் |
| 203. லட்சுமணன், திரு. ச. | .. | போடிநாயக்கனூர் |
| 204. லதா, திருமதி ஜி. | .. | குடியாத்தம் |
| 205. லீமா றோஸ், திருமதி ரா. | .. | திருவட்டாறு |
| 206. வசந்தகுமார், திரு. எச். | .. | நாங்குநேரி |
| 207. வரதராஜன், திரு. ரா. | .. | விருதுநகர் |
| 208. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 209. விடியல் எஸ். சேகர், திரு. | .. | காங்கேயம் |
| 210. விஜயகாந்த், திரு. | .. | விருத்தாசலம் |
| 211. விஜயகுமார், திரு. கே.எஸ். | .. | கும்மிடிப்பூண்டி |
| 212. விஜயகுமார், திரு. பெ.சு. | .. | போளூர் |
| 213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. | செய்யாறு |
| 214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. | பேராவூரணி |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | சேலம்—2 |
| 216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 217. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 218. வேலுசாமி, திரு. இல. | .. | தருமபுரி |
| 219. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 220. வேலுமணி, திரு. சு.ப. | .. | பேரூர் |
| 221. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 222. வேல்முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 225. ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. | விளவங்கோடு |
| 226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 227. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 228. ஜெயக்குமார், முனைவர் கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயபால், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 230. ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 231. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஹசன் அலி, திரு. கு. | .. | இராமநாதபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | மதுரை மத்தி |
| 235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. இரா. விடுதலை | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 22, விய — திருவள்ளுவர் ஆண்டு 2037
## 2006 ஆகஸ்ட் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்"

ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 6, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**6—**

### பட்டு நூற்பாலை

***487—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்காமலுள்ள கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணையிலுள்ள கிராமியப் பட்டு நூற்பாலையை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்காமல் இருந்து வரும் கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணை கிராமியப் பட்டு நூற்பாலையை மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதி, கே.ஆர்.பி. அணையிலே கடந்த 15, 20 ஆண்டு காலமாக, நல்ல முறையிலே இயங்கி வந்த கிராமியப் பட்டு நூற்பாலை, கடந்த 5 ஆண்டு காலமாக மூடப்பட்டு, அதனாலே 200 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அரசாங்கத்திற்குச் சொந்தமான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மெஷின்கள் எல்லாம் அங்கே பாழடைந்து கிடக்கின்றன. அதுமட்டுமல்ல. கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இருக்கின்ற கிராமியப் பட்டு நூற்பாலை விவசாயிகள் எல்லாம் விளைவிக்கின்ற பட்டுக் கூடுகளை கர்நாடகா மாநிலத்திலுள்ள ராம் நகருக்குக் கொண்டு போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நூற்பாலையைத் திறப்பதன் மூலமாக, அங்கே பட்டுக் கூடுகளை விளைவிக்கின்ற அந்த விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும் என்கின்ற காரணத்தினால், அதை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, Krishnagiri River Project என்று சொல்லப்படுகின்ற அந்த இடத்திலே பட்டு நூற்பாலை நிறுவனம், 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கிவந்த காரணத்தால், 12–1–1987 ஆம் நாளன்று TANSILK என்ற நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு முடிவெடுத்து, பிறகு 1995 ஆம் ஆண்டு முதல் அந்த நிறுவனம் அதைத் தொடங்குவதற்கு ஒப்புதல் தந்தும், தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்ட காரணத்தினாலும், பிறகு L.P.F.–னுடைய தொழிலாளர்கள் 40 பேர் நாங்கள் வேலைக்குச் செல்கிறோம் என்று தெரிவித்தும், அதேநேரத்திலே A.I.T.U.C.–ஐச் சேர்ந்த 60 தொழிலாளர்கள் நாங்கள் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து செய்வோம் என்று சொன்ன காரணத்தினாலும், அந்தத் தொழிற்சாலை இயங்க முடியவில்லை. மீண்டும் 2002-லே அந்த TANSILK என்ற நிறுவனத்தை, எப்படியாவது தொடர்ந்து நடத்த வேண்டும் என்று முயற்சித்தபோது, தொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தராத காரணத்தால்,



அதை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையிலே அரசாங்கத்திற்கு 65 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டு, TANSILK–க்கும் 72 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டு, பிறகு வேறு வழி இல்லாத காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் செங்குட்டுவன் அவர்களே அந்தத் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக இருந்து, அவரே L.P.F.–ஐச் சேர்ந்த 40 தொழிலாளர்களும் அந்த நிறுவனத்தை மூடிவிட்ட காரணத்தினாலே, அவர்களுக்கு நட்டயீடாக 4,27,055 ரூபாய் பெற்றுக்கொடுத்துவிட்ட பிறகு, மீண்டும் அந்த நூற்பாலையைத் தொடங்குவது என்பது கடினம். வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் இப்போது சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் முயற்சி செய்து, தொழிலாளர்களே ஒன்று சேர்ந்து அந்த நிறுவனத்தைத் தொடங்க முற்படுவார்களேயானால், அரசு அந்த இயந்திரங்களை, கட்டடத்தை அனைத்தையும் அவர்களிடத்திலே ஒப்படைப்பதற்குத் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களே மனமுவந்து அந்த ஆலையை இயக்குவதற்குத் தயாராவார்களேயானால், தொழிலாளர்களே நடத்திக்கொள்வதற்கு உண்டான ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்கும் என்று சொன்ன மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஏராளமான அளவிற்கு இப்போது பட்டு உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. அந்தப் பட்டுக் கூடுகளை பெங்களூருக்குச் சென்றுதான் விற்க வேண்டிய கட்டாய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசின் சார்பாக கொள்முதல் செய்து, நல்ல விலை கிடைக்கிற அளவிற்கு, பட்டுக் கூடு உற்பத்தியாளர்களுக்கு உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு, குறு தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களும், மலைப் பகுதிகளிலே வாழக்கூடிய சகோதரிகளும், அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் கூடுதலாக அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்று Director of Industries and Commerce மூலமாக அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு மேலும் இரண்டாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய முயற்சிகளை நாங்கள் மேற்கொள்கிறோம் என்று துறை தெரிவித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக் கூடுகளை விற்பதற்கு வழியில்லாமல்தான் அங்கு இருக்கிற விவசாயிகள் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திற்குக் கொண்டுபோய் விற்பதனால் ஏராளமான செலவு ஆவதோடு, அங்கே நியாயமான விலை கிடைப்பதற்கான வாய்ப்பும் இல்லை. தருமபுரியில் பட்டுக் கூடுகள் உற்பத்தியாவதை அரசு அலுவலகத்திலே வாங்குவதாக இருந்தாலும், அங்கே இருக்கிற தனியார் சிண்டிகேட் அமைத்துக்கொண்டு விவசாயிகளைப் பெரும் அளவிற்கு துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். எனவே, பட்டுக் கூடுகளை அரசே கொள்முதல் செய்து, நல்ல விலை கிடைக்கிற அளவிற்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தருவதற்கு அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற எல்லாப் பொருள்களையும் அரசாங்கமே கொள்முதல் செய்வது என்பது இயலாத ஒன்று. இருந்தாலும்கூட, காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய அண்ணா பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இன்று கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களிலே உற்பத்தியாகின்ற பட்டு நூலை அவர்கள் கொள்முதல் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொள்முதல் செய்கின்ற விலையிலே, உற்பத்தி செய்கின்றவர்களுக்கு அதிக இலாபம் வரவில்லை என்ற புகார் தெரிவிக்கப்படுமானால், அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொங்கலூர் பழனிசாமி.



**திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புழு உற்பத்தியில் மல்பரி பயிர் விவசாயிகளுக்கு நல்ல பணம் தரும் பயிராக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் என்னென்ன உதவிகள் செய்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக மல்பரி பயிரிடக்கூடிய நிலப் பரப்பினுடைய அளவை 500 ஹெக்டரிலிருந்து 2,000 ஹெக்டராக உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்னமும் இதிலே அதிகமாக கவனம் செலுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஈடுபட்டால், இந்த மல்பரி என்ற அந்தச் செடிகளை வளர்ப்பதற்கு அரசாங்கம் நிறைய உதவிகளைச் செய்வதற்கு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே இயங்கி வருகின்ற பட்டுக் கூடு அலுவலகத்தை, உயர் பதவியிலே இருக்கின்ற அதிகாரிகள் பெங்களூருக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அப்படிச் செல்லக் கூடாது என்று நான் கடந்த காலங்களிலே கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அலுவலகம் தொடர்ந்து திருப்பத்தூரிலேயே இயங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் முதலமைச்சராக இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எந்தத் தொழிலையும் வேறு மாநிலத்திற்கு அனுப்புவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

முற்பகல் 9—40 [2006 ஆகஸ்ட் 7

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு இறக்குமதிக்காக மத்திய அரசு 32 சதவிகிதம் வரியை 8 சதவிகிதமாகக் குறைத்த காரணத்தினாலே, சீனாவிலிருந்து பட்டுக் கூடுகள் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. அதன் அடிப்படையில், இங்கே உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு குறைந்தது 75 ரூபாய் குறைந்து கொண்டிருக்கிறது. ஆக, இந்த நஷ்டத்தை மாநில அரசு ஏற்று அவர்களுக்கு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனாவிலிருந்து இறக்குமதி செய்கின்ற பட்டுக்கு மத்திய அரசாங்கம் விதிக்கின்ற வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியிருக்கிறார். நம்மைப் பொறுத்தவரையிலே, சீனாவிலிருந்து வரக்கூடிய அந்தப் பட்டைவிட, உலகத்திலேயே மிகத் தரமானப் பட்டு எங்கே உற்பத்தியாகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டிலேதான் உற்பத்தியாகிறது. இன்னும் சொல்லப்போனால், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு உலகளவிலே இன்று மார்க்கெட் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு காலத்திலே, தமிழ்நாட்டிலேயும், ஹைதராபாத்திலேயும், நம்முடைய தென் மாநிலங்களிலேதான் பட்டுச் சேலைகளுக்குக் கிராக்கி இருந்தது. இன்று சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலே இருக்கக்கூடிய தாய்மார்கள்கூட, காஞ்சிபுரம் பட்டுச் சேலையை விரும்பி வாங்கி உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இரண்டாயிரம் ரூபாய், மூவாயிரம் ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த ஒரு சேலை, இன்று பலவகையான இரகங்கள், நல்லத் தரமான சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தால், ஒரு சேலை ஒரு இலட்சம் ரூபாய்க்குக்கூட வாங்குவதற்கு மக்களும் தயாராக இருக்கிறார்கள்; அதை உற்பத்தி செய்கின்றவர்களும் அவர்களுக்கேற்ற முறையிலே, தாய்மார்கள் விரும்பக்கூடிய வகையிலே அதைத் தயார் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கிணங்க, கோவை மாவட்டத்திலே, உடுமலைப்பேட்டை தொகுதியிலே, பட்டு உற்பத்தி அதிகமாக கடந்த நான்கு, ஐந்து ஆண்டுக் காலமாக செய்யப்பட்டு



2006 ஆகஸ்ட் 7]

வருகிறது. அங்கு மலைப் பகுதிகளிலே, மலைவாழ் பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலமாக, அவர்களுக்கே நிலங்கள் கொடுக்கப்பட்டு, அங்கே அவர்கள் போதிய தரமான பட்டை உற்பத்திச் செய்வதற்கு, பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்து வருகிறார்கள். அதைக் கொள்முதல் செய்து, பெங்களூருக்குக் கொண்டு சென்று விற்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு மார்க்கெட்டிங் சென்டரை கோவை மாவட்டத்திலேயே ஏதாவது ஒரு இடத்திலே ஏற்பாடு செய்தால், ஏற்கெனவே அங்கே மைவாடி பகுதியிலே, பட்டு ஆராய்ச்சிப் பண்ணையும் இருக்கிறது. ஆகவே, ஒரு மையத்தை நீங்கள் அங்கே உருவாக்கிக் கொடுத்தால், உற்பத்திச் செய்யக்கூடிய அந்த விவசாயிகளுக்கு, பட்டுக் கூடுகளை விற்பதற்கும், அதிகமான விலை கிடைப்பதற்கும் ஏதுவாக இருக்கும். மேலும், அரசு இரண்டு இடங்களிலே மையங்களை வைத்து இப்போது அறிவித்துள்ளார்கள். உடுமலைப்பேட்டையையும் ஒரு மையமாக அறிவித்து, பட்டு வளர்ச்சிக்குப் போதிய ஆராய்ச்சிகள் மேறகொள்ளவும், விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய மானியங்கள் கிடைக்கக்கூடிய வகையிலும், நம்முடைய அரசு, தமிழக அரசு செய்து கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களே உற்பத்தி செய்து, அதன்மூலம் பட்டுக் கூடுகளை வாங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புவாரேயானால், ஒரு கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க முன்வருவாரேயானால், நம்முடைய மாநில அரசு அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், மானியத்தையும் கொடுப்பதற்குக்கூடத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**7—**

## கூடுதல் பேருந்துகள்

***108—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 7

(அ) வால்பாறை தொகுதியில் பெத்தநாய்க்கனூர், ரமணமுதலிபுதூர் ஊராட்சிகளுக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பெத்தநாய்க்கனூர், ரமணமுதலிபுதூர் ஊராட்சிகளுக்கு அரசு நகரப் பேருந்துகள், தனியார் பேருந்துகள் மற்றும் புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 155 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட இரு கிராமங்களும், தற்போதுள்ள பயணிகளின் அடர்விற்கு ஏற்ப, போதிய பேருந்து வசதி பெற்றுள்ளன. பயணிகளின் அடர்வு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெத்தநாய்க்கனூர், ரமணமுதலிபுதூர் ஊராட்சிகளுக்கு வருகின்ற பேருந்துகள், காலையில் பள்ளிக்கூட நேரங்களிலும், மாலையில் திரும்பிச் செல்கின்ற நேரங்களிலும், பொள்ளாச்சி—ஆனைமலை அருகில் இருக்கின்ற தென்சித்தூர், தென்சங்கம்பாளையம் போன்ற ஊராட்சிகளிலே இருந்து பொதுமக்களை ஏற்றி வருவதால், காலையிலே பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தைகள், பள்ளிக்குச் செல்லமுடியாமல் தவிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, மாணவர்கள் காலையில் பள்ளிக்கூடம் செல்கின்ற நேரத்திலும், மாலையில் வீடுகளுக்குச் செல்கின்ற நேரத்திலும், கூடுதல் பேருந்துகள் விட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வாரா என்று கேட்பதோடு, எனது தொகுதியில் இருக்கின்ற வால்பாறை மலைப் பகுதிக்கும் சேர்த்துக் கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர், தங்கள் தங்கள் பகுதிகளிலே, காலை நேரத்திலே, பள்ளிகளுக்குப் பிள்ளைகள் செல்கின்ற நேரத்திலே அதிக நெருக்கடியாக இருக்கிறது; புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளைப் பலவாறாகச்



2006 ஆகஸ்ட் 7]

சொல்லியிருக்கிறார்கள். புதிய பேருந்துகளை இயக்குவதற்கு இன்னும் ஓரிரு மாதங்கள் ஆகும். வாங்கப்பட்ட பேருந்துகள் எல்லாம் வந்துவிடுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற அளவிற்கு எங்களால் பேருந்துகளைவிட இயலும். இப்போதுகூட சேலம், விழுப்புரம், கும்பகோணம் பகுதிகளிலே இருக்கின்ற Corporation–களிலிருந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் யார் கேட்டாலும், அங்கெல்லாம் தொடங்கப்பட்டிருக்கிறது. மதுரையிலும், கோவையிலும் கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. ஒரு மாத காலத்தில், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட பகுதியிலே, புதிய பேருந்துகள் விடுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. மேலும், பொள்ளாச்சி, ஆனைமலை, கோட்டூர், ரமணமுதலிபுதூர் வழியாகப் பேருந்து விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்தும் இயக்கப்படும்; வால்பாறை பகுதிக்கும் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கூறினார்கள். வால்பாறை மலைப் பகுதியில், மாலையில் பள்ளிக்கூடம் விடுகின்ற நேரத்தில், ஒரே இடத்தில் மட்டும் சுமார் 6,000 மாணவ, மாணவிகள் கூடுகின்றார்கள். அந்த 6,000 மாணவ, மாணவியர்களும், ஒரே நேரத்திலே எஸ்டேட் குடியிருப்புக்குச் சென்றாக வேண்டும். ஆகவே, அங்கே பேருந்துகள் பற்றாக்குறையாக இருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. பள்ளிக்கூட நேரத்திற்கு ஒரு முறை அழைத்துச் சென்றுவிட்டு, மீண்டும் திரும்பி வந்து, மீண்டும் எஸ்டேட் பகுதிக்குச் செல்கின்றபோது, இரவு 8.00/8.30 மணியாகிவிடும். வயதுக்கு வந்த மாணவிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். மாலை 6.00/6.30 மணிக்கு மேலே, யானைகள், சிறுத்தைப் புலிகள், புலிகள், கரடிகள், காட்டு எருமைகள் போன்ற வனவிலங்குகள் சாலைக்கு வந்துவிடுவதால், அங்கே மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கின்றேன்; பள்ளிகளுக்காகவே காலையிலும், மாலையிலும் இரண்டு கூடுதல் பேருந்துகள் இயக்கவேண்டும். அதேபோல, வால்பாறை to பொள்ளாச்சிக்கு ஒரு பேருந்து, வால்பாறை to திருப்பூருக்கு இரண்டு பேருந்துகள், வால்பாறை to தாராபுரம், வால்பாறை to மதுரை, இந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கும் கூடுதலாகப் பேருந்துகள் இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழினத்தினுடைய தலைவர், மாண்புமிகு கலைஞர் அய்யா அவர்கள் கேட்டதையும் கொடுத்தார்கள்; கேட்காததையும் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், ஏற்கெனவே கலைக் கல்லூரியை வழங்குகின்றபோது அவர் குறிப்பிட்டதைப்போல, 'வால்பாறை ஒரு தீவு' என்பதை மனதிலே வைத்து, வால்பாறையிலே இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற அந்தத் தொகுதிக்கு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,000 புதிய பேருந்துகள் விடுவதாகக் கூறியிருக்கின்றார்கள்—வால்பாறை மலைப் பகுதிக்கு ஒரு தனிக் கவனம் செலுத்தி, அந்த மலைவாழ் மக்களின் குறைகளைப் போக்குகின்ற வகையில், கூடுதலாக 10 பேருந்துகளும், ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பழுதடைந்த பேருந்துகளுக்காக 15 பேருந்துகளும் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றுகூட, நான் வால்பாறைக்குச் செல்கின்றபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேருந்து நடுரோட்டிலே பழுதடைந்து நின்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். அடிக்கடி வால்பாறையிலே பேருந்துகள் பழுதடைந்து நின்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்துகள் 10-ம், பழுதடைந்த பேருந்துகளுக்காக 15 புதிய பேருந்துகளையும் வழங்க முன்வருவாரா என்பதைத் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அங்கு எவ்வளவு தேவை இருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கோவை போக்குவரத்துக் கழகத்திற்காக இந்த ஆண்டு 250 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கிறார்கள். மேலும், மற்ற Corporation-களில் இருக்கிற பேருந்துகள், 2, 3 ஆண்டு காலம் ஓடிய அந்தப் பேருந்துகளை கோவைக்கு மாற்றி, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வால்பாறையில் தடங்கல் இல்லாமல் பயணிகள் செல்கின்ற அளவிற்குப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

*முற்பகல் 9-50*

**திருமதி ஜி. லதா:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் ஏறத்தாழ 14 டவுன் பஸ்கள் இதுவரையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலமாக அந்த பஸ்கள் நிறுத்தப்பட்டதனாலே, பள்ளிகளிலிருந்து வரக்கூடிய சிறுமிகள் பாதிக்கப்படுகிறார்கள். மீண்டும் அந்த 14 டவுன் பஸ்களையும் விடுவதற்கான ஆணை வெளியிட பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் பரதராமியிலிருந்து மேல்மருவத்தூர், பரதராமியிலிருந்து வி-கோட்டா, பரதராமியிலிருந்து பெங்களூர் இந்தமாதிரி போகக்கூடிய வண்டிகள், எட்டு வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நிறுத்தப்பட்ட வண்டிகளை மீண்டும் விடுவதற்கான—இயக்குவதற்கான உத்தரவாதத்தைக் கொடுக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் இப்போது 200 புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தந்தப் பகுதிகளில் தேவைக்கேற்ப, உதாரணத்திற்கு திருப்பூர், திண்டுக்கல்—திண்டுக்கல்லிலே அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க—திருச்சி, தஞ்சை இப்படிப் பல பகுதிகளிலே புதிய வழித்தடங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதிகளிலே ஆய்வு செய்து விரைவிலே நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு காலமாக பல வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு பயணிகளும், மாணவ, மாணவிகளும் துயரத்திற்கு ஆளானார்கள். அப்படி நிறுத்தப்பட்ட பேருந்துகள் எத்தனை? அவற்றில் தற்போது எத்தனைப் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன? மீண்டும் நிறுத்தப்பட்ட பேருந்துகள் எவ்வளவு காலத்திற்குள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 7

**மாண்புமிகு திரு. கே.என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1,800 தனியார் பேருந்துகள் கிராமங்களிலே 20 ஆண்டு காலம், 30 ஆண்டு காலமாக ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள், நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்று மெயின் ரோடுக்கு வந்துவிட்டார்கள். கிராமப் பகுதிகளில் அந்தப் பேருந்துகள் ஓடிய இடங்களிலே மக்களுடைய தேவைக்கேற்ப, அரசுப் பேருந்துகள் அந்தப் பகுதிகளிலே இயக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த 1,800 அன்னியில், பத்து சதவிகிதம் டீசல் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணையிட்டதற்கேற்ப கடந்த காலங்களில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் ஆங்காங்கே நிலைமைக்கேற்ப நிறுத்தப்பட்டிருக்கின்றன. இப்போது தேவைக்கேற்ப படிப்படியாக அவையெல்லாம் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரிலிருந்து மணவாள நகர் வழியாக ஸ்ரீபெரும்புதூர் செல்லும் வழித்தடங்களில் போதுமான அரசுப் பேருந்துகள் இல்லாமல் காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் மாணவர்களும், தொழிலாளர்களும் தனியார் பேருந்துகளின் கூரைமேல் பயணம் செய்கின்ற காட்சி அந்தப் பகுதிகளிலே ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்குகிறது. அந்த வழித்தடங்களில் பல பேர் விபத்துக்குள்ளாகி இறக்கின்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. அந்த வழித்தடங்களில் போதுமான அரசுப் பேருந்துகளை இயக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெளிவாக, நாங்கள் இது குறித்து, எங்கெங்கு தேவை என்பதைச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதற்குரிய நிதியை அரசிலிருந்து இப்போது 100 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். மேலும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். விரைவிலே இப்போது மொத்தமாக 18,000 பேருந்துகள் தமிழ்நாட்டிலே அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்றன. 17,200 வழித்தடங்களிலே அவை இயங்கிக்கொண்டிருக்கின்றன. 800 பேருந்துகள் spare bus—களாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்த spare bus—கள் சாலைகளுக்கு வருவதால், spare bus பற்றாக்குறை என்ற நிலைமை வேறு இருந்து கொண்டிருக்கிறது. நாளை மறுநாள் ... ன டெண்டர்



2006 ஆகஸ்ட் 7]

திறக்கப்பட்டு 2,000 வண்டிகள் இப்போது வர இருக்கின்றன. படிப்படியாக, தேவைக்கேற்ப, எல்லாப் பகுதிகளிலும் பேருந்துகளை விடச் சொல்லி முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக, அவை இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீலட்சுமி நரசிம்மர் ஆலயம் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து நேரடியாக அங்கே சென்று வர போதிய பேருந்துகள் இல்லை. ஏதாவது சொகுசுப் பேருந்துகள் இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளும் புதிதாக மாண்புமிகு முதலமைச்சர் வழங்கியிருக்கிறார்கள். சொகுசுப் பேருந்துகள் எல்லாம் நீண்ட தூரப் பயணத்திற்காகப் பயன்படுகின்ற பேருந்துகள். சோளிங்கர், 100 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. அந்த இடத்திற்கு சொகுசுப் பேருந்துகள் இதுவரையில் விடுவதாக எண்ணம் இல்லை. தேவை ஏற்படின், வசூல் சரியாக இருக்குமானால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகள் முக்கிய நகரங்களிலிருந்து நெடுஞ்சாலை வழியாக, முக்கிய நகரங்களைக் கடந்து, கிராமப்புறங்களுக்குச் சென்று கொண்டிருந்தன. ஆனால், கடந்த ஐந்தாண்டு காலத்தில், தனியார்ப் பேருந்து உரிமையாளர்களெல்லாம் முயற்சி செய்து, கிராமப்புறங்களுக்குச் செல்வது நிறுத்தப்பட்டு, முக்கிய நகரங்களுக்கு மட்டும் நெடுஞ்சாலை வழியாகச் செல்லக்கூடிய உரிமத்தைப் பெற்று, கிராமப் போக்குவரத்து பெரும்பாலும் தடை செய்யப்பட்ட நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும், இதிலே தலையிட்டு, மீண்டும் அந்தப் பேருந்துகள் பழைய வழித்தடங்களில் கிராமப்புறங்களுக்குச் செல்வதற்கு ஆவன செய்யப்படுமா அல்லது

தனியார் பேருந்துகள் செல்லாத வழித்தடங்களில் அவற்றை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக அரசுப் பேருந்துகளையே இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே சொல்லியிருக்கிறேன். நீதிமன்ற ஆணையைப் பெற்று, அவர்களெல்லாம், நேரடியாக பிரதான சாலைகளிலே ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதனால், அரசு அதிலே தலையிட முடியவில்லை. ஆனால், கிராம மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்தப் பகுதிகளுக்கெல்லாம் அரசுப் பேருந்துகளை விடச் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே தேவைக்கேற்ப பேருந்துகள் விடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. சு. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**8—**

## சொகுசுப் பேருந்து

***568—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதி, சிவகங்கையிலிருந்து சென்னை உள்ளிட்ட மற்ற மாவட்டத் தலைநகர்களுக்குச் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்மூலம், சிவகங்கையிலிருந்து சென்னைக்கு தினமும் சொகுசுப் பேருந்தும், மற்ற மாவட்டத் தலைநகரங்களுக்கு சிவகங்கையிலிருந்து நேரடியாகவும், பகுதி பகுதியாகவும், பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சொகுசுப் பேருந்துகள் என்று சொன்னால், இப்போது push back மட்டும்தான் இருக்கிறது. விதவிதமான சொகுசுப் பேருந்துகள் நிறைய தனியார் போக்குவரத்தில் வந்திருக்கின்றன. அந்தமாதிரியான சொகுசுப் பேருந்துகள், நமது



போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். சிவகங்கையிலிருந்து சென்னைக்கு ஒரேயொரு பேருந்துதான் வந்து கொண்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லை. இப்போது நிறைய பயணிகள் வருவதால், கூடுதலாக அங்கேயிருந்து ஒரு சொகுசுப் பேருந்தை இயக்க வேண்டும். அதேநேரத்தில், தருமபுரி, ஈரோடு, திருவாரூர் போன்ற பல்வேறு மாவட்டத் தலைநகரங்களுக்கும் அங்கிருந்து போக்குவரத்து வசதி இல்லாத ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. எனவே, சிவகங்கை தலைநகரிலிருந்து, தமிழகத்திலே இருக்கிற அனைத்துத் தலைநகரங்களுக்கும் சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படவேண்டுமென்ற ஒரு கருத்தை வலியுறுத்தி, அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையிலிருந்து சென்னைக்கு இரண்டு சொகுசுப் பேருந்துகளும், சிவகங்கையிலிருந்து சேலத்திற்கு நான்கு semi deluxe பேருந்துகளும், அதேபோல, சிவகங்கையிலிருந்து திருப்பூருக்கு ஒரு பேருந்தும், சிவகங்கையிலிருந்து கோவைக்கு ஒன்றும், சிவகங்கையிலிருந்து வேளாங்கண்ணிக்கு ஒன்றும், சிவகங்கையிலிருந்து பழனிக்கு இரண்டும் என, சிவகங்கையிலிருந்து இத்தனை சொகுசுப் பேருந்துகள், semi deluxe பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 900. 900 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே 110 பேருந்துகள் ultra deluxe என்று, தனியாரோடு போட்டிபோடக்கூடிய அளவிற்கு புதிதாக வாங்கப்பட்டிருக்கின்றன. அவை இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 200 பேருந்துகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். விரைவிலே—அவையும் ultra deluxe—தனியார் எப்படி வைத்திருக்கிறார்களோ, அவற்றோடு போட்டிபோடக்கூடிய அளவிற்கு, அந்தப் பேருந்துகள் இயக்கப்படும். மேலும், அரசு விரைவுப் பேருந்துகளின் வழித்தடங்கள் 900 வழித்தடங்கள் என்று இருப்பதை, 1,000 வழித்தடங்களாக, இன்னும் 100 வழித்தடங்களை அதிகப்படுத்தி இயக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நிச்சயமாக, சிவகங்கையிலிருந்து தேவையான அளவிற்கு, பேருந்துகள் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒரு புகழ்பெற்ற கோவில் தலம். ஆகவே, திருவண்ணாமலையிலிருந்து மதுரை, திருப்பூர், கோவை, திருநெல்வேலி

[2006 ஆகஸ்ட் 7

போன்ற இடங்களுக்கு சொகுசுப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். இப்போது திருப்பதியிலிருந்து மட்டும் வருகின்ற வண்டிகளில்தான் இடம் இருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலைக்கு ஒரு விரைவுப் பேருந்து depot வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மறுநாள் போக்குவரத்துத் துறையினுடைய மானியம் இருக்கிறது. அதிலே—இன்னும் பல விவரங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க இருக்கிறார்கள்—அவையெல்லாம் தெரிவிக்கப்படும். திருவண்ணாமலைக்கும் அப்படியொரு நல்லது, அவர் கேட்டபடி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

முற்பகல் 10–00

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையிலேயிருந்து சென்னைக்கு வரும் சொகுசுப் பேருந்து, பக்கத்தில் இருக்கின்ற மேலூர் வழியாக வந்தால் அதிக டிக்கெட்டுகள் ஏறும். போக்குவரத்துக் கழகத்திற்கு வருவாயும் கிட்டக்கூடியவகையிலே அமையும். மேலூர் வந்துவிட்டால் N.H. Road, சென்னை ரோடு வந்து join ஆகிறது. பஸ்ஸும் மென்மையாகச் செல்வதற்கு, ரோடும் நல்ல நிலையிலே இருக்கின்ற காரணத்தால், சிவகங்கையிலேயிருந்து வருகின்ற அந்த சொகுசு bus-ஐ, மேலூர் வந்து, மேலூர் வழியாக சென்னை வருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் மதுரை போன்ற அனைத்துப் பகுதிகளிலிருந்து வருகின்ற பேருந்துகள் மேலூர் வழியாகத்தான் வந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும், முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பது, எங்கு மக்களுக்கு அவசியத் தேவையோ அங்கிருந்து பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் தேவையான இடத்திலிருந்து நிச்சயமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொள்வார்களேயானால், உரிய முறையிலே அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, பேருந்து அங்கிருந்தே இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் (திருமதி) காயத்ரி தேவி.



2006 ஆகஸ்ட் 7]

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, திண்டிவனம் வழியாகச் செல்லும் Point to point buses இங்கிருந்து சுமார் 90 கி.மீ. தொலைவிலுள்ள மதுராந்தகத்தில் நிறுத்தப்படுமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point to point என்று சொல்லுகின்றபொழுது, அதிலே ஏறுகின்ற பயணிகள் எங்குமே நிறுத்தக் கூடாது, நேரடியாக விரைவாகப் போய்ச் சேரவேண்டும் என்ற காரணத்தால்தான் அந்த வண்டியிலே ஏறுகின்றார்கள். மதுராந்தகத்திற்கு நிறையப் பேருந்துகள் அந்த வழியாக சென்று கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் என்றால் பட்டு என்று பெயர். அதைப்போல கோவில்களுக்கும் பெயர்பெற்றது. ஆனால், காஞ்சிபுரத்திற்கு ஒரு புது பஸ் இல்லை. அதனால் புது பஸ் கேட்டிருக்கிறோம், கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகக் கொடுக்கவேண்டும். திங்கட்கிழமையானால், இன்றைக்கு ஓர் ஆயிரம் பேர் நிற்கிறார்கள். ஆயிரம்பேர் குழந்தைகளையும், குட்டிகளையும் கொண்டுபோய், ஓடிஓடிப் போய் ஏறுகிறார்கள். அந்த பஸ்களில், பலம் உள்ளவர்கள் ஏறிவிடுவார்கள். பலம் இல்லாதவர்கள் நின்றுவிடுகிறார்கள். நிறையபேர் நின்றுவிடுகிறார்கள். திங்கட்கிழமையானால் சென்னைக்கு நிறைய தொழிலாளர்கள், அரசு ஊழியர்களெல்லாம் வருகின்றார்கள். அவர்கள் சரியான நேரத்தில் சென்னைக்கு வர முடியாமல் போகிறது. அதாவது 79, 76சி பஸ்கள் நிறைய விடப்படவேண்டும். அதேநேரத்திலே திருவண்ணாமலைக்கு சிறப்புப் பேருந்து பௌர்ணமி அன்று விடப்படவேண்டும். அப்புறம், நிறுத்தப்பட்டுள்ள பஸ்கள் எல்லாம் ஓடாமல் இருக்கின்றன. 2, 3 பேருந்துகளைத்தான் விட்டிருக்கிறார்கள். அரசு பஸ்களும், மினி பஸ்களும், தனியார் பஸ்களும் நிறுத்தப்பட்டுள்ளன. அனைத்து பஸ்களும் விடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே சீக்கிரமாக விடப்படுமா என்று அன்போடு அறிய விரும்புகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

[2006 ஆகஸ்ட் 7

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது, அவர்கள் எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகள் வேண்டுமென்று எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அது அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும், இரண்டு அல்லது மூன்று வாரங்களிலே அவர்களுக்கு, காஞ்சிபுரத்திலிருந்து அதிகமான பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுவதிலே பலவற்றை இப்பொழுது புதிய முறையிலே Ultra Deluxe என்ற அடிப்படையிலே விடப்படுவது மிகப்பெரிய வரவேற்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற அரசு விரைவுப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகள் 36 இருக்கைகளோடு இருக்கிறபொழுதுதான் அது வசதியாக இருந்தது. அதை 40 இருக்கைகளாக மாற்றியதனாலே, 4 இருக்கைகள் கூடுதலாகப்பெற்று வருமானம் வருகிறது என்பது உண்மையாக இருந்தால்கூட, 4 இருக்கைகளைக் கூடுதலாக்கிய காரணத்தினாலே, 36 இருக்கைகளிலே அமரக்கூடியவர்களும் அவஸ்தைப்பட்டு வந்துசேரவேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்படுகிறது. ஆகவே, சொகுசுப் பேருந்துகளை, விரைவுப் பேருந்துகளை, 36 இருக்கைகள் மட்டுமே இருக்கச் செய்வதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது புதிதாகக் கட்டப்படுகின்ற அனைத்துப் பேருந்துகளும் 36 இருக்கைகள் கொண்ட பேருந்துகளாகத்தான் கட்டப்படுகின்றன. மொத்தம் 310 பேருந்துகள் அடுத்த மாதத்திலிருந்து 36 இருக்கைகள் கொண்ட பேருந்துகளாகவே விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் மக்கள் வாழும் கரூர் நகரில் தினம் ஒரு இலட்சம் மக்கள் டெக்ஸ்டைல், கொசுவலை, பஸ்பாடி போன்ற தொழில்களுக்கு வந்து செல்கிறார்கள். கரூர் நகரப் பேருந்து நிலையம், கரூர் நகரின் மத்தியிலே அமைந்துள்ளது. அந்தப் பேருந்து நிலையத்தைப்



2006 ஆகஸ்ட் 7]

புறநகர்ப் பகுதிக்கு மாற்றவேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கரூர் நகரில் உள்ள தற்போதைய பேருந்து நிலையத்தை கரூர் நகரப் பேருந்து நிலையமாக மாற்றி, புறநகர்ப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**9—**

**தனி மாவட்டம்**

***378—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோவை மாவட்டம் மக்கள் தொகையிலும், நிலப்பரப்பு அளவிலும், சட்டமன்றத் தொகுதி எண்ணிக்கையிலும் தமிழகத்தில் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அதை இரண்டு மாவட்டங்களாக்கினால் நிர்வாக ரீதியான பணிகளுக்கு உதவி செய்யும் என்ற முறையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன். அமைச்சர் அவர்கள் அதற்கான வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, பொருத்தமான நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இங்கே ஒரு கேள்வியை நான்

கேட்க விரும்புகிறேன். பொதுவாக, மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கு அரசு என்ன அளவுகோல் வைத்திருக்கிறது? அதற்கு வழிகாட்டும் நெறிமுறைகள் ஏதாவது இருக்கின்றவா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம், மாவட்டம் திருப்பூர் பெயரால் அமைய வேண்டுமென்பதைவிட, அந்த மாவட்டத்திற்கு திருப்பூர் தலைமையிடமாக ஆக வேண்டுமென்பதுதான் முக்கியமாக கருதப்படுவதாகக் கருதுகின்றேன். மாவட்டம் ஒன்று அமையுமேயானால், அப்பொழுது திருப்பூர் தலைமையிடமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் பின்னலாடை உற்பத்தியில் முதல் இடத்திலேயும், ஏற்றுமதியில் இந்தியாவிற்கு அதிக அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த நகரம். அந்த நகரத்தை மாநகராட்சியாக அறிவிக்க வேண்டும், அந்த மாவட்டம் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமைய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வலியுறுத்தி வருகிறோம். இதற்கிடையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியாலும், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஒத்துழைப்போடும் இப்போது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். ஆனால், கோவை மாவட்டம், 14 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய மாவட்டம். அதை இரண்டாகப் பிரிப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அதேவேளையில், இது வளர்ந்து வரும் நகரம். ஏற்றுமதிக்கு உதவிடும் நகரம் என்ற காரணத்தினால், உலக நாடுகளிலிருந்து பின்னலாடை பெறக்கூடிய மிகப் பெரிய முதலாளிகள் எல்லாம் வரக்கூடிய முக்கியத்துவம் இதற்கு இருக்கின்ற காரணத்தினாலே, இந்த அவசிய முக்கியத்துவத் தேவையின் அடிப்படையில் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு இங்கே ஒரு மாவட்டம் அமைய வேண்டும். அவ்வாறு அமைவதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேவேளையில் இன்று பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களை, 6 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கிய ஒரு மாவட்டமாக பிரிப்பது, நிர்வாக வளர்ச்சிக்கும், மக்கள் நலத் திட்ட மேம்பாட்டிற்கும் உகந்ததாக இருக்கும் என்ற அடிப்படையிலே ஒரு கொள்கை முடிவை எடுத்து, மாவட்டங்களைப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மணி அவர்கள் பெரிய மாவட்டங்களையெல்லாம் ஆங்காங்கே 6 அல்லது 7 தொகுதிகள் அடங்கிய சிறு, சிறு மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்து, திருப்பூர் தனி மாவட்டமாக ஆக வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார். பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாக அமையும் நேரத்தில் திருப்பூர் பிரச்சினையும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. க. சுந்தர், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**10—**

## தரம் உயர்த்துதல்

***621—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தை தாலுகாவாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வாலாஜாபாத்தை தாலுக்காவாக உயர்த்துகின்ற எண்ணம் அரசிடம் இல்லை.

[2006 ஆகஸ்ட் 7

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், பரப்பளவில் மிகப் பெரிய ஒன்றியம். 61 ஊராட்சிகளும், ஒரு பேரூராட்சியும் உள்ளடக்கியது. எனவே, அதை இரண்டாகப் பிரித்தால் நலமாக இருக்கும். ஏனென்று சொன்னால், காஞ்சிபுரத்தைச் சுற்றிச் செல்வதற்கு மக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற நிலைமையிலே, அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வாலாஜாபாத் ஒன்றியத்தை வட்டமாக உயர்த்த முடியுமா என்று கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். ஒரு ஒன்றியத்தை வட்டமாக நிச்சயமாக அரசு உயர்த்துவதற்கு வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலனையே பெரிதாகக் கருதுகின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் சென்றமுறை புதிதாக வருவாய் வட்டங்களை உருவாக்கினார்கள். ஏற்கெனவே உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், ஒரு வருவாய் வட்டமாக இருக்கின்றது. எனவே, இதையும் தனியாக வருவாய் வட்டமாகப் பிரித்தால் மக்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு, அதாவது, சிரமங்கள் குறையக்கூடிய நிலைமை இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதனை வருவாய் வட்டமாகப் பிரிப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு நாட்களுக்கு முன்னாலே வட்டங்கள் பிரிப்பதுபற்றி விரிவான விளக்கங்களை அளித்துள்ளேன். தேர்தல் ஆணையம் தற்காலிகமாக நம்முடைய எல்லை வரையறை ஆணையத்தின் பணிகள் நடக்கின்ற காரணத்தினால் வட்டங்கள் பிரிப்பதைத் தற்சமயம் தடை செய்து வைத்திருக்கின்றது. அந்தத் தடை நீங்கிய உடனேயே அரசு இதுபற்றிப் பரிசீலிக்கும்.



2006 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, தமிழகத்து முதலமைச்சருடைய குருகுலம். கடந்த காலங்களிலே தந்தை பெரியாருடைய தொண்டனாக இருந்து, குடியரசு பத்திரிகையில் தலைவர் கலைஞர் அவர்கள் மக்களுக்குச் செய்திகளைச் சேகரித்த குருகுலத்தை மாநகராட்சியாக ஆக்குகிற திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா? கடந்தமுறை பரிசீலனையில் இருந்து, வருவாய் குறைவாக இருந்த காரணத்தாலே ஈரோடு மாநகராட்சியாக ஆக்கப்படவில்லை. எனவே, ஈரோட்டை மாநகராட்சியாக ஆக்கி, தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய குருகுலத்திற்கு ஒரு மரியாதையைப் பெற்றுத் தருவார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே அடங்கியிருக்கிற ஜமுனாமரத்தூர் ஒன்றியத்திலே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காகவும், அங்கே படிக்கின்ற மாணவ, மாணவியர்களுடைய எதிர்கால நலனுக்காகவும், அவர்களுடைய ஜாதிச் சான்றிதழ் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும், கோட்டாட்சித் தலைவர் அவர்களிடத்திலேயும் பலமுறை மனுக்கள் வழங்கியும் இதுவரை அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்கின்றீர்கள். மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டு கேளுங்கள். (குறுக்கீடு) மூலக் கேள்வியையொட்டிக் கேளுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட கேள்விதான் இது. அந்த மக்களுடைய நலனுக்காக, அந்த ஜமுனாமரத்தூர் பகுதியை தனி வட்டமாக, தனி தாலூகாவாக மாற்றுவதற்கான எண்ணம் இந்த அரசிடம் உள்ளதா என்பதைப் பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ்கள் வழங்குவதற்காக ஒரு வட்டம் நிச்சயமாக உருவாக்கப்பட முடியாது. அதற்கு எல்லை, மக்கள் தொகை, இவை எல்லாம் கணக்கில் கொண்டுதான் உருவாக்க முடியும். எனவே, எல்லை வரையறை ஆணையத்தினுடைய அந்தப் பணிகள் முடிந்தவுடனேதான் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டங்களை, மாவட்டங்களைப் பிரிப்பது குறித்த இந்தக் கேள்விகளிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, இப்போது உத்தரப்பிரதேச மாநிலத்திலே நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளிட்டவை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுதான் எல்லாவிதமான நிர்வாக வசதிகளுக்கும் சிறந்ததாக இருக்கும். இப்போதுகூட நமது தமிழகத்திலே ஒரு நாடாளுமன்றத் தொகுதி என்பது இரண்டு மாவட்டங்களிலே வரக்கூடிய அளவுக்குத்தான் பெரும்பாலும் இருக்கிறது. ஆகவே, இது நிர்வாக ரீதியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு பணிகளைச் செய்வதற்கும் அல்லது செயல்படுவதற்கும் இடையூறாக இருக்கிற காரணத்தினாலே, நமது தமிழகத்திலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அடிப்படையிலே மாவட்டங்களைப் பிரிப்பதற்காக, இப்போது நமது மாநிலத்தில் 39 நாடாளுமன்ற தொகுதிகள் இருக்கின்றன என்றால், அதை 39 மாவட்டங்களாகப் பிரிப்பதற்குரிய முயற்சியை நமது அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்ன கருத்து சிந்திக்கத்தக்க கருத்து. செயலாற்றும் காலம் விரைவிலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) திருப்பத்தூரில் விடுதலைப் புலிகளை ஆதரித்து புரட்சிகர இளைஞர் முன்னணி பேரணி நடத்தியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள், சொல்லுங்கள்.

***திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1–8–2006 ஆம் நாள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் விடுதலைப் புலிகளை ஆதரித்து புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பு என்கிற ஓர் அமைப்பு, நூற்றுக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டு ஒரு பேரணியை திருப்பத்தூர் நகரத்தில் நடத்தி இருக்கிறார்கள். அவர்கள் நடத்துகிறபோது விடுதலைப் புலிகள், பொதுவாக அவர்கள்மீது விதிக்கப்பட்டிருக்கிற அந்தத் தடையை நீக்கவேண்டுமென்று கோரியும், அதேபோல தடை செய்யப்பட்ட அந்த இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்தும், கோஷங்களை எழுப்பி, திருப்பத்தூர் பஸ் ஸ்டாண்டில் அவர்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தினையும் நடத்தி, பிறகு ஒரு பொதுக் கூட்டத்தையும் நடத்தி இருக்கிறார்கள். அப்படி நடத்துகிறபோது அவர்கள், அந்த விடுதலைப் புலிகள்மீது இருக்கக்கூடிய தடையை நீக்கவில்லை என்று சொன்னால், இந்தியா துண்டு துண்டாக நிச்சயமாக சிதறுண்டு போகும் என்றெல்லாம் அவர்கள் தங்களுடைய கோஷத்தை எழுப்பி, ஒரு பதற்றத்தை உருவாக்கி இருக்கிறார்கள்.

பல கட்சிகள், தமிழகத்தைச் சார்ந்திருக்கிற தமிழர்கள், முழுமையாக ஈழத் தமிழர்கள்—பொதுவாக ஈழத்திலே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஒரு தனி மாநிலம், சுதந்திரம் வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் கிடையாது. ஆனால், எல்லா கட்சிகளும் முன்பு இதே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்தவைதான். ஆனால், அந்த ஆதரவு என்பது பொதுவாக வரலாற்றிலே கி.மு., கி.பி., என்று வருகிறபோது, இங்கே கி.மு., கி.பி., என்பது போல, தமிழகத்தின் வரலாற்றிலே எங்களுடைய இணையில்லா தலைவன் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலைக்குப் பின்னால் பல இயக்கங்கள் அதற்கு கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஆதரவை அவர்கள் விலக்கிக்கொண்டனர்.

அந்த விடுதலைப் புலிகளினுடைய தலைவராக இருக்கிற பிரபாகரன் அவர்கள், இப்பொழுதும் நம்முடைய தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு வழக்கிலே இன்றும் தேடப்பட்டு வருகிற N.B.W.—Non Bailable Warrant இன்னும் அவருக்கு எதிராக இருந்துகொண்டிருக்கிறது. இன்றுகூட நான் வேலூரிலே இருந்து வருகிறபோது பார்த்தால் ஓச்சேரி பக்கத்திலே ஒரு பம்ப் செட்டிலே, 'தமிழகத்து பிரபாகரனே' என்று சில அரசியல் கட்சித் தலைவர்களையெல்லாம் வர்ணித்து எழுதப்பட்டிருக்கக்கூடிய வாசகங்கள் இன்றும் இருக்கின்றன. தேடப்பட்டு வருகிற, ராஜீவ் காந்தி படுகொலையில் முதல் குற்றவாளியாக இருக்கிற பிரபாகரனை ஆதரித்து, சில தலைவர்கள் இப்படியெல்லாம் பெயரைப் போட்டு விளம்பரம் போட்டுக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், அவர்கள் வெளிப்படையாகவே இன்று திருப்பத்தூர் நகரத்திலே விடுதலைப் புலிகளை ஆதரித்து, இப்படி ஒரு புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பு என்று வைத்துக்கொண்டு, அவர்கள் ஊர்வலம் நடத்துவார்கள் என்று சொன்னால், ஓர் அமைதிப் பூங்காவாக இருந்துகொண்டிருக்கிற தமிழகத்திலே இனி இவர்கள் விஷ வித்துக்களை மீண்டும் விதைத்து ஏதாவது பிரச்சினைகளை உருவாக்க இருக்கிறார்களோ என்ற ஐயம் எங்களுக்கு இருக்கிறது.

சொல்லப்போனால், இங்கே இப்படிப்பட்ட இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், இந்தியாவே துண்டு துண்டாக மாறும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு, இப்படி ஆங்காங்கே ஊர்வலத்தை நடத்துவதற்கு எப்படி அவர்களுக்கு போலீஸ் அனுமதி கிடைத்தது? நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், முதலிலே அவர்கள் ஏதாவது இப்படி அனுமதியைக் கோரினார்களா? அனுமதியைக் கோரி இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதா? இப்படி நாட்டினுடைய ஒற்றுமைக்கு, அதேபோல தேசப் பாதுகாப்பிற்கு எதிராக இப்படி அவர்கள் கோஷமிட்டு போகிறபோது, அவர்கள்மீது வழக்கு



பதியப்பட்டிருக்கிறதா? அவர்கள் கைது செய்யப்படுவார்களா? என்றெல்லாம் நான் அறிய விரும்புகிறேன்.

தமிழகம் ஓர் அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும். அதற்கு நிச்சயமாக விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறவர்கள், வெளிப்படையாக தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்கு, 15 ஆண்டுகளாக இப்படிப்பட்ட ஊர்வலத்திற்கு அனுமதி கிடையாது. இப்படிப்பட்ட கோஷங்கள் இல்லை. தமிழகம் அமைதியாக இருந்துகொண்டிருக்கிறது. அமைதியாக இருக்கிற தமிழகத்திலே இப்படி ஒரு பிரச்சினையை உருவாக்குவதிலே, இதிலே யாரெல்லாம் கலந்துகொண்டார்கள் என்று பார்த்தால், இன்னும் நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. மறுமலர்ச்சி தி.மு.க.–வினுடைய நகரத் தலைவர்கூட இந்த ஊர்வலத்திலே கலந்துகொண்டு, அவரும் கலந்துகொண்டார் என்றெல்லாம் வருகிறது. அரசியல் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், இப்படி தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து பேரணியை நடத்துவார்கள் என்று சொன்னால், இது எங்கே போய் முடியும்?

தமிழகத்தினுடைய முதல்வர் உருக்கமாக இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஒரு கருத்தை இந்த மன்றத்திலே பதிய வைத்தார்கள். அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களோடு இவர்கள் உரையாடியது குறித்தும், அவர்கள் உரையாடியபோது அவர்கள் நினைத்த ஒன்று நடந்திருக்குமேயானால், இந்தப் படுகொலை வந்திருக்காது. தமிழகத்திலே இப்படிப்பட்ட நிலை—'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்கிற ஒரு சொல் மாறி, இப்பொழுது 'தமிழன் என்று சொல்லடா, தலைகுனிந்து நில்லடா' என்கிற ஒரு நிலையில் ஸ்ரீபெரும்புதூரிலே எங்களுடைய தலைவன், அருமைத் தலைவன் ராஜீவ் காந்தி அவர்களுடைய படுகொலை நிகழ்ந்துவிட்டது.

இப்படி உருக்கமாக தலைவர் அவர்கள் பேசிய பேச்சைக் கேட்கிறபோது, ஏனென்றால், காந்தி பிறந்த நாடு, அகிம்சை வழியிலே சுதந்திரத்தைப் பெற்ற நாடு நம்முடைய நாடு. இப்படிப்பட்ட நாட்டில் இங்கே இவர்கள், தீவிரவாதத்திற்கு வித்திட்டு, இப்படி கோஷங்களை எழுப்பி, ஊர்வலத்தை நடத்தக்கூடிய நிகழ்வுகளை இனி தமிழகத்திலே இரும்புக்கரம் கொண்டு, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், தம்முடைய உள் துறையை வைத்து அவர்களை அடக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை தமிழகத்திலே உருவாக்குவாரா, அமைதிப் பூங்காவாகத் தமிழகம் தொடர்ந்து இருப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்தவர்கள்" எனப்படுவோர் 31–7–2006 ஆம் தேதியன்று 'தமிழ் ஈழ மக்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறி அரசைக் கண்டித்து' என்ற தலைப்பில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்த புரட்சிகர இளைஞர் முன்னணி, வேலூர் மாவட்ட அமைப்பாளர் அனந்தகிருஷ்ணன் என்பவருடைய தலைமையில் அனுமதி கோரி இருந்தார்கள். ஆனால், காவல் துறை, திருப்பத்தூர் மெயின் ரோட்டில் பேரணி வராமல், நகரின் உட்புறம் சேலம் மற்றும் கிருஷ்ணகிரி கூட்டுச் சாலையில் பேரணி ஆரம்பித்து, வடக்கு முத்தப்பர் தெரு, சின்னக்கடை தெரு வழியாக ஊர்வலமாக வி.சி.எம். தெரு வந்து ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி அளித்தனர்.

இதைத் தொடர்ந்து சுமார் 150 பெண்கள் உள்பட 400 பேர் அனந்த கிருஷ்ணன் தலைமையில் 31–7–2006 ஆம் தேதி மாலை 4 மணிக்கு பேரணியும், 5 முதல் 7–15 மணி வரை ஆர்ப்பாட்டமும் நடத்தினார்கள். இதில், புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டார்கள். ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து எந்த பதற்ற நிலையும் வேலூர் மாவட்டத்தில் இல்லை எனவும், நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என்பதாக மாவட்ட அதிகாரிகள் எனக்கு எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, இந்த அளவோடு அனுதாபத்தை, நம்முடைய மன நிலையை, ஈழத்திலே உள்ளவர்களுக்கு, சிங்களவர்களுக்கு, அதேபோல இந்திய அரசுக்கு வெளிப்படுத்துகின்ற வகையில் இந்த ஆர்ப்பாட்டங்களோ, கிளர்ச்சிகளோ அமையுமேயானால், அது ஏற்கத்தக்கதேதான். அவற்றை எதிர்க்கத்தக்கவை என்று நாம் கொள்ள முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தமிழர்கள் பக்கத்திலே கொல்லப்படுவது, சீரழிக்கப்படுவது தாங்கிக்கொள்ளக்கூடியது அல்ல. ஆனால், அதற்குப் பரிகாரம் என்ன என்பதை நான் அன்றைக்குச் சொன்னதை நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே திரும்பச் சொன்னார்கள், அதையும் மனதிலே நாம் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். வன்முறைக்கு



வன்முறை பதிலாகாது, அதையும் நினைவிலே கொள்ளவேண்டும். எனவே, இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள், தங்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்த, ஒரு அனுதாபத்தை வெளிப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட ஒரு பேரணி ஊர்வலமே தவிர, வேறல்ல. நிலைமை வேறுமாதிரி திரும்புமேயானால், அதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, இந்தியாவிற்கு விரோதமாகவோ, இந்திய ஒற்றுமைக்கு, இந்திய இறையாண்மைக்கு விரோதமாகவோ யார் செயல்பட்டாலும், அவர்களை இந்த அரசு சும்மா விடாது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றை ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டும்; விடுதலைப்புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது, தடை விதிக்கப்பட்டிருப்பது சரியா, அல்லவா என்பது விவாதத்திற்கு உரியது என்றாலும்கூட, தடை இருக்கிற வரையில் அதற்கு நாம் அடங்கித்தான் செல்ல வேண்டும். அதை மீறிச் செல்வோம் என்றால், மீறினால் ஏற்படுகின்ற விளைவுகளையும் ஏற்றுத்தான் தீரவேண்டும் என்பதை இங்கே நண்பர் ஞானசேகரனுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

முற்பகல் 10–25

## 3. கவன ஈர்ப்பு

### திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கி. ஆறுமுகம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதியிலே உள்ள திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வாரம் ஒருமுறை குடிநீர் வழங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[2006 ஆகஸ்ட் 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வல்லிபுரம் பாலாறு குடிநீர்த் திட்டத்தின்கீழ் 7.67 இலட்சம் லிட்டரும், உள்ளூர் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 5.12 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 12.79 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது பாலாறு நீர்ப்பிடிப்புப் பகுதியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் மூன்று நாட்களுக்கு ஒருமுறை வல்லிபுரம் பாலாறு குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தினசரி உள்ளூர் குடிநீர்த் திட்டம் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. திருக்கழுக்குன்றம் பேரூராட்சிப் பகுதியில் வழங்கப்படும் குடிநீர் அளவினை கூடுதலாக்கும்பொருட்டு புதிய திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

3. இத்திட்டத்தினால் கூடுதலாக 4.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படும்பட்சத்தில் பொது மக்களுக்குக் குறைவின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே வாரத்திற்கு மூன்று முறை தண்ணீர் கொடுப்பதாகவும், பாலாற்றுப் படுகையிலே இருந்து வருகின்ற நீர், அங்கே நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் இந்த நிலை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, கடந்த முறை இந்தச் சட்டமன்றத்தில் இதுகுறித்து, பாலாற்றுப் படுகையிலே மணல் எடுக்கின்ற விதிமுறைகள் மீறப்படுகிறது, 20 அடி, 25 அடி ஆழத்திற்கு மேலாக அரசே நடத்துகின்ற அந்தக் குவாரிகளிலே மணல் அள்ளப்பட்டதையெல்லாம் சொன்னோம். அது கடந்த ஆட்சியிலே கேட்கப்படவில்லை.



2006 ஆகஸ்ட் 7] [திரு. கி. ஆறுமுகம்]

அதனால், நீர் குறைந்துள்ளதை அரசே இப்போது அறிவித்திருக்கிறது. இதையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, எங்களுடைய பகுதியில் இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அந்த நகரம் ஏறக்குறைய 50 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பேரூராட்சியாகும். நெரிசல் மிகுந்த நகரமாக இருந்துகொண்டிருக்கிறது. குடிநீர் இப்போது வாரத்திற்கு ஒரு முறைதான் பாலாற்றிலிருந்து வழங்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எஞ்சியிருக்கின்ற தண்ணீர் உள்ளூரில் இருக்கின்ற குழாய் மூலம் ஒருசில நாட்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசாங்கம், கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற நம்முடைய அரசாங்கம், அதுவும் குறிப்பாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், தளபதி அவர்கள் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற துறையிலே எங்களுடைய பேரூராட்சிக்கு, தினமும் குடிநீர் பாலாற்றிலிருந்து கிடைப்பதற்கு வழிவகை மேற்கொள்வதற்குப் புதிய திட்டம் தீட்டியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அங்கிருக்கிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினுடைய கொள்ளளவு மிகக் குறைவான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதனால், அங்கே மழைக்காலத்தில்கூட, தினமும் தண்ணீர் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்தால்தான் அங்கே தினமும் தண்ணீர் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதற்கும் நம்முடைய அரசாங்கம் உடனடியாக கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைக்குமா என்பதையும தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, 23,716 ஆகும். ஆனால், தற்போது மக்கள் தொகை, 27,000 ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பேரூராட்சிகளில் நபர் ஒருவருக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையாகும். இந்தப் பேரூராட்சிக்கு, திருக்கழுக்குன்றம் குடிநீர்த் திட்டம்மூலம், 7.67 இலட்சம் லிட்டர் பாலாற்றிலிருந்து வல்லிபுரம் நீரேற்று நிலையத்தின் மூலம் பெறப்பட்டும், அதேபோல திருக்கழுக்குன்றத்தில் இருக்கக்கூடிய உள்ளூர் குடிநீர்த் திட்டம் மூலமாக 5.12 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டும், ஆக மொத்தம் 12.79 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. பாலாற்று நீர்பிடிப்புப் பகுதியில் வல்லிபுரத்திலிருந்து குடிநீர் விநியோகம்

செய்யும் நீர் உறிஞ்சும் கிணறு மற்றும் உறை கிணறு ஆகியவற்றில் நீர் சுரப்பு குறைந்துள்ளதால் வல்லிபுரம் பாலாற்று குடிநீர்த் திட்டம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உள்ளூர் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தினசரி 5.12 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும், திருக்கழுக்குன்றத்திலே 120 இந்தியா மார்க்–2 பம்புகள் 37 திறந்தவெளிக் கிணறுகள்மூலம் தற்போது தண்ணீர் எடுத்து, பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது திருக்கழுக்குன்றம் ஏரியில் உள்ள கிணற்றிலிருந்து தினசரி 6 இலட்சம் லிட்டர் தண்ணீர் எடுத்து பேரூராட்சிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்பேரூராட்சியிலே 21 இடங்களில் 8.4 இலட்சம் ரூபாய் செலவிலே இந்தியா மார்க்–2 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த முயற்சி நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியினுடைய குடிநீர்த் தேவை முழுவதும் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10–30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க...... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject–க்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.(குறுக்கீடு) சரி, திரு. தி. வேல்முருகன்.

## 2. தகவல் கோரல்– தொடர்ச்சி

### (ஆ) சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பில் மின்தூக்கி அடிக்கடி பழுதாகிவிடுதல்

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசினர் தோட்ட வளாகத்திலே இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குகின்ற அந்தக் குடியிருப்பு விடுதிகளில், அதுவும் குறிப்பாக D–5 D விடுதியில் நான் ஐந்தாவது தளத்தில் தங்கி இருக்கிறேன். அங்கே அண்ணன் சிவபுண்ணியம் அவர்களும், அண்ணன் ஆறுமுகம் போன்றவர்களும் இருக்கிறோம். நாங்கள் சட்டப் பேரவைக் கூடிய நாளிலிருந்து, வருவதற்கு கிளம்புகிற போதெல்லாம், அங்கே இருக்கின்ற மின் தூக்கி அடிக்கடி பழுது ஏற்பட்டு, நாங்கள் அதிலே மாட்டிக்கொள்கிறோம். நான் மட்டும் 5 முறை மாட்டிக் கொண்டு தவித்திருக்கின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதை, பிறகு வந்து பேசுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். (குறுக்கீடு) பிறகு வாருங்கள். பிறகு அறையிலே வந்து சொல்லுங்கள். நான் ஏற்பாடு பண்ணச் சொல்கிறேன். பிறகு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மின் தூக்கியில் வேல்முருகன் மாத்திரம் வந்தால் பரவாயில்லை. சிவபுண்ணியமும் வருவதால் ஏதாவது சிரமம் ஏற்பட்டு இருக்கலாம். (சிரிப்பு)

## 4. விதி 110—ன்கீழ் அறிக்கை

### கிருஷ்ணா நதிநீர் பெறுவது மற்றும் பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் தொடர்பாக ஆந்திர அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை – மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகருக்கு தற்போது நாளொன்றுக்கு 640 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகளில் தற்போது சுமார் 1.5 டி.எம்சி. தண்ணீர் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணா நதிநீரை உடனடியாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஏரிகளில் உள்ள தண்ணீரின் அளவைக் கருத்தில் கொண்டு, தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடக் கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு 8–7–2006 அன்று கடிதம் எழுதி இருந்தார்கள். இதைத் தொடர்ந்து 24–7–2006 அன்று ஆந்திர அரசின் தலைமைச் செயலாளரின் தலைமையில் அதிகாரிகள் குழு சென்னைக்கு வருகை புரிந்து தமிழக தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் இப்பொருள் பற்றி கலந்தாலோசித்தனர்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் பெறுவது குறித்தும், பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதாக வந்துள்ள செய்திகள் குறித்தும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த என்னையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் ஹைதராபாத் சென்று வரும்படி அறிவுறுத்தினார்கள்.

5–8–2006 சனிக்கிழமை அன்று நானும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். எங்களுடன் பொதுப் பணித் துறை மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர்களும் மற்ற அதிகாரிகளும் உடன் இருந்தனர். ஆந்திர மாநிலத்தின் சார்பில் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்களும் மற்ற உயர் அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் சென்னைக்குக் குடிநீர் நிலைகளிலுள்ள தண்ணீரின் இருப்பினை கருத்தில் கொண்டு உடனடியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு கேட்டுக் கொண்டோம். மேலும், கண்டலேறு மற்றும் சோமசீலா அணைகளின் கொள்ளளவை முழு அளவிற்கு உயர்த்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், நீர்வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடும் பணிகளை விரைவுபடுத்தி முடித்திடுமாறும், ஸ்ரீசைலம் அணையிலிருந்து அதிகமான அளவு நீரினை சோமசீலா அணைக்குக் கொண்டு செல்லத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறும், தெலுங்கு கங்கை திட்ட நடைமுறை விதிகளை ஓராண்டு காலத்திற்குள் தயார் செய்து முடித்திடுமாறும் கேட்டுக் கொண்டோம்.

மேலும், பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதற்கான பணிகளைத் துவங்கி உள்ளதாக வந்துள்ள செய்திகளை மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதுபற்றிய விவரங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டோம்.



மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், குப்பம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யவும், அப்பகுதியில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்வதற்கும் பாலாற்றின் குறுக்கே சிறிய அளவிலான அணை கட்ட தற்போது ஆய்வுப் பணிகள் நடக்கிறதே தவிர, எந்தவித அரசு ஆணையோ நிதி ஒதுக்கீடோ செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் சார்பில், நாங்கள், பாலாற்றின் குறுக்கே கட்டப்படும் எந்த ஒரு தடுப்பு அமைப்பும் தமிழகத்தின் 3 மாவட்டங்களிலுள்ள குடிநீர் மற்றும் பாசன வசதிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று எடுத்துக் கூறினோம். மேலும், பாலாற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல்படுவதையும் கருத்தில் கொண்டு பாலாற்றின் குறுக்கே அணை கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு செயல்படுத்துவது தமிழக மக்களின் நலனை பாதிக்கும் என்று வலியுறுத்திக் கூறினோம். மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தின் நலனுக்கு எதிராகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் ஆந்திர அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காது எனவும், திட்டமிடப்படும் தடுப்பணை சம்பந்தமான விவரங்களை தமிழக அரசிடம் முன்கூட்டி அளிப்பதாகவும், நமது கருத்தை அறிந்த பின்பே மேல் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். நாங்கள், பாலாற்றின் குறுக்கே கட்ட உத்தேசித்துள்ள தடுப்பணைத் திட்டத்தைக் கைவிடுமாறு மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளோம். இது குறித்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் மேற்கொண்டு பேச உள்ளார்கள்.

முற்பகல் 10–35

சென்னைக்குக் குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் நமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்கள் இந்த மாதம் 15 ஆம் தேதி முதலே கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து நமது எல்லைக்கு வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து சேரும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) தேவையான நீரைத் திறந்துவிட உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆந்திர அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே பாலாற்றினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்களின் நலனையும்,

சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அவற்றின் நேர் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களுக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

| பல்கலைக்கழகம் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அழகப்பா பல்கலைக்கழகம் | 1 |
| அண்ணா பல்கலைக்கழகம் | 1 |
| அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 3 |
| பாரதியார் பல்கலைக்கழகம் | 2 |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 2 |
| தமிழ்நாடு டாக்டர் எம்ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் | 2 |
| சென்னைப் பல்கலைக்கழகம் | 6 |
| மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் | 4 |
| மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 2 |



| | |
|---|---|
| தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 1 |
| தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 1 |
| தமிழ்ப் பல்கலைக்கழகம் | 2 |
| பெரியார் பல்கலைக்கழகம் | 2 |
| திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 2 |

மேற்குறிப்பிடப்பெற்ற பல்கலைக்கழகங்களில் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று உறுப்பினர்களின் பதவிக் காலம் 5-12-2007 வரை ஆகும். மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 9-8-2006 (புதன்கிழமை) அன்று நண்பகல் 12-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு மனுக்கள் 9-8-2006 அன்று பிற்பகல் 4-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10-8-2006 அன்று பிற்பகல் 3-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பு மனுக்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4638, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத்தை உயர்த்தி தரமான உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9380, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 722, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதி, நலக்கூடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் தங்கும் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2500, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் நலன் கருதி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் தொடங்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"

(முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3676, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4051, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4580, திரு. தி.க. ராஜா.

***திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கோட்டை தெருவில் சிறுபான்மை மக்களுக்கு மத நல்லிணக்க சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5200, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், நாச்சிக்குளம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாணவ மாணவியர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 962, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மணலூர்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7402, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மானியத்துடன் தொழில் தொடங்க கடன் கேட்டு, மேட்டூர் தொகுதியில் விண்ணப்பித்துள்ள வர்களுக்குக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.276,67,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,19,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9070, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரணமல்லூர் தொகுதியில் பெரிய கொழப்பலூரில் ஆதி திராவிடர் மாணவர்கள் பயனடையும் வகையில் ஆதிதிராவிட மாணவர் விடுதி உள்ளது. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக ஒரு விடுதி அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2007, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாகப் பிரிவினை பதிவுக்கு முத்திரைத் தாள் கட்டணம் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2102, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போலி முத்திரைத் தாள் புழங்குவதை அறவே தடுக்க அரசே சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரு கவுண்டர் திறந்து பத்திரத்திற்கான

கட்டணத்தை வசூல் செய்யவும், stamp vendor–களை இனி பத்திரம் விற்க தடை விதிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக் வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3630, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டியில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3155, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி நகரில் இயங்கிவரக்கூடிய சார் பதிவாளர் அலுவலகத்தைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3899, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரப் பதிவுக் கட்டணம் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4059, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4192, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "20 சென்டிற்கு குறைவான விவசாய நிலங்கள் கிரயம் (பதிவு) செய்யும்போது சதுர அடி கணக்குப் போட்டு, கூடுதல் மதிப்பு போட்டு, பத்திரப் பதிவு செய்யப்படுகிறது. எனவே, விவசாய நிலமாக இருந்தால் நிலத்தின் தன்மை அறிந்து, சதுர அடி கணக்கிடாமல், விவசாய நில மதிப்பீட்டில் கணக்கிட்டு, பத்திரப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5145, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதி, மேலநீலிதநல்லூர் சார் பதிவாளர் அலுவலகம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை மாற்றி புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4818, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூரில் மிகவும் குறுகலான இடத்தில் இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9197, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சார் பதிவாளர்கள் அலுவலகங்களில் பத்திரம் பதியப்படும்போது பட்டா மாறுதலுக்கு விற்பவரிடமும், வாங்குபவரிடமும் உரிய ஆவணத்தில் கையொப்பம் பெறப்படுகிறது. ஆனால், அவை உரிய வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதில்லை என்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8308, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் உள்ள பதிவுத் துறை அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8479, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதிக்குட்பட்ட திங்களூர், சார் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தமாகப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8877, திரு. சி.சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டையில் பதிவுத் துறை அலுவலகம் மிகப் பழமையாக உள்ளதைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8258, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை போன்ற பேரூராட்சிகளுக்குட்பட்ட நிலங்களுக்கு முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8831, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாய நிலங்களுக்கு சந்தை மதிப்பை சரியாக, முறையாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9209, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எனது தொகுதிக்குட்பட்ட மாவட்ட பத்திரப் பதிவுத் துறை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகத்திலேயே உள்ளது. பதிவுத் துறைக்கென்று ஓர் இடம் ஒதுக்கி புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5126, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி பத்திரப் பதிவு அலுவலகம், ஆரணி பத்திரப் பதிவு அலுவலகத்தில் பத்திரப் பதிவு செய்ய வரும் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து முத்திரைத் தாள்களும் தங்குதடையின்றி கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5082, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு கிராமத்தில் சார் பதிவாளர் அலுவலகம் புதிதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2454, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1576, திரு. இ. மகேந்திரன்.



**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சிப் பகுதியில் உள்ள பதிவுத் துறை அலுவலகத்திற்கு நவீன முறையில் பதிவுத் துறை அலுவலகம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2376, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போலி முத்திரைத் தாள் புழக்கத்தைத் தடுக்க மின்னணு கணினிமூலம் பத்திரப் பதிவு செய்வது குறித்த கருத்துரு அரசிடம் உள்ளதால், Stamp Vendor தொழிலை முழுநேரம் செய்துவரும் மூன்றாயிரத்திற்கு மேற்பட்ட Stamp Vendor குடும்பங்கள் தமிழகத்தில் பாதிக்கப்படவிருப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5369, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதி, காளையார்கோவிலில் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய II ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9165, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டத்தில், பதிவுத் துறையின் பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால், அந்த அலுவலகத்திற்கு ஓர் அரசுக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,64,13,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 10 – வணிக வரி மற்றும் பதிவுத் துறை – வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10 – வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.415,76,85,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1744, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை மலைப் பகுதியில் உள்ள விற்பனைப் பொருட்களுக்கு மறு விற்பனை வரியை அரசு இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2395, திரு. அருள் அன்பரசு.



**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3262, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4628, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிப்புக் கூட்டு வரியை (VAT) அமலாக்குவதில் சிறு வணிகர்களிடையே ஏற்பட்டுள்ள அச்சத்தைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6129, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, பெட்ரோலியம், டீசல், எரிவாயு போன்றவைகளின் மீதான அதிகமான விற்பனை வரியைக் குறைத்து மக்கள் நலன் கருதி விலையைக் குறைத்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7903, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வணிக வரித் துறை அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2358, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3695, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3879, திரு. கே.எல. இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4479, திரு. தி.க. ராஜா.



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள சினிமா திரையரங்குகளில் முறையாக நுழைவுச் சீட்டு வழங்காமல் வரி ஏய்ப்பு செய்து வருவதைத் தடுத்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5783, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7874, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விற்பனை செய்யும் சுய தொழில் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2559, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வணிகத்

தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2821*, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3399*, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3864*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3634*, திரு. அ. தமிழரசு.



**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூரில் செயல்பட்டு வரும் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3910*, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருந்து தடவப்படாத பேண்டேஜ் துணி இரகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4171*, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் தனியாக வணிக வரி அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய *10* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*415,76,85,000*/—ல் ரூ.*100*/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2104*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வணிக வரி அலுவலர்கள் பல முறைகேடுகள் செய்து வருவாய் இழப்பை உருவாக்குவதைத் தடுக்கவும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2006, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக வரியில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4415, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வணிக வரித் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2591, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உணவு, எண்ணெய் (தேங்காய் எண்ணெய்க்கு) உள்ள அரவைக்குப் போடப்படுகின்ற 4 சதவிகித வரி விலக்கு மற்றும் CST குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5144, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற வணிக வரி அலுவலகக் கட்டடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7609, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் வசூல் செய்யாமல் நிலுவையில் இருக்கும் வணிக வரிகளை உடனே தீவிர முயற்சி எடுத்து வசூல் செய்து நிதி நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5984, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கருப்புக்கட்டி மற்றும் புளி ஆகியவற்றிற்கு வணிக வரி விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5903, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அரசு காலியிடங்களில் வணிக வளாகங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5127, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி தலைமையகத்தில் வணிக வரி அலுவலகம் தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருகின்றது. அரசுக்கு வருவாய் ஈட்டும் வணிக வரி அலுவலகம் விரைவில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7701, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதி வளர்ந்து வரும் டெக்ஸ்டைல் நகரமாகும். கொசு வலை, பஸ் பாடி போன்ற தொழில் செய்பவர்கள் அதிகம் உள்ளதால், வணிக வரி செலுத்தவும் அவர்களுக்கு நல்ல முறையில் உரிய விளக்கம் கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5524, திரு. செ.ம. வேலுசாமி.



**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடத்தில் வணிக வரித் துறையின் அலுவலகம் துணை ஆணையர் அளவில் விரிவுபடுத்த புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9366, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8876, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிகர்கள்மீது போடப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8477, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் துணை வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தமாகப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8287, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்

பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4599, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வணிக நலன் கருதி தமிழ்நாடு முழுவதும் அனைத்து வணிக வரி அலுவலகங்களை கணினிமூலம் இணைத்து (Interlink), பொது மக்களும், வணிகர்களும் அனைத்து தகவல்களைப் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8714, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உள்நாட்டு பனியன் தொழில் விற்பனை வரி முறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6097, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் வணிக வரி அலுவலகக் கட்டடங்களை ஒரே வளாகத்தில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9195, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிப்புக்கூட்டு வரி (VAT)—லிருந்து விலக்களிக்கப்படும் சிறு வணிகர்களின் வருட வியாபார மதிப்பை ரூபாய் 10 இலட்சம் என்பதிலிருந்து ரூபாய் 25 இலட்சமாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.415,76,85,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 9, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 11, வணிக வரி மற்றும் பதிவுத் துறை— முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவற்றின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

---

@ 209 முதல் 255 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 10–வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் தொடங்குகிறது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேலாக பேசாமல், முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர், வணிக வரித் துறை மற்றும் பதிவுத் துறை, மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநிலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் வாழக் கூடிய மாநிலமாக இருக்கின்றது. இந்தத் துறையில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் 5 ஆண்டுக் கால ஆட்சியில், கடுமையான வறட்சி இருந்தும்கூட, நிதிப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, பெரும் பகுதி பிற்படுத்தப்பட்டோருடைய வாழ்வு வளம் பெறவும், அவர்களுடைய வருங்கால சந்ததிகளாய் இருக்கக் கூடிய, மாணவச் செல்வங்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையில் திட்டங்கள் தீட்டிய அடிப்படையில், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, வரலாறு படைக்கின்ற அளவில், 5 ஆண்டுக் காலம் நடந்த ஆட்சியில், பிற்படுத்தப்பட்டத் துறைக்கு 851 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 467 கோடி 23 இலட்சம் இருந்தது என்பதையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

@@ 256 முதல் 270 வரையிலான பக்கங்களில் இணைப்பு–IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



*முற்பகல் 11–05*

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர் 973 விடுதிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய விடுதிகள் இருந்தன. அந்த விடுதிகளில் 202 விடுதிகள் மட்டும் அரசினுடைய விடுதிகளாக இருந்தன. மீதமுள்ள அனைத்து விடுதிகளும் தனியார் விடுதிகளாக இருந்தது மட்டுமல்லாமல் விடுதிக் குழந்தைகள், அவர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் வேதனைப் பட்டுக்கொண்டிருந்த நிலைமையை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்கள் மனித நேயத்தோடு அத்தனை விடுதிகளையும்—761 விடுதிகளை 235 கோடி ரூபாய்க்குக் கடந்த 5 ஆண்டுக் காலத்திலே அத்தனையையும் புதிய கட்டடங்களாகக் கட்டுவதற்கு உத்தரவு வழங்கினார்கள் என்ற நல்ல செய்தியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், கடந்த அம்மாவினுடைய ஆட்சியில் 108 புதிய விடுதிகள் துவங்குவதற்காக உத்தரவு வழங்கப்பட்டு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இருக்கின்ற மாணவச் செல்வங்களுக்குப் போதுமான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, கூடுதலான வசதிகள் செய்த புதிய விடுதிகள் இருப்பதனால், அதிகமாக மாணவச் செல்வங்கள் தங்குவதற்கு விடுதிகளிலே போட்டி இருந்ததனால் கூடுதலாக 3,275 மாணவச் செல்வங்கள் தங்க உத்தரவிட்டார். பிற்படுத்தப்பட்ட... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 761 விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ஆணைகள் வெளியிட்டிருந்தாலும், சுமார் 312 விடுதிகளை மட்டுந்தான் அவர்களால் கட்ட முடிந்தது. மீதியுள்ள விடுதிகளுக்குத் தற்போது இடம் தேர்வு செய்து கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் வெறும் 36 விடுதிகள் மட்டும்தான் கட்டப்பட்டன. ஆனால், 761 விடுதிகளையும் கட்டுவதற்கு உத்தரவு வழங்கி 235 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டுகளின் கடைசியில் நாங்கள் அதிக கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து, அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் வேளையில், தேர்தல் வந்த காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டது. அதில் தொடர்ந்து அவர்கள் செயலாற்றிய காரணத்தால் இதை கணக்கில் சொல்லுகிறார்களே தவிர, நாங்கள் ஆரம்பித்ததைத்தான் அவர்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன், இப்பொழுது இருக்கக்கூடிய 108 விடுதிகளை, மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட விடுதிகளை இந்த ஆண்டு கட்டுவதற்கு இந்த பட்ஜெட்டில் நீங்கள் நிதி ஒதுக்கியிருக்கிறீர்களா என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுவும் சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலமாக— குறிப்பிட்ட நிதி 5 ஆண்டுக் காலத்தில் நாங்கள் ஒதுக்கிக் கொடுத்த அடிப்படையிலேதான் அவர்கள் கட்டி முடித்தார்களே தவிர, அவர்கள் தனியாக நிதியை ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், நான் கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் இந்தத் திட்டத்திற்கு என்று நிதி ஒதுக்கிட வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில், நாங்களும் கொடுத்துள்ளோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, தலைவர் கலைஞருடைய ஆட்சி இப்போது மலர்ந்துள்ளது. வருகின்ற ஆண்டுகளில் 108 இடங்களை நாங்கள் தேர்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் நிதி அளிப்பார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரேயொரு நிமிடம் நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் குறைந்த நேரம், அடிக்கடி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுக்கொண்டே இருந்தால் உறுப்பினர்கள் பேசுவதற்கு சரியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டு இறுதியாக அவர் என்ன சொல்ல இருக்கிறாரோ அதற்குப் பதிலுரைக்குமாறு பேரவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலுசாமி அவர்கள் அமைச்சரைப் பார்த்து, 'அமைச்சரைக் கேட்கிறேன்' என்று சொன்ன காரணத்தால், 'கேட்கிறேன்' என்று சொன்ன பிறகு, அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமை அமைச்சருக்கு இருக்கிறது, ஆகவே, பதிலளித்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய குறுக்கீடு இல்லாத வகையிலே நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு, வருங்கால சந்ததியினருக்காக திட்டம் தீட்டக்கூடிய ஒரு மனிதநேயமிக்க முன்னாள் முதல்வராக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒரு சீரிய திட்டம்தான் மிதி வண்டித் திட்டம்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு மட்டும் 4,66,594 மிதி வண்டிகள் சுமார் 85 கோடி ரூபாயில் கடந்த 5 ஆண்டுக் காலத்திலே வழங்கப்பட்டன. இந்தத் திட்டத்தைத் தீட்டி, இந்திய வரலாற்றிலேயே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்ற வகையிலே செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

அதேபோன்று, கள்ளர் சீரமைப்புப் பள்ளி 1920 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நீண்டநாட்களாக அதற்குப் போதுமான அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலை இருந்தது. அதற்காக, வரலாற்றில் இல்லாத அளவிற்கு, கடந்த 5 ஆண்டுக் காலத்தில், நிதிச் சீரழிவு இருந்தாலும்கூட, சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கிய அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலங்கள், வீட்டுமனை இல்லாதவர்களுக்கு நிலம் எடுக்கக்கூடிய சீர்திருத்தத் திட்டம், மாண்புமிகு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில், 1981–82 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் 2001 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்கின்றபோது, கடந்த ஆட்சியில் உங்களால் கொடுக்கப்பட்ட நில எடுப்பில் தகுதியான இடத்தில், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்காததன் விளைவாக, 1,93,000 பட்டாக்களில் 5,000 பேர் மட்டுந்தான் அந்த வீட்டுமனைப் பட்டாக்களில் வீடுகள் கட்டக்கூடிய சூழ்நிலை இருந்தது. அதை மாண்புமிகு அம்மா அவர்கள் உணர்ந்து, உடனடியாக அங்கு இருக்கக்கூடிய நிலங்களைச் சீரமைப்பதற்காக 1½ கோடி ரூபாயை ஒதுக்கினார்கள் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், (குறுக்கீடு) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், அனைத்து சாதியினருக்குமே, வீட்டுமனை இல்லாதவர்கள் அனைவருக்குமே, வருவாய்த் துறையின் மூலமாக, 50 கோடியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996–2001 ஆம் ஆண்டுகளில் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் ரூ.45 கோடி அளவில் மொத்தம் 1,54,099 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் நாங்கள் கொடுத்தோம். ஆனால், அ.தி.மு.க.வினுடைய அரசு, 2001–2006 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 5,760 நபர்களுக்குத்தான் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களும் எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியில் நிலம் எடுத்துக்கொடுப்பதற்கு, வீடு கட்டுவதற்குரிய திட்டத்தையும் ஆரம்பித்து, அதை விரைவில்—நாங்கள் இல்லாத காரணத்தால் அதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது—மீண்டும் தலைவர் கலைஞருடைய ஆட்சியில் பரிசீலித்து, நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அமைச்சராக இருந்தபோது, கடைசியில் 2001-ல் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்து, கிட்டத்தட்ட ரூ.50 கோடிக்கு நாங்கள் நிறைவேற்றுவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்வோம் என்று கூறிவிட்டுச் சென்றார்களே தவிர, அதற்குரிய நிதியையும் ஒதுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.



**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறுவது 5 ஆண்டுக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு உங்களால் கொடுக்கப்பட்ட இடங்கள் போதுமான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால்தான்; யார் கொடுத்திருந்தாலும் சரி, அவர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்துகொடுத்து, அங்கே நிலப் பட்டா உரிமையாளர்கள் வீடு கட்டுவதற்கானச் சாத்தியக்கூறு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன். 50 கோடி ரூபாய்க்கு நிலப் பட்டா வழங்கக்கூடிய திட்டத்திற்கு நிதியொதுக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒதுக்கப்பட்டிருக்கின்றது, நீங்கள் வேண்டுமானால் அதுபற்றி அலுவலரிடம் அறிந்துவிட்டு, நீங்கள் கருத்துக் கூறும்போது கூறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில், வஃக்ப் போர்டுக்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் முதன்முறையாக கட்டடத்திற்கு 50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 12 தர்காக்களில் அன்னதானம் வழங்குவதற்கும் ஒரு கோடி ரூபாய் முதலமைச்சருடைய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, சிறுபான்மையினருடைய அன்னதான நிகழ்ச்சி தொடர்வதற்காக அரசு வழங்கியது. அதுமட்டுமல்லாமல், சிறுபான்மையினரான முஸ்லீம், கிறிஸ்தவர் போன்ற சமுதாயத்தினருடைய இட ஒதுக்கீட்டிற்காக, ஓர் ஆணையம் உருவாக்கப்பட்டு, ஓராண்டிற்கு உத்தரவு வழங்கிய அந்த ஆணையம், தேர்தல் அறிவிப்பினால் ஆணையத்தில் நியமிக்கப்பட்டவர்கள் அமராத நிலையில் இன்று அந்த ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டு, புதியதாக இரண்டாண்டுகளாக நீட்டிக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 11–15

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியதாகத் தகவல் வந்தது. ஆனால் இன்று வரை இந்த ஆணையம், ஒரு ஆண்டில் முடிக்கக்கூடிய ஆணையம், இரண்டு ஆண்டுகளாக ஏன் நீட்டிக்கப்பட்டது? மத்திய அரசை இதுவரை சிறுபான்மையினருடைய இட ஒதுக்கீட்டுக்கு வலியுறுத்தியிருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விருப்பப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு கல்வி நிலையங்களிலும், வேலை நியமனங்களிலும் தனியாக இட ஒதுக்கீடு ஏற்படுத்துவதற்கான அரசியல் அமைப்பில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர கலைஞர் அவர்கள் மத்திய அரசிடம் வைத்த வேண்டுகோளை நிறைவேற்றுவதுடன், தமிழகத்தில் அவர்களுக்கு இட ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டுவருவோம் என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கிணங்க, சிறுபான்மை இனத்தவருக்கு தனி இட ஒதுக்கீடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு மைய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதே சமயத்தில், தமிழகத்தில் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னதாக இப்பொருள்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினைப் பெறுவது என்று முடிவு செய்து, இப்பொருள் குறித்து விரிவாக ஆய்வு செய்து, பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு அரசு கடித எண் 4949/2006–3, நாள் 17–7–2006–ல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும், அரசு சிறுபான்மையினருக்கு தனி இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஓராண்டில் சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீட்டை முடித்துத் தர வேண்டும் என்பதற்காக ஆணையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அம்மையார் சிறுபான்மையினருடைய இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறார்களா, எதிர்க்கிறார்களா என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) நீங்கள் பேசிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.



**திரு. செ.ம. வேலுசாமி:** நான் கேட்பது, சிறுபான்மையினருடைய இட ஒதுக்கீட்டுக்காக ஒரு ஆணையம் அமைக்கப்பட்டு, ஓராண்டிற்குள் முடிக்க வேண்டும் என்று ஆணையம் அமைக்கப்பட்டது. அதை நீங்கள் இரத்து செய்துவிட்டு, இரண்டாண்டுகளாக அந்த ஆணையத்தை நீட்டித்து இப்போது உத்தரவு வழங்குவதற்கு காரணம் என்ன? ஏன் காலதாமதப்படுத்துகிறீர்கள் என்றுதான் நான் கேட்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** சிறுபான்மையினருடைய இட ஒதுக்கீட்டுக்காக நீங்கள் குரல் கொடுப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆந்திராவிலே கொடுத்ததற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவித்தீர்கள் என்பதை இந்த நாடு மறந்துவிடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) கடைசியிலே வாய்ப்புத் தருகிறேன். பேசுங்கள். (குறுக்கீடு) கடைசியிலே வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்திய வரலாற்றில் இட ஒதுக்கீட்டிற்கு 69 சதவீதத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றி அதை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்த வரலாறு, புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. இன்று தமிழகத்தில் 69 சதவீத இட ஒதுக்கீடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்று இட ஒதுக்கீட்டைப்பற்றிப் பேசுகிறவர்கள் மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டு, 27 சதவீதம் மத்திய அரசுத் துறையில், மத்திய அரசிலும், தேர்வாணையத்திலும், அதேபோன்று கல்வி, பல்கலைக்கழகங்களிலும் இன்று 27 சதவீதத்தை 50 சதவீதமாக மாற்ற வேண்டுமென்று வலியுறுத்தி ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறீர்கள்? அதுமட்டுமல்ல. இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களுக்கேற்ப ஒதுக்கீடு செய்யலாம் என்று இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய சட்டத்தை, மத்திய அரசு ஏன் இன்னும் நிறைவேற்றுவதற்கு, மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்ற, தமிழகத்தில் இருக்கக்கூடிய இத்தனை அரசியல் கட்சிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிப்பதைப்போல, முன்னாள் முதலமைச்சர் அவர்கள், அந்தந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு, விகிதாச்சார அடிப்படையிலே சட்டம் கொண்டு வருவதற்கு உரிமை வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்கவில்லை. எங்களுடைய தலைவர் இன்றைய முதலமைச்சர் கலைஞர்தான் கடந்த ஐந்தாண்டு காலமாக அந்தக் கோரிக்கையை மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. ஏதோ 69 சதவீதம் என்று நாம் அனுபவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார். அதுவே தவறு. நீங்கள் சட்டம் கொண்டுவந்தீர்கள் 69 சதவீத இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று. அது நிறைவேற்றப்பட்டது இந்தச் சட்டமன்றத்திலே. ஒன்பதாவது அட்டவணையிலேயும் சேர்க்கப்பட்டது.

*முற்பகல் 11–20*

உச்ச நீதிமன்றத்திலே வழக்கு வந்தபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூன்று தினங்களுக்கு முன்னாலே இங்கே குறிப்பிட்டதைப்போல, அதை அ.தி.மு.க ஆட்சியிலே நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் நீதிமன்றத்திலே சொல்லவில்லை. அதுகூட வேடிக்கை அல்ல; நீதிமன்றம் கேட்டது; "50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைத்தான் செய்யமுடியும். அதை ஒத்துக்கொள்கிறீர்களா, இல்லையா?" என்று கேட்டபோது, "50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை நாங்கள் தமிழ்நாட்டிலே அமல்படுத்துகிறோம்" என்று Affidavit file செய்ததுதான், அ.தி.மு.க. ஆட்சியினுடைய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அ.தி.மு.க. ஆட்சியிலும் சரி, எங்களுடைய ஆட்சியிலும் சரி, நீங்கள் செய்த தவறு காரணமாக, 50 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டு, மேலும் ஒரு 19 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு மாற்று ஏற்பாடுகளை நாம் செய்துகொண்டிருக்கின்றோம். ஆனால், கலைஞர் அவர்கள், நிரந்தரமாக 69 சதவிகித இடஒதுக்கீட்டைப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சரி, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சிறுபான்மை மக்களுக்கான இட ஒதுக்கீடுபற்றி இவ்வளவு கரிசனத்தோடு பேசுகின்ற பிரதான எதிர்க்கட்சியைப் பார்த்து



நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இவ்வளவு பெரிய தோல்விக்குப் பிறகாவது, இந்த மன மாற்றம்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கும்போது, குறுக்கீடு இருக்கக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இவ்வளவு பெரிய தோல்விக்குப் பிறகாவது——

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,——

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். அவர் பேசி முடித்ததற்குப் பின்னர் சொல்லுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இவ்வளவு பெரிய தோல்விக்குப் பிறகாவது, ஒரு மன மாற்றம் வந்திருப்பது உள்ளபடியே எங்களை போன்றவர்களுக்குச் சற்று மகிழ்ச்சியாக இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியிலே... (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** சிறுபான்மை மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்காவிட்டாலும் பரவாயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியதற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பின்னர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** எங்களிடம் ஏற்கெனவே இருந்த உரிமைகளை எல்லாம் பறித்துக் கொண்ட நாட்கள்தான், கடந்த ஐந்து ஆண்டுக் கால வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் கடந்த காலத்தில் நடைபெற்றவற்றை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்க்கமுடியும். (குறுக்கீடுகள்) மதமாற்றத் தடைச் சட்டம்... (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்பக் கத்தக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கிடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த நாட்டிலே, ஒவ்வொரு... (குறுக்கிடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கிறிஸ்தவ தேவாலயத்திலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இஸ்லாமியப் பள்ளிவாசலில் இருக்கின்ற மத குருமார்களும், மார்க்க அறிஞர்களும் காவல் துறை கைதிகளைப்போல நடத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலையை கடந்த ஐந்து ஆண்டுகளில் உருவாக்கி வைத்திருந்தார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாடு அறியும். அதுமட்டுமல்ல, இந்த நாட்டிலே முதலமைச்சராக இருந்தவர்... (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** சிறுபான்மை மக்கள் பாதிக்கக் கூடிய அளவில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசப்போகிறார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அந்தக் கொடுமையும் இங்கே நடந்தது.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லோரும் இருக்கையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். Point of Order கேட்டிருக்கிறார், கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், சீக்கிரம் முடியுங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கடந்த ஐந்து, ஆறு நாட்களுக்கு முன்னால்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிக்கும்போது எழுந்து நிற்காதீர்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) முதலிலே அமைதியாக இருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டு இருக்கிறார், அவர் உட்காரமாட்டார்; நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டு இருக்கிறார், அவர் உட்கார மாட்டார். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். உட்காருங்கள், திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே நீங்கள் உட்காருங்கள். நான் எழுந்து நின்றால், நீங்கள் உட்கார வேண்டும்; அதுதான் அவை மரபு. உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள் பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள் பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை கிறிஸ்தவ ஆயர்களும், பேராயர்களும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரபைக் கடைப்பிடிக்க வேண்டும். முதலிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். (குறுக்கீடுகள்) முதலிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் (குறுக்கீடுகள்) முதலிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அவை மரபைக் கடைப்பிடிக்கவேண்டும். முதலில் உட்காருங்கள் எல்லோரும். திரு. பீட்டர் அல்போன்ஸ் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டு இருக்கிறார், குறுக்கிடக் கூடாது. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் (குறுக்கீடுகள்)

227420

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் .. ட்காருங்கள். அவை மரபைக் கடைப்பிடிக்கவேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், திரு. அரி, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இது கடந்த ஏழு நாட்களுக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவர் எழுந்து நின்றால் உட்கார வேண்டும் என்பது அவை மரபு. உட்காருங்கள் முதலில். நீங்கள் முதலிலே உட்காருங்கள், அவர் பேசிக்கொண்டு இருக்கிறார்.

*முற்பகல் 11–25*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கடந்த 7 நாட்களுக்கு முன்னால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் கையை நீட்டிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மூத்த உறுப்பினர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தமிழகத்தினுடைய கிருத்துவப் பேராயர்கள் அத்தனை பேரும் (குறுக்கீடுகள்) ஒட்டுமொத்தமாகச் சந்தித்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் முதலில் அவை மரபைக் கடைப்பிடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த 65, 70 நாட்களிலே சிறுபான்மை மக்களுக்கு இந்த அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** செய்த பல்வேறு உதவிகளுக்கும், சலுகைகளுக்கும் தங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருகிறீர்களா? இல்லையென்றால், நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இட ஒதுக்கீட்டை,–அப்போது அவர்கள் பேசினார்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருகிறீர்களா, நான் நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டிருக்கிறார். குறுக்கிடக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்க வேண்டுமா? (குறுக்கீடுகள்) நான் சொல்லிக் கேட்கவில்லையென்றால், நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலே வீற்றிருக்கின்ற எல்லா நண்பர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்; திரு. பீட்டர் அல்போன்ஸ் என்ன பேசப் போகிறார் அல்லது என்ன பேசுகிறார் என்று தெரியாமலே, அவரை உட்காரச் சொல்வது சரியா என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். அவர் பேசிய பிறகு, அதிலே தவறு காண்பீர்களேயானால், 'இப்படி ஒரு தவறான கருத்தை திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்லியிருக்கிறார்' என்று குறிப்பிட்டால், அது ஏற்கத்தக்கது. அப்படியில்லாமல், என்ன பேசப் போகிறார் என்று தெரியாமலே, திரு. பீட்டர் அல்போன்ஸ் எழுந்தாலே, அவர் பேசக் கூடாது என்கிற மாதிரி நடந்து கொள்வது முறையா என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். என்ன சொல்கிறாரோ அந்தக் கருத்துக்கு எதிர்கருத்து இருந்தால், அவைத் தலைவர் உங்களை அனுமதிப்பார் நிச்சயமாக. (குறுக்கீடுகள்) ஒருவர்தான் பதில் சொல்லமுடியும். எல்லோரும் முடியாது முடியாது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்) இது எப்படி? Decorum இதுவா? தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். அவர் பேசி முடித்தபிறகு, பேசிய கருத்துக்கு நாங்கள் பதில் சொல்லவேண்டுமென்று ஒருவர் எழுந்தால், அவரை அவைத் தலைவர் நிச்சயமாக அனுமதிப்பார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால், தமிழகத்தைச் சார்ந்த கிறிஸ்தவப் பேராயர்கள் அத்தனை பேரும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இந்த 65, 70 நாட்களிலே தமிழகத்திலே இருக்கின்ற சிறுபான்மைச் சமூகத்திற்கு இந்த அரசு செய்திருக்கின்ற

பல்வேறு சலுகைகளுக்கு நன்றி தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், அவர்கள் சொன்ன ஒரு வார்த்தையை மட்டும் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். "இனிமேல் உங்களிடம் கோரிக்கை வைப்பதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை. உங்களுடைய ஆட்சியிலேதான் இந்தப் பாதுகாப்பினை உணர்கிறோம். கடந்த 5 ஆண்டுகளாகப் பாதுகாப்பற்றிருந்த எங்களுக்கு இன்றைக்கு வாழ்க்கையினுடைய பாதுகாப்பு வந்திருக்கக்கூடிய சூழ்நிலையே இப்போதுதான் வந்திருக்கிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அப்போது பாராட்ட வந்தோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார்கள்; "நான் பாராட்டைப் பெறுவதற்காக உங்களைச் சந்திக்க விரும்பவில்லை. அடுத்த முறை நீங்கள் என்னைச் சந்திக்கின்றபோது, நீங்கள் எனக்கு நன்றி சொல்கின்ற சந்திப்பாகத்தான் இருக்கும்" என்பதை இட ஒதுக்கீட்டை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இருக்கும் உரிமைகளை ஏற்கெனவே பறித்துக்கொண்ட நீங்கள், இன்றைக்குச் சிறுபான்மை மக்கள்மீது காட்டுகின்ற ஆதரவு, வெறும் போலியான ஆதரவு என்பதைத் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை சிறுபான்மை மக்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள் திரு. டி. ஜெயக்குமார். உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதுமே சொல்வார், "என் இதயத்தில் சிறுபான்மையின மக்களை வைத்திருக்கிறேன்" என்று. ஆனால், ஒன்றும் செய்வதில்லை. வெறும் சொல்லுக்குத்தான் அவர் இருக்கிறார். இன்றைக்கு நான் அவருக்குச் சொல்லிக்கொள்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அது சொல்லா, செயலா என்பதை அப்புறம் பார்ப்போம், முதலில் கருத்தைச் சொல்லுங்கள்.



**Tmt. BADER SAYEED:** Please, Hon. Speaker Sir, may I be given two minutes? There is a G.O...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் (குறுக்கீடு) You have to tell only points.

**Tmt. BADER SAYEED:** This is the point. This is the point. (Interruption) This is the point. The G.O. — the new G.O. that has come up. Let me tell the Hon. Speaker, through him to the Hon. Chief Minister. There is no Muslim representation in this G.O. and we are talking that the case about the minority. Let me also tell you, only the other day. (Interruption) only the other day, in the Supreme Court, this Government has heard what the Central Government has said, that there is no question of reservation for Muslim in the Education or in Government services. This is the stand that is taken by the Central Government of which this Government is a part. Therefore, it is a contradictory stand (thumping of desks) and let me tell you, I want to ask through you, our Hon'ble Chief Minister, will he exercise his option and say that he will consider withdrawing support to the Central Government (thumping of desks) because his stand is different from them. This is for the Minorities which he is always talking about.

(முற்பகல் 11–30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இஸ்லாமியர்களுக்கு கடந்தகால ஆட்சியில் அமைச்சரவையிலேகூட இடம் கொடுக்காமல் ஒருவரை நியமித்துத் திரும்பத் திரும்ப எடுத்ததற்குப் பிறகு இன்று தலைவர் கலைஞர் அவர்கள்தான் இரண்டு இஸ்லாமியர்களை அமைச்சர்களாக நியமித்திருக்கிறார்கள் என்பதை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள், சொல்லிவிடுகிறேன். அதுமட்டுமல்ல, ஆந்திரப் பிரதேசத்திலே இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தபோது முதலில் எதிர்த்த குரல் யார்? பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? அன்றைய

முதலமைச்சர் அறிக்கை கொடுத்தார், கொடுத்தது தவறு என்று சொன்னார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள்தான், மத்திய அரசாங்கத்திற்கும் சொல்லி, இன்று அங்கேயும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விரைவிலே இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதைப்போல, அடுத்த முறை வருகிறபோது நன்றி சொல்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு என்றென்றும் சிறுபான்மையினருக்காக அதுவும் சமூகநீதிக் கொள்கையிலே தன்னுடைய உதட்டளவிலே பேசாமல் இரத்தத்திலே ஊறியிருக்கிற தலைவர்தான் டாக்டர் கலைஞர் என்பதை நாடே புரிந்திருக்கிறது. சிறுபான்மை சமுதாயத்தினருக்கும் அடித்தளத்து மக்களுக்கும் இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதிலே 27 சதவீதத்தை 50 சதவீதமாக்க முடியுமா என்று கேட்டாரே—அந்த 27 சதவீத—மண்டல் கமிஷன் அறிக்கைகளை நிறைவேற்றுவதற்கே காரணமாக இருந்த தலைவர், டாக்டர் கலைஞர்தான் என்பதை நாட்டுமக்கள் அறிவார்கள். அந்த 27 சதவீதம் மத்திய அரசாங்கம் கொண்டுவர தடை இருக்கிறபோது, அ.தி.மு.கவிலேயிருந்து உங்கள் தலைவி மத்திய அரசாங்கம் அதை நிறைவேற்ற வேண்டுமென்று இதுவரை ஒரே ஒரு அறிக்கை விட்டதுண்டா? சொல்லுங்கள். இட ஒதுக்கீடு பற்றி பேசுகிறீர்களே, 27 சதவீத இட ஒதுக்கீட்டை மத்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி, தி.மு.க., பொதுவுடைமைக் கட்சிகள் எல்லோரும் குரல் கொடுக்கிறபோது உங்கள் கட்சியிலேயிருந்து ஒரு குரல், ஏனென்றால் இங்கேயேதான் பேசுகிறார்கள். கலைஞருக்கு O.C என்றால் பிடிக்காது, B.C., S.C., என்றால் பிடிக்கும் என்று உங்கள் கட்சி உறுப்பினர் பேசுகிறார். கலைஞருக்கு, B.C., S.C., சிறுபான்மை மக்ககளுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்பதுதான் நீதிக் கட்சியினுடைய கொள்கை, அதை எங்கள் தலைவர் கலைஞர் செய்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் பாசித். (குறுக்கீடுகள்) முடியுங்கள், முடியுங்கள், பேசி முடியுங்கள் அம்மா. (குறுக்கீடுகள்) உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எச். அப்துல் பாசித்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சபையிலே இட ஒதுக்கீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலவரம் என்னவென்று சொன்னால் மரியாதைக்குரிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் பாசித் கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) திருமதி பதர் சயீத், நீங்கள் பேசுங்கள்.



**திருமதி பதர் சயீத்:** நான் பேசினவுடனே...Hon'ble Speaker Sir, I wish to remind this House (interruption) I wish to remind this House through the Hon'ble Speaker that in our Government when we were here we had enough Muslim Ministers. It is not as if we did not have Mr.Anwar Raaza or we did not have anybody else. It is a wrong statement that our Hon'ble Minister is making... (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும் அம்மா, நீங்கள் பாயின்டை மாத்திரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பாயின்டை மாத்திரம் சொல்லுங்கள். Tell the point.

**Tmt. BADER SAYEED:** You are not giving me an opportunity.

**HON. SPEAKER:** I have given you enough time.

**Tmt. BADER SAYEED:** I request you Hon'ble Speaker.. (Interruption) I request you Hon'ble Speaker...

**HON. SPEAKER:** Enough time I have given you.

**Tmt. BADER SAYEED:** Very little time. I just want to repeat once again that the Central Government has said categorically that there is no reservation for Muslims. But this Government says that they will get reservation. How is that possible? Is our Hon'ble Chief Minister going to withdraw support just as he did in the NLC matter. If that is so, we will be very happy.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் பாசித்..

**திரு. எச். அப்துல் பாசித்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது பேசியபோது, அப்படி ஒரு சட்டத்தை இயற்றவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நெல்லையிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டிலே, அந்த மாநாடு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாடு என்று சொல்வதைவிட முஸ்லீம்களின் வாழ்வுரிமை மாநாடாகவே நடந்தது. அந்த மாநாட்டிலேதான் மத்தியிலே, நாடாளுமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வசதியாக சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அன்னை சோனியா அம்மையார் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அதற்கான

இவற்றைக் களைய வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அதற்குத் தனியாக ஒரு குழுவை அமைத்து, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்தக் குழுவின் மூலமாக அறிக்கை பெற்று, அந்த இட ஒதுக்கீட்டிற்குத் தனியாக ஒரு நாள் சட்டமன்றத்தைக் கூட்டி, விவாதித்து, சமூக நீதிக்காக அந்தக் குறைகளைக் களைய முயற்சி எடுத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அந்தப் பின்னடைவுக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. அப்போது ஆட்சி மாற்றம். அதற்குப் பிறகு, முதலமைச்சர் கலைஞர் காலத்தில், இந்த பின்னடைவுக் காலியிடங்களை நிரப்புவதற்காக, அரசு பல முயற்சிகளை எடுத்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டுமென்று கேட்டோம். ஐந்தாண்டு காலத்திலே அந்தப் பிரச்சினையைக் கைவிட்ட அரசுதான், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. என்ன முயற்சி எடுத்தீர்கள்? ஒன்றும் எடுக்கவில்லை. ஆந்திரப் பிரதேசத்திலே இஸ்லாமியர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், உட்காருங்கள். யாரை எப்பொழுது பேசச் சொல்வது என்று நான்தான் முடிவுவெடுக்க வேண்டும். உட்காருங்கள், திரு. மணி பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆந்திரப் பிரதேசத்தில்கூட, இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்று சொன்னவர்கள் தமிழ்நாட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர். (குறுக்கீடு)

**HON. SPEAKER:** No question of Point of Order.

**திரு. ஜி.கே. மணி:** ஆந்திராவிலே கொடுத்தால், என்ன உங்களுக்கு? ஆக, எந்தவகையிலும் இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிரானவர்கள். அதுமட்டுமல்ல, ஒட்டுமொத்த இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிரானவர்கள். இப்பொழுது 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்குக் கலைஞர் அவர்கள் முயற்சிக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசில் இடம்பெற்றிருக்கின்ற காரணத்தினால் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே. அதேநேரத்திலே 27 சதவிகிதம் இட ஒதுக்கீட்டிற்கு கலைஞர் அவர்களும், மத்திய அரசும் நடவடிக்கை... (குறுக்கீடுகள்)



*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது இடையிலே சத்தம்போட்டால் வெளியேற்றிவிடுவேன். (குறுக்கீடுகள்) ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றாவது சொல்ல வேண்டும். ஒன்றுமே இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி காக்கவில்லையென்றால், அவை மரபைக் கடைப்பிடிக்கவில்லையென்றால் உள்ளே உட்காரவிடமாட்டேன். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** அதுமட்டுமல்ல. இன்னொரு உண்மை. கடந்த ஆட்சிக் காலத்தில், இஸ்லாமியர்களுக்கு, இட ஒதுக்கீடு வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியுடைய நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா தலைமையிலே ஒரு போராட்டத்திற்கு அனுமதி கேட்டோம். அனுமதியே கொடுக்க மறுத்தீர்கள், அ.தி.மு.க. ஆட்சியிலே. பின்னாலேதான் கொடுத்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** வற்புறுத்தி, சண்டையிட்டு வாங்கினோம். ஆகவே, ஒட்டுமொத்த இடஒதுக்கீட்டிற்கு எதிரானவர்கள் என்பதை நாங்கள் உணர்கிறோம். இனியாவது இடஒதுக்கீட்டுற்குக் குரல் கொடுங்கள். புதிதாகக் குரல் கொடுங்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், குறை சொல்லாதீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் பேசுங்கள், திரு. வேலுசாமி. (குறுக்கீடுகள்) No point of order. டைம் ஆகிவிட்டது. பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Important. Speaker Sir, point of order, please.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுசாமி, நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுவேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No question of point of order. Sit down. நீங்கள் பேசுங்கள். திரு. வேலுசாமி பேசுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* திரு. வேலுசாமி பேசுகிறீர்களா? *(குறுக்கீடு)* Not allowed. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உரை எதுவுமே அவைக் குறிப்பிலே ஏறாது. *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கொறடாவுக்குக் கொஞ்சம் நேரம் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், உட்கார்கிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? *(குறுக்கீடுகள்)* சி.வி. சண்முகம், உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? *(குறுக்கீடுகள்)* நடவடிக்கை எடுப்பேன். *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்ப you are causing disturbance. *(குறுக்கீடுகள்)* Yes. It is left to you. *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

*(அ.தி.மு.க. உறுப்பினர்கள் கூச்சலிட்டவாறே அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போங்கள், போங்கள். மாண்புமிகு உறுப்பினர் இரா. மாணிக்கம். பேசுங்கள், மாணிக்கம். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* லாபியிலே நின்று கத்துவதையெல்லாம் அவைக் காவலர்கள் யாரும் அனுமதிக்கக் கூடாது. அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் முதல் உரையைப் பேசுகிறேன். சட்டமன்றத்தில் புதிய அனுபவம். என்ன பேசுவது, எப்படி நடந்துகொள்வது என்று யோசிக்கின்றேன். நான் புதியவன் என்பதால் முந்தைய ஆட்சி ஒன்றின் சபைக் காட்சிகளை நினைவிலே ஓட்டிப் பார்க்கின்றேன். வேப்பிலை ஆடை கட்டி ஆடுவதா, இல்லை, பொங்கல் வைத்துப் பாடுவதா, துதி பாடி, துதி பாடி, தூக்கம் வர தாலாட்டி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், உறுப்பினர்கள் மேலும் லாபியில் நின்று கத்துவதற்கு allow பண்ணாதீர்கள். வெளியே அனுப்புங்கள்.

**திரு. இரா. மாணிக்கம்:** ஊர் நன்மை பேசாது, உதவாக்கரை பேச்சுக்கு கைதட்டி, மேசைதட்டி, சபை நேரம் கழிப்பதா அல்லது யாரையுமே பேசவிடாமல் நான் மட்டுமே பேசி நர்த்தனம் ஆடுவதா, ஒன்றுமே புரியவில்லை. குப்பையைக் குத்துவிளக்காய் எண்ணி, கும்பிட்டு, கும்பிட்டு குனிந்துபேசுகின்ற சுயநலவாதிகளின் சொர்க்கமாய் ஒருகாலம் இந்தச் சபை இருந்ததுண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உழைப்பால், தியாகத்தால் உயர்ந்த ஒரு தலைவரின் உன்னதத் தலைமையிலே, மீண்ட சொர்க்கமாய், கம்பீரமாய், காட்சிதரும் இந்த சபையிலே நானும் ஒரு உறுப்பினராகி உட்காரும் நிலை வந்து' அந்த நிலையை என் தொகுதி மக்கள் நல்வாழ்வுக்கு அர்ப்பணித்து, தொடங்குகின்றேன் முதல் உரையை, நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆசியோடு.

எந்தக் கையில் வாளைப் பிடிப்பது, எந்தக் கையில் கேடயம் பிடிப்பது என்பது ஒரு சுத்தமான போர் வீரனுக்குத் தெரியும். இதே சபையில் என் தலைவர் முழங்கினார் அன்று. அந்த மூதறிஞர் மூளையிலே, மேற்பார்வையிலே அமைந்திட்ட இநத வரவு–செலவு அறிக்கையை நான் பாராட்டுவது மரபாக இருக்கலாம், முறையாக இருக்காது.

தமிழகத்தில் எந்தத் தொகுதிக்கும் கிடைக்காத பெருமை என் தொகுதிக்கு உண்டு. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கிய பெருமை 1957–ல் குளித்தலை தொகுதிக்குக் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த குளித்தலை தொகுதிக்கு சாதாரண விவசாயினுடைய மகனாக மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பிறந்த என்னை, அதுவும், முதல்வர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற பொன்விழா ஆண்டிலேயே, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்தப் பெருமைமிக்க மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

*முற்பகல் 11–45*

அடுத்து, நான் இங்கே, அவையிலே பேசுவதற்கு முக்கியக் காரணமாக இருந்த ஒருவருக்கு. நன்றி சொல்லவில்லையென்றால், நான் நன்றியைக் கொன்றவனாவேன். திராவிட இயக்க வரலாற்றிலே இரண்டு பேரைத்தான் தளபதி என்று அழைப்பார்கள். ஒருவர் கழகத்தையும், தலைவர் கலைஞரையும் நமக்கு அளித்த பேரறிஞர் அண்ணா அவர்கள்,

மற்றொருவர் பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள். அவர்களுக்கு அடுத்து தளபதி என்றால், எங்களின் எதிர்காலம் உள்ளாட்சித் துறையை நல்லாட்சித் துறையாக மாற்றியிருக்கின்ற மாண்புமிகு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட தோகைமலைக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு தளபதி அவர்கள் வந்திருந்தபோது மக்கள் வெள்ளத்தில் நீந்தி வர, இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. 10–00 மணிக்கு மேல் தேர்தல் விதிக்கு கட்டுப்பட்டு, ஒலிப்பெருக்கி இல்லாமல் பிரச்சாரம் செய்து, நிகழ்ச்சி முடிக்க இரவு 11–15 மணியாகிவிட்டது.

சென்னை திரும்புவதற்கு பாண்டியன் புகைவண்டியை 11–30 மணிக்குள் 30 கிலோ மீட்டர் கடந்து திருச்சி வந்து பிடித்தாக வேண்டும். காரில் தளபதியுடன் அண்ணியாரும் இருக்கிறார். கார் 120 கி.மீ–ல் வேகமாக பறக்கிறது. அமைச்சர், அண்ணன் நேரு அவர்கள் எல்லாம், திருச்சி இரயில் நிலையத்தில் பதற்றத்தோடு கழகத் தோழர்களுடன் காத்திருந்தார்கள். ஒரு மணித்துளி இருந்த நிலையில் தளபதியும், அண்ணியாரும் ஓடிவந்து இரயிலில் ஏறினார்கள். அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும், என் உடம்பில் இரத்த ஓட்டம் நின்று விடுகிறது. தன் உயிரையும், பொருட்படுத்தாமல் இயக்கத்தின் வெற்றியே எனது குறிக்கோள் என்று சூளுரைத்து என்னை வெற்றிபெறச் செய்த தளபதி அவர்களுக்கு என் கடைசி சொட்டு இரத்தமும் நன்றி சொல்லும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கத் துணை நின்று, தான் வாய்ப்பை இழந்தாலும் என் வெற்றியை தன்னுடைய வெற்றியாக கருதி மகிழும் கரூர் மாவட்டச் செயலாளர் திருமதி வாசுகி முருகேசன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சுமார் 14 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த செயல்வீரர்களுக்கும், வாக்களித்த குளித்தலை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி பதிவுத் துறை மானியக் கோரிக்கைகளுக்கு வருகின்றேன். பத்திரப் பதிவுத் துறை அலுவலகங்களில், கணினிமயமாக்கப்பட்ட திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

2001–லிருந்து வழிகாட்டி மதிப்பீடு குழு அரசால் திருத்தி அமைக்கப்படவில்லை. அதனால் வருடத்திற்கு 10 சதவிகிதமோ



15 சதவிகிதமோ உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. அதனால், பொதுமக்கள் பத்திரப் பதிவு செய்வது குறைந்துள்ளது. இதனால், அரசுக்கு வருவாய் இழப்பும், பொதுமக்கள் பாதிப்புக்கும் ஆளாகியுள்ளனர்.

2005–ல் அ.தி.மு.க. அரசால் வழிகாட்டி மதிப்பீடுக் குழு ஒன்றை அமைத்தார்கள். அந்தக் குழுவும் சரியாகச் செயல்படவில்லை. அதனால் நிரந்தரமான வழிகாட்டி மதிப்பீடுக் குழு ஒன்றினை ஏற்படுத்தி அதில் பொது மக்களையும் உறுப்பினராகக் கொண்டு நிரந்தரக் குழு அமைக்க வேண்டும்.

ஒரு தெருவில் அதிகம் மதிப்புள்ள வழிகாட்டி மதிப்பு. அனைத்துப் பகுதிகளுக்கும் சீரானமுறையில் பின்பற்றப்படவில்லை. இதனால், முறையான மதிப்பீடு இல்லாததால் மேல்முறையீடு 47 (A)(1) அதிகமாகி வழக்குகள் அதிகரிக்கின்றன.

ஒரு விவசாய நிலத்தில் ஒரு சிறுபகுதி சுமார் 10 சென்ட் வீட்டுமனையாக விற்பனை செய்யும்போது, மீதியுள்ள பெரும்பகுதியும் வீட்டுமனைகளாகக் கருதப்படுகின்றன. இந்த நிலையை மாற்றி விற்பனை செய்த மனைப்பட்டா நிலத்தைத் தவிர்த்து மீதியுள்ள நிலத்தை விவசாய நிலமாகவே மதிப்பீடு செய்ய வேண்டும்.

அதேபோன்று, இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் தொழிற்சாலைகள் அதிகமாகத் தொடங்கப்படுகின்றன. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். அவ்வாறு தொழிற்சாலை தொடங்குவோர் நெடுஞ்சாலை அருகிலேயே இடத்தை தேர்வு செய்கின்றனர். நெடுஞ்சாலை அருகிலுள்ள இடங்களுக்கு வழிகாட்டி மதிப்பில் மனை மதிப்பீடே உள்ளது. அதே பிற்பகுதியில் தரிசு நிலங்களுக்கும் அந்த வழிகாட்டி மதிப்பீடே உள்ளது. இதனால், புதிதாகத் தொழிற்சாலைகள் அமைத்திட நிலம் வாங்கும்போது முதலீட்டில் பெரும்பகுதி அடிமனைக்கேச் செலவாகிறது.

இந்த நிலையை மாற்றி விவசாய நிலங்களுக்கான வழிகாட்டி மதிப்பீடு நிர்ணயம் செய்ய வேண்டும். அதேபோல் பள்ளங்களாக உள்ள நிலத்திற்கும் தனி வழிகாட்டி மதிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் வெளிமாநிலத்தில் ஆரம்பிக்கும் தொழிற்சாலைகள் நம் மாநிலத்திலேயேத் தொடங்க வாய்ப்பு அதிகம் ஏற்படும்.

அதேபோல், ஓர் இடத்தின் வர்த்தக நிலையைப் பொறுத்து அரசு வழிகாட்டி மதிப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது. பெருகிவரும் வர்த்தக நிலையை கணக்கிட்டு பஸ் நிலையமோ, வர்த்தகப் பிரிவு இடங்களோ

வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கப்படும்பட்சத்தில் புதிய இடத்திற்கு நிலத்தின் மதிப்பீடு கூடுகிறது. மேற்சொன்னவாறு பழைய இடத்தின் மதிப்பு அதே நிலையிலேயேக் கணக்கிடப்படுகிறது. அபிவிருத்தி செய்யப்படுகிற பகுதியின் மதிப்பைக் கூட்டியும் பழைய இடத்தின் மதிப்பைக் குறைத்தும் கணக்கிட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரு நிலத்தின் 60 சதவிகித மதிப்பில் வங்கிகளில் கடன் வழங்கப்படுகிறது. வங்கிகளில் கடன் வாங்கும் நோக்கில் நிலம் வாங்குவோர் வழிகாட்டி மதிப்பினைவிடக் கூடுதலாக உயர்ந்த மதிப்பில் பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். இவர்களால் அந்தப் பகுதியிலுள்ள மற்ற இடத்திற்கும் வழிகாட்டி மதிப்பீடு கூடுகிறது. இதனால் மற்றவர்கள் நிலத்தை விற்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகையால், இந்தக் குறைபாடுகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும்.

அதேபோல் ஓர் ஏழை விவசாயிக்கு சொந்தமான வெறும் 3 சென்டோ, 5 சென்டோ உள்ள நிலத்தை கிரையம் செய்யும்போது, அந்த இடத்தை சார் பதிவாளர் நேரில் பார்வையிடவும் மற்றும் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிலை உள்ளது. இதனால் சிறு விவசாயிகள் வீண் அலைச்சலுக்கும், பண விரயத்திற்கும் உள்ளாகின்றனர். இந்த நிலையை எளிமைப்படுத்த வேண்டும்.

முற்பகல் 11–50

அதேபோல, தான செட்டில்மெண்ட் ஆவணமோ அல்லது பாக, பாத்திய, விடுதலைப் பத்திரமோ பதிவு செய்யப்படும்பொழுது சம்பந்தப்பட்ட சொத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பின்படி 1 சதவிகிதம் முத்திரைத் தீர்வையும், 1 சதவிகிதம் பத்திரப் பதிவுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இந்த நிலையில், ஒருவர் 10 இலட்சம் மதிப்புள்ள சொத்தைப் பரிமாற்றம் செய்யும்பொழுது ரூ.10 ஆயிரம் வசூலிக்கப்படுகிறது. அதே 1 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தைப் பரிமாற்றம் செய்யும்பொழுதும் மேற்சொன்ன ரூ.10 ஆயிரம் வசூலிக்கப்படுகிறது. இதனால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வைச் சீர்செய்ய வேண்டும்.

கிராமப்புறங்களில் மனை இடங்கள் விற்கப்படும்பொழுது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரிடம் தடையின்மைச் சான்று, N.O.C பெற்றால்தான் பதிவு செய்யப்படும் என்ற நிலை உள்ளது. இதனால் கிராம ஏழை மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். இந்த நிலையையும் மாற்றி அமைத்து எளிமைப்படுத்த வேண்டும்.



அதேபோன்று, நகர்ப்புறங்களில் மனை இடங்களை விற்பனை செய்யும்பொழுது நகராட்சி ஆணையரிடம் தடையின்மைச் சான்றிதழ் பெறப்பட்டு பத்திரப் பதிவு செய்யப்படுகிறது. ஆனால், ஆணையரிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறுவதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படும்போது பத்திரப் பதிவு தாமதமாகி வருகிறது. இதனால், அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பும், பொதுமக்களுக்கு வீண் அலைச்சலும் ஏற்படுகிறது. தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கால நிர்ணயம் செய்ய அரசு ஆணையிட வேண்டும்.

அதேபோல, முக்கியப் பிரதான சாலையில் உள்ள இடங்களுக்கு அதிக மதிப்புள்ளது. அதனால் வழிகாட்டி மதிப்பும் அதிகமாக உள்ளது. அதே சாலையில் சிறிது தூரம் தள்ளி உள்ள இடத்திற்கும் அதே வழிகாட்டி மதிப்பீடே கணக்கிடப்படுகிறது. அதனால் வெளிச் சந்தையிலோ அதன் மதிப்பு குறைவாக உள்ளது. அதேபோல குறுக்குச் சாலைகளிலும் இதே வழிகாட்டி மதிப்பீடே உள்ளது. ஆனால், அந்தத் தெருக்களில் சாலை வசதிகளோ கட்டமைப்பு வசதிகளோ பிரதானச் சாலைகளில் உள்ளதுபோல் இல்லை. இங்கும் வெளிச் சந்தை மதிப்பும் குறைவாக உள்ளது. வழிகாட்டி மதிப்போ அதே நிலையில் உள்ளது. அதனால் பத்திரம் பதிவு செய்பவர்கள் பிரிவு 47 (A)(1)–ன்படி பத்திரப் பதிவு செய்கிறார்கள். மேற்கண்ட குறைபாடுகளைக் களைந்து, பிரிவு 47 (A)(1)–ன்படி பத்திரப் பதிவு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

சென்ற அ.தி.மு.க அரசு கந்து வட்டியை ஒழித்துவிட்டதாக மார்தட்டிக் கொண்டது. ஆனால், உண்மை நிலையோ, அரசாங்கமே கந்து வட்டிக்காரன்போல செயல்பட்டுள்ளது. அதாவது, பிரிவு 47 (A)(1)–க்கு அனுப்பப்படும் ஆவணங்களுக்கு தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களால் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு, முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. மேற்கண்ட ஆவணங்களை 60 நாட்களுக்குள் தொகையைச் செலுத்தி, திரும்பப் பெறாவிட்டால், மாதம் ஒன்றுக்கு வட்டி 2 சதவிகிதம், அதாவது வருடத்திற்கு 24 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு கணக்கிடும்போது சுமார் 4 வருடங்களில் வட்டித் தொகை இரட்டிப்பாகிறது. அசல் அளவுக்கு வட்டி வந்துவிடுகிறது. இதனால் ஆவணங்கள் தேங்கிக் கிடக்கின்ற நிலை உள்ளது. ஆகையால், வட்டியைத் தள்ளுபடி செய்வதால் அரசுக்கு வருவாய் உயரும்.

பதிவுத் துறை அலுவலகங்களில் உபயோகப்படுத்தப்படும் தளவாடச் சாமான்கள், furniture மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

நீண்டநாட்களாக இந்தக் குறைபாடுகள் சரி செய்யப்படாமல் இருக்கின்றன. இதற்காக மகாராஷ்டிரா, கர்நாடகம் மாநிலங்களில் உள்ளதுபோல I.S.O. சான்றிதழ் பெறும் அளவிற்குத் தரம் உயர்த்த வேண்டும்.

கணினிமயமாக்கப்பட்ட சார் பதிவாளர் அலுவலகங்களில் சொத்துக்குரிய வில்லங்கச் சான்றிதழ் பெறப்படும்பொழுது அங்கு கணினி கட்டணம் ரூ.100/– என வசூலிக்கப்படுகிறது. அதையும் குறைத்து வசூலிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் பதிவுத் துறை அலுவலகங்களுக்குப் பதிவுக்காக வரும்போது, பெரும்பாலான அலுவலகங்களில் வெயிலிலும், மழையிலும் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. அதற்கு காத்திருப்போர் அறை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் தற்போது நகராட்சிக் கட்டடத்தில், வாடிகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. கரூர் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கரூர் மாவட்ட ஆட்சியா அலுவலகத்தில் கட்டப்பட்டு முடிவுற்று 10 மாதங்கள் ஆகியும் திறக்கப்படாமல் உள்ளது. தற்போது அந்த அலுவலகம் நகராட்சிக் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது. ஆகவே, அரசாங்கம் இந்தக் கட்டடத்தில் அலுவலகம் இயங்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை. பெரும்பாலான பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 100 பேர் தங்குவதற்கான வசதிகள் இருந்தும் அதிகபட்சமாக 60 மாணவர்களுக்குத்தான் அரசு அனுமதி அளித்துள்ளது. நிறைய பேர் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு விண்ணப்பிக்கிறார்கள். அதனால் இடங்களை அதிகப்படுத்த வேண்டும்.

அனைத்து விடுதிகளிலும் எரிசக்தி மேம்பாட்டுத் துறையின் ஆதரவோடு சூரிய ஒளியினால் சமைக்கக்கூடிய சமையல்கூடத்தை ஏற்படுத்தலாம். அவ்வாறு ஏற்படுத்துவதன்மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. எரிபொருள் சிக்கனத்தால் அரசுக்குச் செலவும் குறையும்.

அனைத்து விடுதிகளிலும் இணைய தள வசதியுடன் கூடிய கணினி அமைத்து, ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கி, ஏழை மாணவர்களுக்கு உலக அறிவினைப் பெறச் செய்ய வேண்டும்.

அனைத்து விடுதிகளிலும் நூலகம் அமைத்து, நல்ல நூல்களை இடம்பெறச் செய்தால், மாணவ, மாணவியர்கள் முன்னேற்றப் பாதையில் செல்ல உதவியாக இருக்கும்.



அடுத்து, என்னுடைய தொகுதியினுடைய சில கோரிக்கைகளைச் சபைக்கு வைக்கின்றேன். குற்றுயிராய்க் கிடந்த குளித்தலை தொகுதிக்கு புதிய முகம் கொடுத்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கு தொகுதியின் ஒவ்வொரு வீதியும் தெரியும் என்ற வகையிலே உரிமையோடு கோரிக்கைகளை வைக்கின்றேன்.

முதல்வர் கலைஞர் அவர்களின் முதல் தொகுதி என்ற காரணத்தினாலோ என்னவோ கடந்த ஆட்சியாளரால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, எந்த முன்னேற்றத் திட்டமும் நடைபெறாமல், தாய் இல்லாத குழந்தை தவிக்கின்ற நிலையில் என் தொகுதி உள்ளது. முதல்வர் கலைஞர் அவர்கள் 1957–ல் குளித்தலை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தேர்தல் வாக்குறுதியாக அளித்த குளித்தலை–முசிறி காவிரி இணைப்புப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால், சென்ற ஆட்சியாளரால் எந்தப் பராமரிப்பும் இல்லாமல் அந்தப் பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, அந்தப் பாலத்தைப் புதுப்பிக்க நிதி ஒதுக்க வேண்டுமாய் சபையில் அவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

என்னுடைய தொகுதியில் இரண்டு நகராட்சிகள் உள்ளன. ஆண்டுதோறும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மேல்நிலைப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிப் படிப்பிற்காக சுமார் 60 கிலோ மீட்டர் தாண்டி, திருச்சிக்கும், கரூருக்கும் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். ஆகவே, என் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குளித்தலை தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். குளித்தலை தொகுதியில் நெல், வாழை, கரும்பு, வெற்றிலை, மரவள்ளிக் கிழங்கு போன்ற விவசாயம் அதிகம் இருப்பதால், விவசாயம் சார்ந்த தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். குளித்தலை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மாவள்ளிக் கிழங்கு சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிரிடப்படுகிறது. ஆகவே, என் தொகுதியில் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசி தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலையிலிருந்து சுமார் 2,500 பேர் தினமும் 60 கிலோ மீட்டர் பயணித்து கரூரில் உள்ள தனியார் நூற்பாலைகளுக்குக் குறைந்த தினக்

கூலிக்கு பணிபுரியச் செல்கிறார்கள். இவர்களுக்கு குளித்தலை தொகுதியிலேயே பணிபுரிய ஏதுவாக தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும். மேலும், புதிதாக தொழில் தொடங்கும் தொழில் அதிபர்களை குளித்தலை பகுதியிலே தொழில் தொடங்க அரசாங்கம் சலுகைகள் தந்து, ஊக்குவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

வாழை பதனிடும் தொழிற்சாலை ஒன்று குளித்தலையில் அமைக்க வேண்டும். குளித்தலை வட்டாரப் பகுதியில் வாழை, மா பழங்கள் உற்பத்தி ஆகின்ற காரணத்தினால் அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்வகையில் குளிர்ச் சாதனக் கிடங்கு ஒன்று அமைத்துத் தர கேட்டுக்கொள்கின்றேன். சேமிப்பினால் நல்ல விலை கிடைப்பதுடன், வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும், வாழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் பொருளாதார மேன்மை ஏற்படும்.

2007–2008 ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில் விதைக் கரணைகள், வெட்டும் கூலி, வாகன வாடகை ஆகியவற்றை தமிழக அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சொட்டுநீர்ப் பாசனத்திற்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து மானியம் தந்து உதவுமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை தொகுதியில் மிகச் சிறப்பாக செயல்பட்டுவந்த இனுங்கூர் அரசு விதைப் பண்ணை தற்பொழுது சீரழிந்து போகும் நிலையில் உள்ளது. இதனை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து வெப்ப மண்டல பழங்கள் மற்றும் ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பயிர்களில் நெல் உற்பத்திக்கு ஆகும் சாகுபடிச் செலவு, கோதுமை உற்பத்திக்கு ஆகும் சாகுபடிச் செலவைவிட கூடுதல் ஆகிறது. ஒவ்வொரு பயிர் உற்பத்திப் பொருளுக்கும் மத்திய அரசு அறிவிக்கும் அடிப்படை கொள்முதல் விலை நெல்லுக்குக் கொடுப்பதைவிட கோதுமைக்குக் கூடுதலாகத் தரப்படுகிறது. தமிழ்நாட்டில் நெல் பிரதானப் பயிராக இருப்பதால், கோதுமை தானியத்திற்குக் கொடுப்பதைவிட கூடுதல் அடிப்படைக் கொள்முதல் விலையை நெல்லுக்குக் கொடுக்க மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

குளித்தலை அரசு மருத்துவமனையில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இலவச கண் சிகிச்சைத் திட்டத்தின் அடிப்படையில் கண் சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ. இன்னும் ஒன்று, இரண்டு.



குளித்தலை அரசு மருத்துவமனை, தேசிய நெடுஞ்சாலை எண் 67–ல் அமைந்துள்ளது. அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனை தொடங்கி சுமார் 40 ஆண்டுகள் ஆகும் நிலையில் 66 படுக்கைகள் கொண்டே இயங்கி வருகிறது. விரிவுபடுத்த இட வசதி இருந்தும், அதே நிலையில் உள்ளது. ஆகையால், 100 படுக்கைகள் கொண்ட வசதி ஏற்படுத்தி, தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தோகைமலை பகுதியில் முக்கியத் தொழிலாக அரசு மற்றும் தனியார் கிரானைட் குவாரிகள் அதிகம் உள்ளன. இதில் அரசாங்க குவாரி டாமினில் பல கோடி மதிப்புள்ள கழிவுக் கற்கள் சுமார் 10 ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கின்றன. இதனை அரசு ஏலம் விட்டால் அரசாங்கத்திற்குப் பெரும் வருவாய் கிடைப்பதுடன் ஆயிரக்கணக்கான கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். மேலும், சரளை, ஜல்லி போன்றவற்றிற்கான விலையும் குறையும் வாய்ப்புள்ளது.

தோகைமலை கிராமப் பகுதிகளில் 60 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் மோசமான மேடு பள்ளங்கள் நிறைந்த மண் சாலைகளாக உள்ளன. அவற்றை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை ஊராட்சி ஒன்றியம், புழுதேரி ஊராட்சியில் அறியார் கால்வாய் என்ற ஒன்று உள்ளது. அதில் தடுப்பணை கட்டினால், அதன்மூலம் புழுதேரி, பெரிய ஏரி, சின்ன ஏரி, ஆர்.டி. மலை, காப்பேரி ஆகிய குளங்களில் நீர் அதிகரித்து சுமார் 1,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைய வாய்ப்பு இருக்கின்றது.

அதேபோல, குளித்தலை தொகுதிக்குட்பட்ட தோகைமலை பகுதியில் துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்று அமைத்திடக் கேட்டுக்கொள்கின்றேன்.

மணப்பாறை நகராட்சிப் பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையை மணப்பாறையில் அமைக்க அரசு ஆணை எண் 212, நாள் 29–6–2004, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையினால் உத்தரவிடப்பட்டுள்ளது. மருத்துவமனை அமைக்கத் தேவையான இடத்தை மணப்பாறை நகராட்சி இலவசமாக வழங்க தீர்மான எண் 311, நாள் 8–9–2004–ன்படி

நிறைவேற்றி அனுப்பியும், முந்தைய அ.தி.மு.க. ஆட்சி 24 மாதங்கள் ஆகியும் எந்தவித மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, இதனை உடனே செயல்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறையைச் சுற்றியுள்ள பகுதியில் பூக்கள் சாகுபடி அதிகம் செய்யப்படுகிறது. ஆகையால், அவர்கள் பயனடையும் வகையில் குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்று அமைத்து, வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். குளித்தலை நகரப் பகுதியில் பிற்படுத்தப்பட்ட அரசு மாணவர் விடுதி ஒன்று கட்டித் தர கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

***திரு. பெ.சு. விஜயகுமார்:** மண் இல்லாமல் மாளிகையா, மானுடன் இல்லாமல் உலகமா, மென்மையில்லாமல் மலரா, பழமில்லாமல் விதையா, பாறைகள் இல்லாமல் மலையா, பெண்கள் இல்லாமல் ஆண்களா, பேச்சில்லாமல் மனிதரா, வாக்காளர் இல்லாமல் தேர்தலா, வாக்களிக்காமல் வெற்றியா. என்னை வாழவைத்த போளூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

நண்பகல் 12–00

சபாநாயகர், பார்ப்பதற்கு எளியோராய், பழகுதற்கு நல்லோராய், எடுத்த பணி எதுவானாலும் எல்லோரும் பாராட்டும்வண்ணம் நல்லவராய், வல்லவராய், எடுத்த எடுப்பிலே கனிவாகவும், பணிவாகவும் தொடங்கினாலும் கடுமையாகவும் நடக்கத் தெரியும், சபை உறுப்பினர்கள் தவறாக நடந்துகொள்ளும்போது என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்குக் காட்டி, சீதை எப்படி தீயிலேயிருந்து வெளியே வந்தாரோ, அப்படி எதிர்க்கட்சியினுடைய கண்டனத் தீர்மானம் என்ற தீயிலே இறங்கி, சுடச்சுட சுத்தமாகின்ற தங்கமாக, சுடச்சுட வெளுக்கின்ற சங்காக இன்றைக்கு வெளிவந்துள்ள மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகத் திருவுருவாம், தேசியம் காக்க வந்த நேரு பரம்பரையின் நேர்மை காக்க வந்த தேசிய திருவிளக்காம், தெற்கே தேயும், வடக்கே



வாழும் என்ற நிலை மாற்றி, தெற்கேயும், தமிழ்நாட்டையும், தமிழனையும் உயர்த்தி 13 அமைச்சர்களைத் தந்து தேசமெங்கும் தமிழர் வேட்டியின் புகழ்பாட வைத்த தமிழர்களின் தங்கத் தலைவி, மத்தியிலிருந்த மதவெறி ஆட்சியை இறக்கி, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சி தந்த, நல்ல முறையில் நாட்டை வழிநடத்தி, வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் தந்த உன்னதத் தலைவி, காங்கிரஸின் விடிவெள்ளி, காவல் தெய்வம், அன்னை சோனியா காந்தி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைதியின் உருவாய், ஆக்கத்தின் வடிவமாய், கர்மவீரர் காமராஜரால் அடையாளம் காட்டப்பட்டு, அன்னை இந்திரா காந்தி கணினிப் புரட்சியை உருவாக்கிய அற்புதத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களால் ஆளாக்கப்பட்டு, இன்று அன்னை சோனியா காந்தி அவர்களால் தமிழக காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்ட, இளைஞர்களின் எழுஞாயிறாம், என்போன்ற ஏழையெளிய காங்கிரஸ் தொண்டன் வாழ்வு பெற, ஏற்றம் பெற வந்த தலைவராம் எங்கள் வழிகாட்டியும், எங்கள் சிகப்பு ரோஜா எம். கிருஷ்ணசாமி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கலைஞர். தந்தை பெரியாரின் சீடராம், பேரறிஞர் அண்ணாவின் வாரிசாம், கண்ணொளி தந்த தலைவராம், கண்ணகியின் சிலை கடற்கரையிலே அதே இடத்திலே அமைய ஏற்பாடு செய்த ஏற்றமிகு தலைவராம், வள்ளுவர் கோட்டம் அமைத்து, தென்கோடி முனையிலே அய்யன் வள்ளுவனுக்கு வானுயர சிலை வடித்து, கிறிஸ்துவம் என்கின்ற வங்காள விரிகுடா, இஸ்லாம் என்கின்ற அரபிக்கடல், இரண்டும் சங்கமிக்கின்ற இந்து என்கின்ற பெருங்கடலிலே கன்னியாகுமரியிலே வள்ளுவனுக்கு வானுயர சிலை. 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சூரிய கடவுளின் சிலையை நைல் நதியிலே கிரேக்கர்கள் அமைத்ததாக சரித்திரத்திலே படித்திருக்கிறேன். அதேபோல வள்ளுவனுக்கு சிலை அமைத்து எப்படிப்பட்ட புயலையும் பூகம்பத்தையும் கடந்து இன்று வள்ளுவர் எப்படி கம்பீரமாக நிற்கிறாரோ, அதேபோல பல்வேறு சோதனைகளைக் கடந்து சாதனை நாயகனாக, சரித்திர நாயகனாக, 5 ஆம் முறை முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத் தேர்தலிலே நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களாலே வர்ணிக்கப்பட்ட கதாநாயகன் என்ற தேர்தல் அறிக்கைக்கே கதாநாயகனான கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கடவுள் படி அளப்பான், ஆனால் கருவுக்குள் இருக்கின்ற சிசுவுக்கும் படியளக்கும் கலைஞரே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரையில் அத்துணைத் திட்டங்களுக்கும், நிதிநிலை அறிக்கையில் புத்துயிர் தந்துள்ள

தங்கள் பணியும், நிதி அமைச்சர் அவர்களுடைய பணியும் தொடர வேண்டுமென்று வாழத்த வயதில்லை, வரவேற்கிறேன், தலை வணங்குகிறேன்.

தளபதி. தமிழக அரசியலில் புரட்சியை ஏற்படுத்தி, இரவு பகல் பாராமல் அயாரது தேர்தல் பணியாற்றி தந்தைக்கு ஏற்ற தனயனாய், தரணியாள தகுதி பெற்ற தன்மானச் சிங்கமாய் உருவெடுத்திருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி), எங்கள் மாவட்ட அமைச்சராம், மக்கள் போற்றும் தலைவராம், எடுத்த பணி முடித்திடும், ஏவாமலே பாயும் ஏவுகணையாம் கலைஞருடைய வார்த்தை—பதுக்கல்காரர்களுக்கும் கடத்தல்காரர்களுக்கும் பாயும் புலியாம் எங்கள் அண்ணன் எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, அண்ணன் வேலு அவர்களுடைய அன்பு அண்ணனாம், என் மாமனாருமான திருப்பத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் கலைஞர் அவர்களால் 'வேணு' என்று அன்பாக அழைக்கப்படும் த. வேணுகோபால் அவர்களையும் வணங்குகிறேன்.

இந்த நேரத்திலே, தலைவர் கலைஞர்தான் எனக்குத் திருமணத்தை நடத்தி வைத்தவர் என்பதையும், அவரோடு ஆற்காட்டார் வந்து கலந்துகொண்டார் என்பதையும், என் திருமணத்தில்தான் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களை, தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக நேரடியாகச் சந்தித்தார்; அந்த நிகழ்ச்சியில்தான் ஒரு சிறு கருத்து பரிமாற்றம் நடந்தது என்பதையும் நினைவுபடுத்துவதில் நான் பெருமை அடைகின்றேன். இராசியிலே எனக்கெல்லாம் நம்பிக்கை உண்டு. கலைஞர் என்னுடைய திருமணத்தை நடத்தி வைத்ததால்தான் நான் இங்கு இந்த அவையிலே பேசுகிறேன் என்று மகிழ்கிறேன்.

என்னுடைய வெற்றிக்காக வருகை தந்து தொகுதி முழுவதும் சிறந்த உரையாற்றிய, காங்கிரஸின் தன்மானச் சிங்கம், இளைஞர்களின் எழுச்சிநாயகன், எல்லாத் தரப்பு மக்களும் போற்றும் இளம்பெரியார், மத்திய அமைச்சர் இ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களையும் வணங்கி, ஐயாவின் வழித் தோன்றலாய், மக்கள் தலைவரின் வாரிசாம், மகத்தான காரியம் ஆற்றிவரும் காங்கிரஸின் கலங்கரை விளக்கம், மத்திய அரசின் புள்ளியியல் துறை அமைச்சர் தலைவர் வாசன் அவர்களையும் வணங்குகிறேன்.

*பிற்பகல் 12–05*

கணினியே மனித உருவாய் பொருளாதாரத் துறையில் மகத்தான சாதனை படைத்து வரும் நடமாடும் வங்கியாக, கணினியாக நாட்டை நல்வழிப் பாதையில் நடத்தி வரும், 'தேர்தல் அறிக்கை சாத்தியமே, சலுகைகள் அனைத்தும் சாத்தியமே' என்று சமயத்தில் எடுத்துக் கூறிய மத்திய நிதி அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.



கர்ம வீரர் காமராஜர், காந்தி மகான் காட்டியவர், கல்விக்கண் தந்த தமிழ்க்கடவுள், காணக் கிடைக்காத சொத்து, ஆடு மேய்த்த சிறுவருக்கும், மாடு மேய்த்த சிறுவர்க்கு மதிய உணவு தந்த தலைவர், அருங்கல்வி தந்த மகான், நாட்டுமக்கள் எல்லோர்க்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு கிடைக்கும் வரை நாடே வீடாக, நாட்டுமக்களே தம் மக்களாக எண்ணி திருமணம்கூட செய்துகொள்ளாமல், 6 ஆண்டுகள் அகில இந்தியத் தலைவராக, 12 ஆண்டுகள் தமிழகத் தலைவராக, 9 ஆண்டுகள் தமிழக முதல்வராக, இரஷ்யாவின் சிவப்புக் கம்பள வரவேற்பு பெற்று, 20 கதர் வேட்டிக்கும், 13 ரூபாய்க்கும் மட்டுமே 20 கதர்ச் சட்டைக்கும், சொந்தக்காரராக வாழ்ந்த தலைவன் புகழ் போற்றுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் இயக்கத்தின் சட்டமன்றத் தலைவர், மனித நேயம் கொண்ட மகத்தான மனிதர் சுதர்சனம் நைனா அவர்களையும், கொறடா பீட்டர் அல்போன்ஸ் அவர்களையும், துணைத் தலைவர் யசோதா அவர்களையும், அண்ணன் ஞானசேகரன் அவர்களையும், டாக்டர் ஜெயக்குமார் அவர்களையும், டாக்டர் விஷ்ணுபிரசாத் அவர்களையும், அண்ணன் போளூர் வரதன் அவர்களையும் வணங்கி, எங்கள் இயக்கத்தின் தலைவர்களையும், சட்டமன்றத் தலைவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், கூட்டணித் தலைவர்களையும, மூத்த உறுப்பினர்களையும் இந்த முறை என்னோடு முதல் முறையாக அவைக்கு வந்துள்ள அனைவரையும் இந்த அவை நடக்கக் காரணமாக இருக்கின்ற அத்தனை பேரையும், பத்திரிகைத் துறை, தொலைக்காட்சித் துறை, காவல் துறை நண்பர்களையும் வணங்கி, என் கன்னி உரையைத் தொடங்குகின்றேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

என் திருமணத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் 1984–லே கூறிய வார்த்தை இன்று வரை நன்றாக நினைவு இருக்கிறது. நான் மிக, மிக என்று, எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். அந்த அளவுக்கு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவன் என்று கலைஞர் அவர்கள் சொன்னது இன்றைக்கும் எனக்கு பசுமரத்தாணி போல நினைவில் இருக்கிறது. இன்றைக்கு சிறுபான்மையினருக்கென்று ஒரு துறையை அமைத்து, அந்தத் துறையை தங்களுடைய கையில் வைத்துக் கொண்டிருக்கின்ற தானைத் தலைவருடைய இந்தத் துறையிலே நான் பேசுவதற்குப் பெருமைப்படுகிறேன். காலம் காலமாக ஒடுக்கப்பட்டிருந்த

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 43.19 கோடி ரூபாயை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியுள்ளதை வரவேற்கின்றேன். நடைபெற்ற தேர்தல் வாக்குறுதியிலே கூட்டணிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து முஸ்லீம்களுக்கும், கிறிஸ்த்துவர்களுக்கும் தனி ஒதுக்கீடு வழங்கப்படுமென்று கூறினோம். ஆந்திர அரசு தனி ஒதுக்கீடு வழங்கியது. ஆனால், இன்று அது கோர்ட்டிலே இருக்கிறது. ஆனாலும், நாம் அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்கியே தீரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1989–ல் மாண்புமிகு கலைஞர் அவர்கள், மொத்த ஒதுக்கீடு 50 சதவிகிதத்தில் 20 சதவிகிதத்தைப் பிரித்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அறிவித்தார். வன்னியர் உட்பட 108 சாதிகள் இதிலே அடக்கம். மீதமுள்ள 30 சதவிகிதத்திலே சிறுபான்மையினருக்கு முஸ்லீம்களுக்கு, கிறித்துவர்களுக்கு 10 சதம் ஒதுக்கிக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

11–7–2006 அன்று இந்த அரசு ஓர் ஆணையை வெளியிட்டு உள்ளது. முன்னாள் நீதிபதி ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் 6 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளார்கள். அதிலே ஒரு முஸ்லீம்கூட இல்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் பல இடங்கள் சீராக இல்லை. கட்டடங்கள் சீராக இல்லை. அவற்றையெல்லாம் புதுப்பித்துத் தரவேண்டும். இப்போதுள்ள விடுதிகளில், அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் அதை அதிகரித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு அரசு ஒதுக்கும் பராமரிப்புப் பணம் இன்னும் கொஞ்சம் அதிகரிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகளில் பி.எட்., படித்தவர்களை வார்டனாக நியமிக்கிறீர்கள். காலை, இரவு நேரங்களில் மாணவர்களுக்குப் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதற்கு உதவுவார்கள் என்று நினைத்தால், அந்த விடுதிகளிலே இரவு நேரங்களிலே சமையல்காரரும், வாட்ச்மேன் மட்டுமே தங்கி இருக்கிறார்கள். எனவே, வார்டன்கள் குடும்பத்தோடு தங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

1996–2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள், வன்னியர்களுடைய நலனைக் காக்க வேண்டுமென்று, ஆயிரம்காணி ஆளவந்தான் அறக்கட்டளை, செங்கல்வராய நாயக்கர் அறக்கட்டளை மற்றும் தமிழகத்திலே உள்ள வன்னியர்களுக்குச் சொந்தமான பொதுச் சொத்துகளையெல்லாம் ஒன்றிணைத்து, வன்னியர் அறக்கட்டளை வாரியம் என்று வாரியத்தை அமைத்தீர்கள். திரு. சந்திரசேகரன், ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரியை நியமித்தீர்கள். ஆனால், கடந்த 5 ஆண்டுகளாக அந்த நடவடிக்கை என்ன ஆனது என்று தெரியவில்லை. எனவே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் இதற்குப் புத்துயிர் தரவேண்டும்.

பிற்பகல் 12–10

காங்கிரஸ் கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவராக இருந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய தலைவராக இருந்த இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய சிலையை கிண்டியிலே வைத்துள்ள முதல்வரை அந்தச் சமுதாயமே பாராட்டுகிறது. நன்றி உணர்வோடு இருக்கிறது. அந்தச் சிலை கடந்த 5 ஆண்டுகளிலே பராமரிக்கப்படவில்லை. எனவே, அந்தச் சிலையைப் பராமரிப்பதற்கு முதல்வர் அவர்கள் உத்தரவிடவேண்டும். அவர் பிறந்த நாளை முன்னிட்டு 16–9–2006 அன்று அரசு விழாவாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் சமுதாயத்திற்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவேண்டும். வீட்டு மனைகள் வழங்க வேண்டும். அவர்கள் அந்தச் சமுதாயத்திலே இருக்கின்ற இளைஞர்கள் தொழில் செய்வதற்குப் பயிற்சியும் அரசு நிதியுதவியும் செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஒன்பது வாரியங்களை அறிவித்துள்ள முதல்வர் எதுவாக இருந்தாலும் ஒன்பதாக இருக்கக் கூடாது என்று பத்தாவது வாரியமாக கருமாரர்களுக்கு எல்லாம் நல வாரியம் அறிவித்தார். அதேபோல குயவர்களுக்கும் ஒரு நல வாரியம் அமைத்துத் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நேற்று திருவண்ணாமலையிலே ஆயிர வைசியர்கள் இலவசத் திருமணம் நடந்தது. அது என் தலைமையிலே நடந்தது. அங்கே பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே எங்களைச் சேர்க்க வேண்டும், இந்தக்

கோரிக்கை கலைஞர் அவர்களுடைய காதுக்கு எட்ட வேண்டும். இந்த அரசின் கவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்காக முதன்முதலில் குரல் கொடுத்தவர் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல சட்டமன்றத்திலே என்னுடைய குரல் முதலாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே, குரலை ஒலிப்பது என்னுடைய கடமை, நிறைவேற்றுவது கலைஞருடைய கடமை என்று சொல்லி என் தொகுதிக்கு வருகின்றேன்.

என் தொகுதியிலே நாகநதி அணைக்கட்டுத் திட்டம், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டு 5 ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டது. எனவே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

கடந்த ஆட்சியிலே கட்டப்பட்ட செண்பகத்தோப்பு அணைக்கட்டு இன்னும் முடிக்க முடியாத நிலையிலேயே கடந்த மழையிலே அதனுடைய கரைகள் எல்லாம் வெடிப்பு விழுந்து சீர்கெட்டிருக்கிறது. எனவே, இந்த அரசு, பொறியாளர் நிபுணர் குழுவை அமைத்து, அறிக்கை பெற்று, சீர்செய்து, அதன் பிறகே அந்த அணைக்கட்டு திறக்கப்பட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய கஸ்தம்பாடி பகுதியிலே 250 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தி விவசாயக் கல்லூரி அமைத்துத் தர முயற்சி எடுத்தார்கள். ஆனால், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே அது கைவிடப்பட்டுவிட்டது. எனவே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்தக் கோரிக்கையைப் பரிவோடு கவனிக்க வேண்டும்

போளூர் நகர் போக்குவரத்தைச் சீர்படுத்தி அங்கே ஒரு புதிய பஸ் நிலையம் அமைத்து, போளூர் நகரை நகராட்சியாக அறிவிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

சுடுகாட்டுப் பாதை இல்லாத பல கிராமங்கள் (மணியடிக்கப்பெற்றது) பல அரிசன காலனிகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** அங்கே எல்லாம் பாதைகளை அமைத்து, சிமெண்ட் சாலைகளை அமைத்துத் தரவேண்டும். கணியம்பாடி



ஒன்றியத்திலே, அமிர்தி பகுதியிலே உயிரியல் பூங்கா இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து வேலூர் வரை வேறு எங்கேயும் இல்லை. ஆனால், அந்தப் பூங்காவிலே இப்பொழுது ஒரு மானும், ஒரு மயிலும்தான் இருக்கிறது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பூங்காவை சீர்படுத்திச் செயல்பட வைக்க வேண்டும்.

சேதரம்பட்டு ஊரிலேயிருந்து ஆரணி செல்கின்ற பாதையில் கமண்டல நதி செல்கின்றது. அதன் குறுக்காக ஒரு பாலம் கட்டித் தரப்பட வேண்டும். ஜமுனாமரத்தூர், நம்மியம்பட்டு புதூரில் ஒரு பாலம் கட்டித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வல்லம் கிராமத்தில் நாகநதி கிளை குறுக்கே ஒரு பாலம் கட்டித் தர இந்த அரசு ஏற்பாடு செய்து தரவேண்டும். ஜமுனாமரத்தூர் மலை வாழ் மக்கள் பெரும்பகுதியாக வாழ்கிற அந்தப் பகுதியை சுற்றுலாத்தலமாக அறிவித்து அங்கு தங்கும் விடுதி, உணவு விடுதி ஆகியவற்றை மேம்படுத்தி அங்கே இருக்கின்ற ஏரியிலே படகு சவாரியைச் சீர்ப்படுத்த வேண்டும்.

ஜமுனாமரத்தூரிலே அரசுக் கூட்டுறவுத் தேன் சேகரிப்பு நிலையம் ஒன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அமைக்கப்பட்டது. அதில் கடந்த ஆட்சியிலே ஊழல் செய்யப்பட்டு பல இலட்சம் கொள்ளையடிக்கப்பட்டு மூடு விழா நடத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவுத் தேன் சேகரிக்கின்ற நிலையத்தை மீண்டும் திறக்க வேண்டும்.

ஜமுனாமரத்தூர், மலைவாழ் மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதியிலே ஒரு சர்ட்டிஃபிகேட் வாங்க வேண்டும் என்று சொன்னால் 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் காத்துக் கிடக்கின்றார்கள். எனவே, மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்று வழங்குவதற்கு ஒரு காலக்கெடுவை இந்த அரசு நிர்ணயிக்க வேண்டும்.

ஜமுனாமரத்தூரிலே S.C. S.T. மக்களுக்கு சிமெண்ட் சாலை, புதிய குடியிருப்புகள், கழிவறை வசதி, போன்றவை செய்து தரப்பட வேண்டும். அங்கே குடிநீர் வசதி சீர்செய்யப்பட வேண்டும். சாமை, வரகு, சோளம் மட்டுமே பயிரிடுகின்ற அந்த மக்களுக்கு 100 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடையை ஏற்படுத்தித் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார், அதிகம் பேசாதீர்கள்.

*பிற்பகல் 12–15*

**திரு. பெ.சு. விஜயகுமார்:** திருமண உதவித் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கிராமத்திலே இருக்கிற மக்கள், அந்த

விதிமுறைகளைத் தெரிந்துகொள்ளாமல் திருமணம் முடிந்ததற்குப் பிறகுதான் மனு கொடுக்கவே செல்கிறார்கள். எனவே, தயவுசெய்து இந்த அரசு, திருமணம் முடிந்து ஒரு 10 நாட்கள், 15 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

படவேடு ரேணுகாம்பாள் ஆலயம் சுற்றுலாத் துறையின் மூலமாகவும், அறநிலையத் துறையின் மூலமாகவும் சுத்தம் செய்யப்பட்டு, மருத்துவ வசதி, தங்கும் விடுதி, உணவு விடுதி, குளியல் அறை, கட்டணக் கழிவறை அமைத்துத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விஜயகுமார், இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். 16 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. பெ.சு. விஜயகுமார், அதிகம் பேசாதீர்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** கருவறையில் இருக்கிற சிசுவுக்கு வேண்டுமானால் கழிவறை இல்லாமல் இருக்கலாம். ஆனால், இந்த மனித சமுதாயம் கழிவறை இல்லாமல் இருக்க முடியாது. எனவே, அந்தச் சுகாதாரத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போளூர், களம்பூர், பெண்ணாத்தூர், படவேடு ஆகிய ஊர்களில் அரசு, கட்டணக் கழிப்பிடம், குளியலறை நவீன வசதியுடன் செய்து தர வேண்டும்.

போளூர் நகரிலே செயல்படுகின்ற அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு நகரிலும், படுக்கை வசதி புறநகரிலும் இருக்கிறது. அங்கே தினமும் 1,100 நோயாளிகள் வருகிறார்கள். வந்து சிகிச்சைப் பெறுகிறார்கள். அங்கே குறைந்தது எட்டு டாக்டர்கள் இருக்க வேண்டும். ஆனால், (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு டாக்டர்கள்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நன்றி சொல்வதற்கே நிறைய நேரம் எடுத்திருக்கிறீர்கள்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** நம்மியம்பட்டு மலை ஜாதி வாழ் மக்களுக்காக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே ஜன்னல் கண்ணாடிகள் எல்லாம் உடைந்து போய் இருக்கின்றன. டாக்டர் உட்கார்வதற்குக்கூட இருக்கை கிடையாது. எனவே, தயவுசெய்து, அங்கே வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டும். மருந்து stock வைக்கின்ற அறைகூட கரையான் பிடித்து கிடக்கிறது. எனவே, கனிவோடுக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கல்வாசல் அருந்ததி பாளையத்திலிருந்து கேளூருக்குச் செல்வதற்கு மாணவர்கள், பொது மக்கள் மூன்று கிலோ மீட்டர் வரப்பிலே நடந்து செல்கிறார்கள். அந்த வரப்பை, பாதையாக மாற்றித் தர வேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் வங்கியிலே இன்றைக்கு விவசாயிகளுக்கு 1,800 கோடி ரூபாயை தள்ளுபடி செய்திருக்கிற மாண்புமிகு கலைஞர், கூட்டுறவுத் துறையிலே வீடு கட்டுவதற்காக வாங்கிய அந்தக் கடன்காரர்களுக்கு வட்டியை மட்டுமாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விஜயகுமார். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் 20 பேருக்கு நன்றி சொன்னீர்கள். எனக்கு நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். இல்லை, initial 'பெ.சு.' என்பதாலேயே ரொம்ப நேரம் பேச முடியுமா?

**திரு. பெ.சு. விஜயகுமார்:** வேலூரில் சிப்பாய் கலகத்தின் 200 ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்காக என்னென்ன திட்டங்களையோ அறிவித்திருக்கிறார்கள். சில ஆயிரம் தியாகிகள்—தேசப் பிரச்சினை—சில ஆயிரம் தியாகிகள் மட்டுமே இன்றைக்கு பென்ஷன் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே எட்டு தியாகிகள், 85 வயதைத் தாண்டியவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே போராடிப் போராடி ஓய்ந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், மத்திய அரசு சிபாரிசு செய்திருக்கிறது. இன்றைக்கு அவர்கள் High Court-லே வழக்கு தொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு கலைஞர் அவர்கள், அவர்கள் கோரிக்கையை கனிவோடுப் பரிசீலித்து, அவர்களுக்கு பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் சில ஆண்டுகளே அவர்கள் உயிரோடு இருப்பார்கள் என்பதை முதல்வர் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, சாத்தனூர் அணைக்கட்டு திருவண்ணாமலை பகுதியிலே இருக்கிறது. காமராஜர் அவர்களிடம் தியாகி அண்ணாமலைப் பிள்ளை என்கின்ற அந்தப் பெரியவர் அணை கட்ட வேண்டுமென்று சொன்னார். அந்த அணை கட்ட வேண்டிய இடத்திற்குச் சென்று காமராஜர் பார்க்கிறார். அணைக்கட்டு கட்டுவதற்கு சாத்தியமில்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால், காமராஜர் அவர்கள், அங்கே ஆடு மேய்ப்பவர்களை, மாடு மேய்ப்பவர்களை அழைத்து எந்த அளவிற்கு மழை காலத்திலே தண்ணீர் தேங்கும் என்று கேட்டு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Flash back எல்லாம் தேவையா என்கிறேன்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** அந்த அணையைக் கட்டிக் கொடுத்து இன்றைக்கு திருவண்ணாமலைக்கே தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அந்த அணைக்கட்டு கட்டிய அந்த மகானுக்கு அங்கே சிலை இல்லை. எனவே, சாத்தனூர் அணைக்கட்டிலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தலைவர் காமராஜர்மீது பற்றும், பாசமும், நேசமும் வைத்துக்கொண்டிருக்கிற, அவரைத் தலைவராகப் போற்றுகின்ற கலைஞர் அவர்கள் அவருடைய திருவுருவச் சிலையை சாத்தனூர் Dam–லே வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, தி.க. ராஜா. (குறுக்கீடு) இல்லை, நன்றி, ஏற்கெனவே 20 பேருக்கு நன்றி சொல்லிவிட்டார். எனக்கு மட்டும் சொல்லமாட்டேன் என்கிறார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** பேரவைத் துணைத் தலைவருக்கும் இந்த அவையிலே உள்ள அத்தனை பேருக்கும் நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா.

***திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, வணிக வரி, பதிவுத் துறை, முத்திரைத் தாள்கள் போன்ற மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற சமூக நீதிக்காக ஒரு இயக்கத்தை கண்டு, 108 சமுதாயங்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டை பெற்றுத் தந்து, சமூக நீதிப் போராளியாய் வாழ்ந்து கொண்டிருக்கிற மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய இந்திய நாட்டினுடைய சுகாதாரத் துறை அமைச்சர், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழிநடத்துகின்ற அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–20*

மத்திய அரசு உயர் கல்வி நிறுவனங்களான I.I.T., I.I.M., போன்ற நிறுவனங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 27 சதவிகித



இட ஒதுக்கீடு, மத்திய அரசு சட்டம் இயற்றிக் கொண்டு வரவேண்டும் என்று, இந்த மாமன்றத்திலே தீர்மானத்தை இயற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் எப்போதும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்குப் பிறப்பிடமாக இருந்து இருக்கிறது. தந்தை பெரியார், மகாத்மா பூலே, அண்ணல் அம்பேத்கர், டாக்டர் கலைஞர், மருத்துவர் அய்யா போன்றவர்கள் எல்லாம், இட ஒதுக்கீட்டிற்காகப் போராடி, இன்றைக்கு 108 சமுதாயங்கள் ஒன்றிணைந்து 20 சதவிகித இட ஒதுக்கீட்டை, மிகப் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலே சேர்த்து, இன்றைக்குத் தாழ்ந்து கிடந்த இந்தச் சமுதாயத்தை உயர்த்தும் நிலைமைக்கு, உயரச் செய்தவர்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இங்கே நன்றியோடு நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய சூழ்நிலையிலே, மத்திய அரசின் வேலைவாய்ப்பிலே 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு—மண்டல் கமிஷன் அறிக்கை பரிந்துரையிலே ஏற்று இருந்தாலும்கூட, உயர் கல்வி நிறுவனங்களிலே 27 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த முடியாமல் ஆதிக்கச் சாதிகளுடைய சூழ்ச்சியாலே இன்றைக்கு நமக்குக் கிடைக்க இருக்கின்ற அந்த 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பது, தாமதப்பட்டுவிடுமோ என்ற ஒரு ஐயம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது.

கடந்த வாரங்களிலேகூட டாக்டர் கலைஞர் அவர்கள், மத்திய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். உடனடியாக 27 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்தவேண்டும் என்று மத்திய அரசுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், 1871–லே திரு. W.R. கார்னில்க்ர் என்ற வெள்ளைக்கார அதிகாரி ஒருவர் அரசுக்கு ஒரு பரிந்துரை செய்து இருக்கிறார். நாட்டின் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும், பார்ப்பன கண்ணாடி கொண்டு பார்ப்பது அரசுக்கு நன்மை தராது என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது சொல்லவில்லை, அவர் 1871–லே சொல்லி இருக்கிறார்.

மேலும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், அரசு பதவிகளில் ஒரு சாதி மட்டும் ஆதிக்கம் செலுத்துவது, மற்ற சாதிகள் வெளியிலே இருப்பது சரியான முறையாகாது. அனைத்துச் சாதி மக்களுக்கும் அரசு பதவிகளிலே

பங்களிப்பு வழங்கவேண்டும். ஆதிக்கச் சாதியின் ஏகபோக ஆக்கிரமிப்பைக் கட்டுப்படுத்துவது ஒரு அரசினுடைய கடமை என்று அந்தக் காலத்திலேயே சொல்லி இருக்கிறார்கள். இவ்வளவு காலமாகியும்கூட இன்னும் இட ஒதுக்கீட்டிலே, இன்னும் உயர்கல்வியிலே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் வழங்கப்படவில்லை என்று சொன்னால், நாம் எங்கே போய்க்கொண்டு இருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே எல்லோரும் ஒருமித்த குரல் கொடுத்து, 27 சதவிகித இட ஒதுக்கீட்டை அடைய, இங்கே இருந்து வெளிநடப்புச் செய்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வி, வேலைவாய்ப்பிலே குறைவான எண்ணிக்கையிலே உள்ள இஸ்லாமிய பெருமக்களுக்கு இட ஒதுக்கீடு அவசியம் வழங்கப்பட வேண்டும். அதேபோல, கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம். தற்போது நிதிநிலை அறிக்கையிலே சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்து இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி பாராட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு, சமூக நீதிக்கு எதிரானது, அனைத்திந்திய அண்ணா தி.மு.க என்பதை இந்த நாடே அறியும். அ.தி.மு.க.வினருக்கும் தெரியும். இந்த நிலையில் அ.தி.மு.க. இட ஒதுக்கீட்டிற்காக கடந்த கால ஆட்சியிலே எதையும் செய்யவில்லை. ஆனால், இங்கே உண்மைக்கு மாறாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–25

இனி வருங்காலங்களிலாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே பங்கு கொள்ள வேண்டுமென்று பட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அன்போடு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். தமிழ்நாட்டிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு அரசு வழங்குகின்ற உணவுக் கட்டணம், கல்விக் கட்டணம் என்பது மிகக் குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் போய் பார்க்கின்றபோது தலையிலே எண்ணெய் இல்லை, பாய் இல்லை, அவர்களுக்கு குவளை இல்லை, தட்டு இல்லை. இதுமாதிரி நிலைமைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். கட்டணங்கள் உயர்த்தித் தரப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகள்.....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**•மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் ரூ.135/-லிருந்து ரூ.180/- ஆக உயர்ந்தது. மீண்டும் 1997 ஆம் ஆண்டு ரூ.180/-லிருந்து ரூ.225/-ஆக கழக ஆட்சி காலத்தில்தான் பள்ளி மாணவர்களுக்கு உணவுக் கட்டணம் உயர்த்தப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், கல்லூரி மாணவர்களுக்கான உணவுக் கட்டணம் 1997 ஆம் ஆண்டிலிருந்து ரூ.250/-ஆக உயர்ந்தது. பின்னர் 1997–ல் ரூ.300/-ஆகவும் 1998–ல் ரூ.400/-ஆகவும் உயர்த்தப்பட்டது கழக ஆட்சி காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் எந்தவித உணவுக் கட்டணமும் அவர்கள் உயர்த்தவில்லை. மீண்டும் உணவுக் கட்டணம் உயர்த்துவதற்குரிய கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுடைய விடுதிகள் பல்வேறு பகுதிகளிலே வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் போதுமான சௌகரியங்கள் இல்லை. குடிதண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. அப்படியும் விடுதி இருந்தால் விடுதியைச் சுற்றி முட்புதர்கள் இருக்கின்றன. இந்த சுற்றுப்புறச்சூழல்கள் எல்லாம் கெட்ட சூழல்களாக இருக்கின்றன. இந்த நிலைமை எல்லாம் இந்த ஆட்சியிலே மாறப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. எனவே, இந்த மாணவர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு உதவி பெறுகின்ற பள்ளி, அது மெட்ரிகுலேஷன் பள்ளியாக இருந்தாலும் சரி, தமிழ் வழிக் கல்வி பள்ளிகளாக இருந்தாலும், ஆசிரியர் பணி நியமனம் என்ற அதிகாரம் அவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது நிர்வாகத்தினிடத்திலே. ஆனால், அவர்கள் அங்கே இடஒதுக்கீட்டு முறையை கடைப்பிடிக்கிறார்களா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஒருவர் சேரக் கூடிய அந்த ஆசிரியர் பணியிடத்திலே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை நியமனம் செய்து, அவர் அந்த விஷயம் வெளியே தெரிந்து,

சம்பளம்கூட வழங்கப்படாத நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி என்ற பள்ளியிலே ஆசிரியர் பணி நியமன இடத்திலே மிகப் பிற்படுத்தப்பட்ட இடத்திலே, பிற்படுத்தப்பட்டவரை நியமித்து இன்றைக்கு மோசடி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழகம் முழுவதும்—இதுபோன்ற பள்ளிகளிலே இதுபோன்ற மோசடிகளைக் களைவதற்கு ஒரு குழுவினை நியமித்து, எங்கெல்லாம் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படவில்லையோ அங்கெல்லாம் இடஒதுக்கீட்டினை அமல்படுத்துகின்ற நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தகால ஆட்சியிலேயே கலைஞர் அவர்கள் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றாத அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த உத்தரவு இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எனவே, அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் நான் ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டுமில்லையா?

**திரு. தி.க. ராஜா:** இரண்டு துறைகள், அய்யா. இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அந்த நேரத்திற்கு உட்பட்டுதான் பேச வேண்டும்.

**திரு. தி.க. ராஜா:** பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்ற சீருடை என்பது பள்ளியினுடைய இறுதி ஆண்டிலே வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பள்ளியின் இறுதி ஆண்டிலே வழங்கினால், அந்த மாணவர்கள் எப்படி பயனடைவார்கள். எனவே. பள்ளியின் துவக்க ஆண்டிலே வழங்கப்பட வேண்டும். அதுவும் இரண்டு ஜோடி சீருடைகளாக வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கடந்த 5 ஆண்டு காலமாக எம்.பி.சி.—களுக்கு கலைஞர் ஆட்சியிலே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆட்சியிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய தயவோடு ஆட்சிக்கு வந்த அந்த ஆட்சியாளர்கள், அந்த மக்களை வஞ்சித்து விட்டார்கள். பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனுக்கு நிதி ஒதுக்கீடு



செய்யாமல், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தையே இரத்து செய்துவிட்டார்கள். மீண்டும் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பட்டா வழங்குவதற்கு நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–30

அதுமட்டுமல்ல, ஈமச் சடங்கு நிதி. கிராமத்திலே பெரியவர்கள், முதியவர்கள் இறந்துபோய்விட்டால் அண்ணன், தம்பிகளே எடுப்பதற்குப் போட்டி, நீயா, நானா என்று. இந்த அவல நிலை எல்லாம் மாற வேண்டும் என்று சொல்லித்தான் கலைஞர் அவர்கள் ஈமச் சடங்கு நிதியாக 500 ரூபாய் வழங்கினார்கள். அது கிராம நிர்வாக அதிகாரி மூலமாக அந்த முதியோருடைய பிணத்தை எடுப்பதற்காக வழங்கப்பட்ட அந்த ஈமச்சடங்கு நிதியைக்கூட கடந்த கால ஆட்சியிலே நிறுத்திவிட்ட கொடுமை மாறி மீண்டும் கலைஞர் அவர்கள் அந்த ஈமச் சடங்கு நிதியை இப்பொழுது தந்திருக்கிறார்கள். அதற்காக நான் கலைஞர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருகின்றேன்.

மேலும், வணிக வரித் துறையிலே ஒரு சில விஷயங்களை நான் இங்கே சொல்லியாக வேண்டும். இங்கே மாவுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இந்த மாவு வகை என்பது கடலை மாவு, பட்டாணி மாவு, உளுந்து மாவு. ஆனால், பருப்புக்கு வரி இல்லை. மாவுக்கு வ்ரி இருக்கிறது. இந்த மாவை எல்லாம் சாதாரண கடைக்காரர்கள், தெரு ஓரக் கடைகளிலே போண்டா, பஜ்ஜி விற்பவர்கள்தான் உபயோகப்படுத்துகிறார்கள். இந்த மாவு பண்டத்தின்மீது இருக்கின்ற இந்த இரண்டு சதவிகித வரியை, டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு விலக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், கரும்பு வெல்லத்திற்கு வரி. கலைஞர் ஆட்சியில் 5–8–1996–லே வெல்லத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், விவசாயிகளின் நண்பன் என்று சொல்லிக் கொள்கிற கடந்தகால ஆட்சியிலே 27–3–2002–லே கரும்பு வெல்லத்திற்கு 4 சதவிகித வரியைப் போட்டு ஏழை விவசாயிகள் வயிற்றிலே அடித்தார்கள். எனவே, மீண்டும் கலைஞர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கரும்பு என்பது ஏழை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள். இதன் மேலே இருக்கின்ற வரியை, 4 சதவிகித வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று டாக்டர்

கலைஞர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த வரியை இரத்து செய்வதன்மூலமாக வெறும் இரண்டு கோடி ரூபாய்தான் இந்த அரசுக்கு இழப்பு ஏற்படும். எனவே, கரும்பு வெல்லத்தின் மீதான வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

அதோடுமட்டுமல்லாமல், ஜரிகை, நெய் ஆகியவற்றுக்கான வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, சாம்பிராணிக்கு வரி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், உடனடி சாம்பிராணிக்கு வரி போட்டிருக்கிறார்கள். எனவே, அந்த வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. தி.க. ராஜா:** ஒரே நிமிடம். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் வரி வசூல் இன்னும் வசூலிக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. விற்பனை வரியின் பெரும் பகுதி, பல சிக்கல்களுக்கு இடையே நீதிமன்றத்திலே வழக்காடப்பட்டு நீதிமன்ற நிலுவையில் இருக்கிறது. இதற்கு ஒரு புதிய திட்டத்தை, புதிய சமாதானத் திட்டத்தை உருவாக்கி வரி பாக்கியை வசூலிக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி இந்த அரசுக்கு ஒரு நல்ல யோசனையைச் சொல்கிறது. வரி வசூல் செய்வதற்கு ஒரு தனிப் பிரிவை உருவாக்க வேண்டும். அந்தப் பிரிவுக்கு நேர்மையான, திறமையான அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத்தாள் கட்டணங்களைக் குறைத்து கூடுதல் வருவாயை ஈட்ட முடியும். வரி ஏய்ப்பைத் தடுப்பதன்மூலமாக இந்தக் கட்டணங்களில் கிடைக்கும் வருவாய் அதிகரிக்கும். ஆவணங்கள் அனைத்தும் மின்னணு மயமாக்குதல், சேவைகள் அனைத்தும் கணினி வழியில் அறிமுகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின்மூலமாக நாம் வருவாயை ஈட்ட முடியும். கர்நாடக மாநிலத்திலே, பூமி என்னும் ஒரு திட்டத்தின்கீழே அதை நடைமுறைப்படுத்தி எல்லா பத்திரப் பதிவுகளும் மின்னணு மயம் ஆக்கியதாலே காலதாமதம் மிச்சமாகியது, இலஞ்சமும் குறைந்து வருவாயும் பெருகி இருக்கிறது. இதேபோல, மராட்டிய மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற மாநிலங்களில் எல்லாம் புதுமைகளைப் புகுத்தி வருவாயை ஈட்டியிருக்கிறார்கள். அதையும் தமிழக அரசு பின்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக சொத்து மதிப்பீடு ஆணையம் என்ற ஒரு ஆணையத்தை உருவாக்கி, ஊரக மற்றும் நகர்ப்புறச் சொத்துக்களை ஆண்டுதோறும் மதிப்பீடு செய்கின்ற முறையைக் கொண்டுவந்தால் இந்த அரசுக்கு வரி



வருவாய் கிட்டும் என்பதை நான் இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புற வீட்டுமனைப் பத்திரங்கள் எல்லாம் பதிவு செய்யும்போது, அங்கே ஊராட்சி மன்றத் தலைவர்கள் NOC வாங்கினால்தான் பத்திரப் பதிவு செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. இதனால் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, அந்த முறையை இரத்து செய்ய வேண்டும்....*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் முடிக்கமாட்டீர்கள். நீங்கள் பெங்களூருக்குப் போய்விட்டீர்கள். திரும்ப தமிழ்நாட்டுக்கு வரவேண்டும். திருப்பத்தூருக்கு வரவேண்டும். ஒரே வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தொகுதியைப் பற்றி ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று திருப்பத்தூரிலே முன்னாள் D.G.P. தேவாரம் அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியிலே நானும் கலந்துகொண்டேன். அது என்னவென்று சொன்னால், 1980 ஆம் ஆண்டு திருப்பத்தூரிலே, தீவிரவாதிகளுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட மோதலில் 3 போலீஸ் அதிகாரிகள் குண்டு வீச்சிலே கொல்லப்பட்டார்கள். அதற்கு 26 ஆண்டுகாலமாக தொடர்ந்து நாங்கள் நினைவஞ்சலி செலுத்தி வருகிறோம். இது ஏன் ஏற்பட்டது என்று சொன்னால், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள்.....

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. தி.க. ராஜா:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை. வேலைவாய்ப்பு வேண்டும். எங்கள் பகுதிக்கு இதுவரையிலும் வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய ஆலைகள் உருவாக்கப்பட வில்லை. இதனால் தீவிரவாதிகள் உருவானார்கள். 26 வருடங்களுக்கு முன்பு, அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே SIPCOT–ஐ கொண்டுவருவேன் என்று சொன்னார்கள். படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுப்பேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு கலைஞர் வந்தார்கள். ஓர் ஐந்தாண்டு, இரண்டு ஐந்தாண்டு நிதி நிலைமை மோசமாக இருக்கலாம். ஆனால், 26 ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஒரு தொழிற்பேட்டை வரவில்லை. ஒரு அரசுக் கல்லூரி இல்லை.

எங்கள் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று, கால் நூற்றாண்டு காலமாகக் கோரிக்கை வைத்துக்கொண்டு இருக்கின்றோம். எந்த ஒரு காரியமும் திருப்பத்தூர் பகுதியிலே நடைபெறவில்லை. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் யாரும் இதுபற்றி, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்கூட ஏனோ பதில் சொல்ல மறுக்கிறார்கள். எங்களை மாற்றாந்தாய் பிள்ளைபோல பார்க்கிறார்கள். எனவே, நான் இங்கே எங்களுடைய மாவட்ட அமைச்சரான அண்ணன் ஆற்காட்டாரை கேட்டுக்கொள்கிறேன். அவர் சிறு தொழில்கள் துறையின்மூலமாக எங்களுடைய பகுதியிலே தொழிற்பேட்டை உருவாக்கி, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தருவாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை ஒரு அரசுக் கல்லூரி இல்லை; Polytechnic இல்லை; ஒரு Teacher Training கல்லூரி இல்லை; அதை உருவாக்கித் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனையைத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டேன். அதற்கும் பதில் இல்லை. இப்படி மௌனமாக இருந்தால், இது சம்மதத்திற்கு அறிகுறியா அல்லது என்னுடைய கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லையா என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சம்மதத்திற்கு அறிகுறி. அடுத்து, திரு. வே. மாரிமுத்து. (குறுக்கீடு)

**திரு. தி.க. ராஜா:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. திரு. ராஜா, சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** எனவே, எனது கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

***திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மைத் துறை, வணிக வரி உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்காக அனுமதி வழங்கிய தங்களுக்கும், நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைப் பதிய



வைக்க விரும்புகிறேன். வணிக வரித் துறை என்பது, அரசின் மொத்த வருவாயில் ஏறத்தாழ 70 சதவிகிதம் அரசுக்கு வருவாயை ஈட்டித் தரக்கூடியது. கடந்த 2005 ஆம் ஆண்டு, ஏறத்தாழ 16,500 கோடி ரூபாயை வசூலித்துக் கொடுத்திருக்கக்கூடிய துறை, இந்த வணிக வரித் துறை. வரக்கூடிய ஆண்டிற்கு ஏறத்தாழ 20,000/- கோடி ரூபாயை ஈட்டுகிற அளவிற்கு, வசூலிக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுத்து வரக்கூடிய ஒரு துறை என்கிற முறையில் இந்தத் துறையைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 3,000-க்கும் மேற்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றன. இதிலும் குறிப்பாக, வரி வசூலில் நேரடியாக ஈடுபடக்கூடிய, வணிக வரி அலுவலர் பணியிடம் என்பது ஏறத்தாழ 250 பணியிடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றன. எனவே, அத்தகைய பணியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, துணை வணிக வரி அலுவலர் பணியிடம், ஏறத்தாழ 300 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல, இந்தத் துறைகளில் உள்ள பலதரப்பட்ட பணியிடங்களில் ஏறத்தாழ 2,500 பணியிடங்கள் காலியாக உள்ள சூழலில், வணிக வரித் துறைமூலம் இந்த ஆண்டு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாயை வசூலிக்க வேண்டும் என்று சொன்னால், இத்தகைய பணியிடங்களை உடனடியாகப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, VAT—மதிப்புக் கூட்டு வரி. நிதிநிலை அறிக்கையிலே, 2007 ஜனவரி மாதம் முதல், அமலுக்கு வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, இதை மாற்றி, நிதியாண்டுக் கணக்கின் அடிப்படையில், 1–4–2007 முதல் இதை அமல்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கக்கூடிய பெரும்பகுதியான வணிகர்கள் இதைத்தான் எதிர்பார்க்கிறார்கள் என்கிற தகவலையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

அதேபோல கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்த வணிக வரித் துறையில் பணியாற்றக் கூடிய பலருக்கு பதவி உயர்வு என்பது மறுக்கப்பட்ட சூழலில், புதிய அரசு ஏற்பட்டவுடன் அத்தகைய பணியை தற்போது தொடங்கியிருக்கிறது. எனவே, பணி உயர்வு வழங்கப்பட வேண்டிய அனைவருக்கும் உடனடியாக பணி உயர்வு என்பது வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வணிக வரித் துறை மூலம் ஏறத்தாழ 6,000 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு வரி பாக்கி வர வேண்டியது இருக்கிறது. இதை

வசூலிப்பதற்கு சமாதானத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்கிற அறிவிப்பை நிதிநிலை அறிக்கையிலே அரசு அறிவித்திருக்கிறது. எனவே, அதை உடனடியாக அமல்படுத்தி, அரசுக்கு வர வேண்டிய வரி வருவாயை உடனடியாக வசூலிப்பதற்குண்டான பணியை அரசு மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடலை, பயறு, சாம்பிராணி உள்ளிட்ட பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். ஆனால், இதிலிருந்து தயாராகக்கூடிய மாவு மற்றும் உடனடி சாம்பிராணி, கரும்பு, வெல்லம் உள்ளிட்ட பொருட்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். அதேபோல, ஜரிகை, நெய் இவற்றிற்கும் வரிவிலக்கு அளித்து உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, திருப்பூரில் பனியன் உற்பத்தி ஆகிறது. வெளிநாட்டுக்கு என்று தனியாக உற்பத்தி ஆகிறது. உள்நாட்டுக்கு என்று தனியாக உற்பத்தி ஆகிறது. உள்நாட்டுக்கு என்று உற்பத்தியாகக் கூடிய பனியன்களுக்கு குஜராத், டெல்லி போன்ற மாநிலங்களில் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பனியன் 100 ரூபாய்க்குள் இருக்கக்கூடிய பனியன்களுக்கு குஜராத், டெல்லி போன்ற மாநிலங்களில் அளிக்கப்பட்டிருக்கிற அந்த வரிச் சலுகையை, திருப்பூரிலே உற்பத்தியாகக்கூடிய பனியனுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, ‘C’ form இல்லாத நிறுவனங்கள் 10 சதவிகிதம் வரி செலுத்தி, 9 சதவிகிதத்தை திரும்பப் பெற்றுக் கொள்கிற நிலை தற்போது இருக்கிறது. எனவே, அதை மாற்றி 1 சதவிகிதம் வரி செலுத்தினால் போதும் என்கிற நிலையை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, கல்வி, வேலைவாய்ப்பு முழுமையாகக் கிடைப்பதற்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும். அதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவிகள், தங்கிப் பயிலுகின்ற விடுதி என்பது தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே மிக மோசமான நிலையில் இருக்கின்றன. கடந்த காலங்களில் புதிய விடுதிகள் கட்டுவதில் அக்கறை செலுத்தாத காரணத்தினாலே, இன்றைக்கு அத்தகையச் சூழல் நிலவுகிறது. எனவே, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற புதிய விடுதிகளைக் கட்டுகிற நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல விடுதிகளைக் கட்டுகிறபோது



மாணவர்களுக்கு தனி விடுதியும், மாணவிகளுக்கு தனி விடுதியும் உருவாக்க வேண்டும்.

அதேபோல, கிராமப்புறங்களிலிருந்து நகரங்களுக்கு வந்து தங்கி படிக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், விடுதியில் தங்கிப் படிக்க வேண்டுமென்று கேட்கிறபொழுது, கேட்கக்கூடிய அத்துணை மாணவர்களுக்கும், விடுதியில் இடம் கிடைப்பதற்குண்டான சூழலை அரசு உருவாக்க வேண்டும். அதேபோல, விடுதியிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுக்கு உணவுக்காக அரசு வழங்கக்கூடிய தொகை என்பது போதுமானதாக இல்லை. கடந்த ஆண்டு கணக்குப்படியே, சிறைச்சாலையில் இருக்கக்கூடிய ஒரு கைதிக்கு, உணவுக்காக 18 ரூபாய் அரசு செலவு செய்கிறது. ஆனால், விடுதியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 10 ரூபாய்தான் அரசு செலவு செய்கிறது என்று சொன்னால், இந்தத் தொகையில் தரமான உணவை மாணவர்களுக்கு வழங்குவது சாத்தியம் இல்லை. எனவே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கக்கூடிய, விடுதியிலே தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு, உணவுக்காக வழங்கக்கூடிய தொகையை அரசு அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு scholarship வழங்குகின்ற முறை என்பது கல்வியாண்டின் இறுதியில் தற்போது வழங்கப்படுகிறது. அதை மாற்றி கல்வியாண்டின் துவக்கத்திலேயே அவர்களுக்கு scholarship கிடைப்பதற்குண்டான பணியை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், I.P.S., I.A.S., Coaching Centre தமிழகத்திலே இன்றைக்கு சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. எனவே, கன்னியாகுமரியிலிருந்து சென்னை வருவதும், தமிழகத்தின் மற்ற நகரங்களிலிருந்து சென்னை வந்து படிப்பதும் சாத்தியம் இல்லை. எனவே, சென்னையில் இருக்கக்கூடிய ஒரு Coaching Centre–ஐ மாற்றி தமிழகத்தினுடைய 4 மையங்களில் I.A.S., I.P.S., Coaching Centre–களை உருவாக்குவதற்கு மாநில அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தென் மாவட்டங்களில் கள்ளர்கள் பள்ளி இயங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே அந்தப் பள்ளிகளுக்குப் போதுமான நிதி ஆதாரத்தை அரசு வழங்கவில்லை என்கிற குறை இருக்கிறது. எனவே, அத்தகைய பள்ளிகளுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை மாநில அரசு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

அதேபோல, முத்திரைத்தாள் கிடைப்பதில் இன்றைக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தச் சிரமத்தை மாற்றுவதற்குக் கருவூலத்திலே பணம் கட்டி Challan–ஐப் பெற்றுக்கொண்டு, 10 ரூபாய் பத்திரத்தில் பதிவை செய்துகொள்வதற்குண்டான ஒரு மாற்றத்தை அரசு உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தமிழ்நாட்டில் பத்திர எழுத்தர், நகல் எழுத்தர், தட்டச்சர் ஆகியோர் ஏறத்தாழ 40 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களுக்கு ஒரு நல வாரியத்தை உருவாக்க அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குமரி மாவட்டத்தில் 20 சென்ட்க்குக் குறைவான சொத்துக்களுக்குப் பத்திரப் பதிவு செய்கிறபொழுது topo sketch முறை பின்பற்றப்படுவதால், பொதுமக்களுக்கு மிகப் பெரிய பொருளாதாரச் சுமை ஏற்படுகிறது. எனவே, அந்த முறையை அரசு கைவிட வேண்டுமென வலியுறுத்துகிறேன். அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், சார் பதிவாளர் அலுவலகங்களில் குறிப்பாக குழித்துறை, மூஞ்சிறை, கொல்லங்கோடு, சார் பதிவாளர் அலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக திருமணங்கள் பதிவு செய்யப்படுவதில்லை. அதற்காக அங்கு வசிக்கக்கூடிய மக்கள் கேரளா சென்று பதிவுத் திருமணத்தை நடத்த வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் வாய்மொழி உத்தரவு என்று கூறுகிறார்கள், எனவே, அரசு உடனடியாகத் தலையிட்டு.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மாரிமுத்து, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து :** நான் முடித்துவிடுகிறேன். திருமணங்களை கன்னியாகுமரியிலே இருக்கக் கூடிய சார் பதிவாளர் அலுவலகத்திலே நடத்துவதற்குண்டான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை, இப்பொழுது கோயில் நிலங்களிலே குடியிருக்கக்கூடிய குடியிருப்புகளிலே இருக்கக்கூடியவர்களுக்கு அந்த அடி மனை வாடகை என்பது இன்றைக்குத் தாறுமாறாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 120 ரூபாய் செலுத்தியவர்களுக்கு 1,200 ரூபாய் அடிமனை வாடகை என்று இப்பொழுது அறநிலையத் துறையால் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இத்தகைய நிலை உருவாகி இருக்கிறது. அதுமட்டுமல்ல, இது 1999 முதல் அமலுக்கு வரும் என்கிற முன் தேதியிட்ட நோட்டீசையும் அறநிலையத் துறை



வழங்கியிருக்கிறது. எனவே, அரசு உடனடியாக தலையிட்டு, கோயில் மனைகளிலே குடியிருக்கக்கூடியவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நாகப்பட்டினம் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட நாகூர் நகரம் என்பது சிறுபான்மை மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதியாகும். அந்த மக்கள், நாகூர் நகரத்திற்கென்று பெண்கள் படிக்கின்ற ஒரு மேல்நிலைப் பள்ளி வேண்டுமென்கிற கோரிக்கையை 25 ஆண்டு காலமாக வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, அந்தக் கோரிக்கையையும் அரசு நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். நாகப்பட்டினம் தொகுதி என்பது விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய தொகுதி, கடைமடைப் பகுதி. எங்களுடைய பகுதிக்குத் தண்ணீர் எப்படி வருகிறதோ, அதேபோலத்தான் அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களும், நலத் திட்டங்களும் எங்களுக்குக் கிடைக்கின்றன. எனவே, தொடர்ச்சியாக இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கக்கூடிய பகுதி என்கிற முறையில்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வே. மாரிமுத்து:** சுனாமியால் பாதிக்கப்பட்ட தொகுதி என்கிற அடிப்படையில், மாநில அரசு கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோருவதோடு, இந்த ஆண்டு சுனாமி நிவாரணப் பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கை குறிப்பிடுகிறது. எனவே, தமிழகத்திலேயே சுனாமிப் பேரலையால் அதிகமாக பாதிக்கப்பட்ட தொகுதி என்கிற அடிப்படையில் இந்த ஆயிரம் கோடி ரூபாயில் பெரும் பகுதியான நிதியை என்னுடைய தொகுதிக்கு இந்த அரசு செலவு செய்ய வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்பினைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**•திரு. எஸ். இராசசேகரன்:** பெருமதிப்பிற்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினரைப் பற்றிய மானியக் கோரிக்கையிலும், அதேநேரத்தில் வணிக வரித் துறை மானியக்

கோரிக்கையிலும் பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துகளை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–50*

குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் என்று வருகிறபோது, இட ஒதுக்கீடு சம்பந்தமாக பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்தத் துறை 1989 ஆம் ஆண்டில் தனித் துறையாக அறிவிக்கப்பட்டது. இப்போதுகூட, மத்திய அரசாங்கம், மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்குத் தாமதப்படுத்துகின்ற நிலையில், இந்த மன்றம் கடந்த காலத்தில் ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மீண்டும் இந்த அவைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநேரத்தில், குறிப்பாக இன்றைக்கு இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றிருக்கின்ற நிலையில், அவர்களுக்கான பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு இப்போது எடுத்து வருகின்றது. கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அப்படிக் குறிப்பிட்டிருக்கின்றபோது, ஒருசில விஷயங்களை மாத்திரம் இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பிற்படுத்தப்பட்டோருக்காக நிதியாதாரங்களைப் பெறக்கூடிய முறையில், பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த அமைப்பு சிறப்பான முறையில் நடைபெறுகிறது என்று சொல்கின்றார்கள். ஆனால், அதன்மூலமாக உதவிகள் பெறப்பட்டன என்பது மிகக் குறைவாகவும், கடினமாகவும் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மூன்றில் இரண்டு பகுதி மக்கள் தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களுக்கு உருவாக்கப்பட்ட இந்தத் துறையைச் சிறப்போடு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் அரசு இருந்த காலத்தில், அதாவது, 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை, மனைப் பட்டாக்கள், பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்காகக் கொடுக்கப்பட்ட மனைப் பட்டாக்கள், அடுத்து வந்த அரசு நிறுத்திவிட்டது. அது மீண்டும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான்



வரவேற்கின்றேன். மற்றும் பல அறிவிப்புகள், நல்ல அறிவிப்புகள் வந்திருக்கின்றன. அவையெல்லாவற்றையும் வரவேற்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதே நேரத்தில், தொழில் படிப்புக்காக, தொழில் கல்வி படிப்பதற்காக, வருமான வரம்பு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் அந்த வருமான வரம்பு கிடையாது. ஆனால், பிற்படுத்தப்பட்டோருக்கு 50,000 ரூபாய் என்று வருமான வரம்பு என்று இருப்பதை தவிர்த்து, எல்லோருக்கும் வருமான வரம்பு இல்லாமல், அனைவரும் அந்தத் தொழில் கல்வி பயில்வதற்கான முறையிலே செய்ய வேண்டும். அடுத்தபடியாக, பட்டப் படிப்பு என்று வருகின்றபோது, பட்டப் படிப்புக்கும் அதேமாதிரியான—பிற்படுத்தப்பட்டோருக்கு 50,000 ரூபாய் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும், சீர்மரபினருக்கும் வருமான வரம்பு கிடையாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி ஏற்றத் தாழ்வு இல்லாமல், அனைவருக்கும் வருமான வரம்பு இருக்கக் கூடாது என்று எனது சார்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து மாணவர் விடுதிகள். இது மிக முக்கியமான பிரச்சினை. இன்றைக்கு கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் நகர்ப்புறங்களுக்கு வந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்தச் சூழ்நிலையை சரி செய்யக்கூடிய முறையில் ஒரு மேல்நிலைப் பள்ளிக்கூடம் இருந்தால், அந்த மேல்நிலைப் பள்ளிக்கூடத்திற்கு மாணவர், மாணவியர் விடுதி ஒன்று கட்டாயமாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி ஏற்படுத்துகின்றபட்சத்தில், அதிகமான மாணவ, மாணவிகளை அதில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்குக் கட்டியிருக்கின்ற கட்டடத்தில் 100 பேர் இருக்கக்கூடிய, 125 பேர் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அந்த வாய்ப்பு இருந்தும், 50 பேர் இருக்கக்கூடிய நிலையிலேயே அவர்கள் தேர்வு செய்யப்படுகின்றார்கள். ஆகவே, மாணவ, மாணவிகளை அதிகமாகச் சேர்க்க, எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–55*

அடுத்து, மாணவ மாணவிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவுக் கட்டணம் என்பது மிகக் குறைவான நிலையிலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். அதை உயர்த்துவதற்குப் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். பரிசீலனை அல்ல,

இந்த அவையிலேயே இப்போதே அதை உயர்த்தி அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். பள்ளிக்கூடங்களுக்கு, அதாவது உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். 15 ரூபாயாக்கி, 450 ரூபாயாக உயர்த்த வேண்டும். அதே நேரத்தில், கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கு 400 ரூபாய் என்று இருப்பதை 500 ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் பகுதி மக்களுக்கு ஈமச் சடங்குக்காக ஐநூறு ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை ஆயிரமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே மாண்புமிகு அமைச்சர்கள் இது முடியாது, இது முடியும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, இதை ஆயிரமாக உயர்த்தித் தர வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாணவ, மாணவிகளின் விடுதியினுடைய தரத்தை உயர்த்த வேண்டும். தரத்தை உயர்த்துவது என்று சொன்னால், மாணவ, மாணவிகளுக்கு, அங்கே இருக்கக்கூடிய வார்டன் மாலை ஏழு மணி முதல் ஒன்பது மணி வரை அவர்கள் பாடம் நடத்த வேண்டும். விளையாட்டு சொல்லிக் கொடுத்து படிப்பில் கவனம் செலுத்தும் முறையில் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விடுதிகளுக்குக் காவலர்கள், பல இடங்களில் கிடையாது. குறிப்பாக பெண்கள் விடுதிகளுக்குக் காவலர்கள் உடன் நியமிக்க வேண்டும். அடுத்ததாக காவலர்கள் மாத்திரமல்ல, காவலர்களுடன் மற்ற அனைத்துப் பணியிடங்களும் இந்த விடுதிகளுக்கு நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதிகளுக்குச் சுற்றுச் சுவர் என்பது மிக அவசியமானது. பல இடங்களில் இருக்கின்றன, சில இடங்களில் இல்லை. அந்தச் சுற்றுச் சுவர் கட்டாயமாக உருவாக்கப்பட வேண்டும். விடுதிகள் என்று இருக்கிறபோது அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டாயம் கட்டிக் கொடுக்க வேண்டும். சொந்தக் கட்டடம் இல்லையென்று சொன்னால், வாடகைக் கட்டடத்தில் அவர்களுக்கான சுகாதார வசதி இல்லாத நிலை நீடிக்கின்றது. ஆகவே, சொந்தக் கட்டடங்கள் வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து சலவைத் தொழிலாளர். சலவைத் தொழிலாளர்களுக்கு டோபி கானா என்று சொல்கிறார்கள். கிராமப்புறங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி, இன்றைக்கு தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. நாமெல்லாம் வெள்ளை வெளேரென்று சட்டையும் வேட்டியும் கட்டிக்கொண்டிருப்பது,



அவர்களுடைய உழைப்பில். ஆனால், அவர்களுக்கு இன்றைக்கு டோபி கானா கிடையாது. அதற்குத் தண்ணீர் கிடையாது என்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நாமே borewell போட்டுக் கொடுத்து, துணி வெளுப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்து கொடுக்க வேண்டும். அதுமாத்திரமல்ல, சாதாரண நிலையில் இருக்கக்கூடிய கிராமப்புறங்களில், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு, சலவைப் பெட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல முடி திருத்துவோர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகளில் சமையல் உதவியாளர்களாக — 900 பேர் இன்றைக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள், 900 அல்ல, 3000 பேர் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அந்த உதவியாளர்களுக்கு 970 ரூபாய் இன்றைக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி, முழுநேரப் பணியாளர்களாக மாற்றித் தந்து, சமையலர்களுக்கு என்னென்ன கொடுக்கிறோமோ அவை அனைத்தையும் இவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல பள்ளிக்கூடங்களுக்கும் பாதுகாப்பான காம்பவுண்டு வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

அடுத்து பாண்டேஜ். அதாவது மருத்துவர்கள் உபயோகிக்கக்கூடிய பாண்டேஜூக்கு வரி விதிப்பு போடப்பட்டிருக்கிறது. விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. அந்த விற்பனை வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, எனக்கு முன்னால் பேசிய தோழர் சொல்லியதைப்போல, சாம்பிராணி போன்ற பொருட்களுக்கெல்லாம் வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதே நேரத்திலே அதிலிருந்து உற்பத்தியாகிற பொருள்களுக்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். அதை நீக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

சாதிக் கலவரம் ஏற்படும்போது பாகுபாடான நிதி உதவி இருக்கக் கூடாது என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் இந்தத் துறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாக வணிக வரித் துறையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1–00*

எனக்கு முன்னால் பேசிய தோழர் அவர்கள் சொன்னார்கள், பல்வேறு பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிரப்பவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றை நிரப்பவேண்டும் என்பதோடு, வணிக வரித் துறையிலே வேலை பார்க்கின்ற அதிகாரிகள், அதாவது D.C.T.O., A.C.T.O. என்கின்ற அந்த அதிகாரிகள், வியாபாரிகளைப் பிழிந்து எடுக்கக்கூடிய முறையில், பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இதையெல்லாம் போக்கி, வியாபாரிகள் ஒரு கஷ்டமான நிலைக்கு உள்ளாகாமல் அவர்களுடைய விற்பனை வரம்பு என்பதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகளுக்கும், அந்த அதிகாரிகளுக்கும் உள்ள தொடர்பு, ஒரு நட்புரீதியாக, பொதுவானதாக இருக்கவேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார். பத்து நிமிடங்களில் முடியுங்கள். (குறுக்கீடு)

***திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரி மற்றும் பதிவுத் துறை பற்றி பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு நன்றியைச் சொல்லி, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, ஏழையயெளிய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. இந்த ஆட்சி எப்படி வரியை விதிக்க வேண்டுமென்று கம்ப இராமாயணத்தில் ஜனக மகாராஜன் சொல்கின்ற நேரத்தில், அவனை வர்ணிக்கின்ற நேரத்திலே, கம்பன் சொல்வான்,

"ஊர் மக்களுக்கு வரி விதிக்கையில், தரும நூல்களில் வரிகள் விதித்த அளவே வரி விதித்தான், வறியவர்க்கு வரி எதற்கு என்று விலக்களித்தான். அவர் வெளிச்சம் பெற விலக்கு அளித்தான்".

அந்த அளவிற்கு தமிழக முதல்வர் அவர்கள் வரியினை விதிக்க வேண்டும். மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று கேட்டு, முதன் முதலாக இந்த Value Added Tax இங்கே அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. அதுவும் 1–1–2007 முதல் அமல்படுத்துவதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 1–1–2007–ல் அந்த Value Added Tax ஆரம்பித்தால் அது ஒரு வருடம் முழுமையடைந்த கணக்காக இருக்காது. எனவே, தமிழக அரசு அதை 1–4–2007, அதாவது 31–3–2006–ல் முடித்து 1–4–2007–ல் ஆரம்பிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, விற்பனை வரியை வசூலிக்கின்ற அதிகாரிகள், கடைகளைச் சோதனை போட்டு அவர்கள் அந்த வியாபாரிகளுக்கு Best of Judgment



என்ற முறையில் வரி விதிப்பு செய்கின்றார்கள். அவர்கள் அதை அப்பீல் செய்கின்றபோது, முதல் முறையாக 25 சதவிகிதம் பணமும், 75 சதவிகிதம் வங்கிக் காப்பும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டாவது முறை போகின்றபோது, முழுத் தொகையை அவர்கள் செலுத்த வேண்டியிருக்கிறது. எனவே, தமிழக அரசு முதல் முறையாக அப்பீல் செய்கின்றபோது, பணம் ஏதும் கட்டாமல், இரண்டாவது முறை அப்பீல் செய்கின்ற சமயத்தில் மட்டும் 25 சதவிகிதம் கட்டணம் வாங்கினால், வியாபாரிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வரி விதிப்பில் ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற பீரோ, கட்டில், அதாவது, இப்போது எந்த ஏழை வீட்டுக் கல்யாணமாக இருந்தாலும், இரும்பால் செய்யப்பட்ட பீரோ, கட்டில் கொடுக்க வேண்டியிருப்பதால், தமிழ்நாட்டில் செய்யப்பட்ட இரும்பு பீரோ, கட்டில்களுக்கு வரி ஏதும் விதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கையினால் தயாரித்து, ஏழைகள் பயன்படுத்துகின்ற சோப்பு இரண்டு ரூபாய்க்குக் கீழே உள்ள சோப்புகளுக்கு வரி தேவையில்லை என்று கேட்டுக்கொள்கின்றேன்.

குமரி மாவட்டத்தில் இரப்பர் அதிகமாகக் கிடைக்கிறது. இரப்பர் ஷீட்டுக்கு கேரள அரசு 4 சதவிகிதம் வரி போடுகிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது 8 சதவிகிதம் இருக்கிறது. கேரளாவில் 4 சதவிகிதமாக இருப்பதால், கன்னியாகுமரி மக்களுக்கு சிரமமாக இருக்கிறது. எனவே, 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவோ அல்லது இரண்டு சதவிகிதமாகவோ குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடுமட்டுமல்லாமல், இப்போது Air Conditioner ஆக இருந்தாலும் சரி, Refrigerator ஆக இருந்தாலும் சரி, எல்லோரும் பயன்படுத்துகின்ற ஒரு பொருளாக மாறிவிட்டது. அதற்கு 21 சதவிகிதம் என்று இந்தியாவிலேயே அதிகமாக வரி விதிக்கப்படுகிறது. அதை 12.5 சதவிகிதம் ஆகக் குறைக்கவேண்டும்.

*பிற்பகல் 1–05*

அதோடு மட்டுமல்லாமல், ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற மாவு அரைக்கும் இயந்திரங்கள், அதற்கும் 4 சதவிகிதமாகக் குறைக்கவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், பயறு வகைகள், பருப்பு வகைகள் மூலம் தயாரிக்கின்ற மாவுகளுக்கு 2 சதவிகிதம் வரி, இதை நீக்க வேண்டும். உடனடிச் சாம்பிராணிக்கும் 4 சதவிகிதம் இருப்பதை நீக்க வேண்டும். தேங்காய், அதாவது கொப்பரை crushing 4 சதவிகிதம் வரியை நீக்க வேண்டும். மற்ற தானியங்களை crushing செய்கின்றபோதும், எண்ணெய் எடுக்கின்றபோதும், அதற்கு 4 சதவிகிதம் இருக்கக் கூடாது. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பத்திரப் பதிவு, இப்போது 8 சதவிகிதம் ஆக இருக்கிறது. அந்தப் பத்திர, bond–களை, stamp paper வாங்குகின்றபோது, ஊழல் நடப்பதாக, இந்தியா முழுவதும், நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, நாம் சாதாரணமாக stamp வாங்குகின்ற நேரத்தில், Franking System இருக்கும். அதுபோல, stamp paper–களுக்கு Franking System–ஐக் கொண்டுவரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன், சில வழக்குகளில் நீதிமன்றம் சொத்துகளை attachment செய்கின்றபோதும், mortgage செய்கின்றபோதும், நாம் Encumbrance Certificate வாங்குகின்ற நேரத்தில், அதிலே குறிப்பிடப்படுவதில்லை. Encumbrance Certificate–ல் நீதிமன்ற attachment அல்லது mortgage இருந்தால், அது குறிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த மதிப்புக் கூட்டு வரி; ஏற்கெனவே நான் இங்கே சொன்னதுபோல, தமிழக முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், இந்த வருடக் கணக்கில் முடித்து, 1–4–2007 முதல் அதை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் நாங்குநேரி தொகுதியில், Hi–tech Industrial Park கொண்டு வருவேன் என்று சொன்ன எங்கள் தமிழக முதல்வர் அவர்களுக்கும், கலர் T.V. தயாரிக்கின்ற தொழிற்சாலையை அங்கே கொண்டு வருவேன் என்று சொன்னதற்கும் நன்றி. வடக்கு பச்சையாறு திட்டத்தின்மூலம், ஏறத்தாழ 46 குளங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்குரிய ஏற்பாடுகளும், கன்னடியன் கால்வாய்த் தண்ணீர் கொண்டு வருவதற்கு, வாய்க்கால் திட்டம் 180 கோடி ரூபாயில், உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையும் உடனடியாகச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

Wind mill spare parts தொழிற்சாலை நாங்குநேரியில் கொண்டுவருவேன் என்று சொன்ன, தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி. அதோடு மட்டுமல்லாமல், இந்தக் கொப்பரைத் தேங்காய் என்று சொல்கின்ற தேங்காயில் எண்ணெய் எடுக்கின்ற நேரத்தில், அந்த crushing –க்கு 4 சதவிகிதம் வரி போடுகிறார்கள். அதையும் நீங்கள் தயவுசெய்து எடுக்கவேண்டும். அந்தத் தொழிலை வாழ விட வேண்டுமென்று சொல்லி, கரும்பில் எடுக்கின்ற வெல்லத்திற்கும், அந்த 4 சதவிகிதம் வரியை எடுக்கவேண்டுமென்று சொல்லி,— நீங்கள் ஏழையினுடைய சிரிப்பிலே இறைவனைக் காண்பவர்கள்; உறவுக்குக் கை கொடுக்கின்ற வியாபாரிகள், அவர்கள் உரிமையான இந்தக் கோரிக்கையையும் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். Short–ஆக முடியுங்கள்.

***திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த சாதாரணமான என்னை, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தின் உறுப்பினராவதற்கும், பேசுவதற்கும், அரியதோர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக பம்பரம் போல் சுழன்று பிரச்சாரம் செய்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அண்ணன் வை.கோ. அவர்களுக்கும் மற்றும் ஜனநாயக மக்கள் கூட்டணியின் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், தொகுதியில் வாழும் பெருமக்களுக்கும், எனது நண்பர்களுக்கும், நடுநிலைவாதிகளுக்கும் இந்த மாமன்றத்தின் வழியாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் இயங்கும் அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாத உணவுக் கட்டணமாக ஒரு மாணவனுக்கு ரூ.225/– ஆக இருந்ததை, எங்களது அம்மா ஆட்சிக்கு வந்தவுடன் 1–10–2001–இல் ரூபாய் 300/– ஆக உயர்த்தி ஏழை எளிய மாணவ மாணவிகளின் வாழ்வில் ஒளிபெறச் செய்தார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளின் கல்வித் தரம் உயர வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள், 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இலவச book, இலவச சிறப்பு வழிகாட்டிகள் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி அவர்களின் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்த வழிவகைச் செய்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 1–10

முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சிறுபான்மையினர் கல்வி, பொருளாதார மற்றும் சமூகரீதியாக பின்தங்கிய நிலையை ஆய்வு செய்து இட ஒதுக்கீடு செய்வதற்காக நீதிபதி குமார் இராஜரத்தினம் அவர்களின்

தலைமையில் அரசாணை எண் 17–ன் வாயிலாக பிற்படுத்தப் பட்டோருக்கான ஆணையம் ஒன்று மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்டது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக எங்களது அம்மாவின் ஆட்சியில் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு வாழ்க்கை வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டன. இந்த ஏடுகளில் உயர் கல்வி தொடர்பான விவரங்களும், வேலைவாய்ப்பிற்கான மத்திய மாநில அரசுகளின் விவரங்களும் மற்றும் அரசு மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்களின் நடவடிக்கைகளும் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாத உணவுக் கட்டணம் ரூ.300/– என்று இருப்பதை ரூ.400/– ஆக உயர்த்தித் தருமாறும், கல்லூரி விடுதிகளுக்கு ரூ.400/– என்று இருப்பதை ரூ.500/– ஆக உயர்த்தித் தருமாறும் அரசை வேண்டுகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் பணியாற்றும் உதவி சமையலர்கள் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகிறார்கள். அதே நேரத்தில் ஆதிதிராவிட நலத் துறையின்கீழ் இயங்குகின்ற விடுதிகளில் பணியாற்றுகின்ற உதவி சமையலர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால், இத்துறையில் பணியாற்றும் உதவி சமையலர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியின் நீண்டநாள் கோரிக்கையான புறவழிச்சாலை அதாவது பைபாஸ் ரோடு அமைத்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று அறிவித்துள்ள நிலையில் விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் மருத்துவக் கல்லூரியை எனது இராஜபாளையம் தொகுதிக்கு ஒதுக்குமாறு அரசை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில் கடந்த தி.மு.க. ஆட்சியில் ஜாதிக்



கலவரத்தில் ஈடுபட்டோரின் நிலுவையில் உள்ள வழக்குகளைத் தள்ளுபடி செய்யுமாறு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசை வலியுறுத்துகிறேன்.

இராஜபாளையம் தொகுதி, இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டி பகுதியில் சுமார் 6,000 மக்கள் குடியிருக்கிறார்கள். ஆண்டத்தமன் கோவில் தெருவில் இவர்களுக்கு குடிநீர் கிடைக்கவும் பெண்களுக்கு நவீன கழிப்பறை அமைத்துத் தருமாறும் அரசை வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–15

எனது இராஜபாளையம் தொகுதியில், நெசவுத் தொழிலாளர்கள் தங்களது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் பெற்று, நலிவுற்ற நிலையில் உள்ளனர். அவர்களது கடன்களைத் தள்ளுபடி செய்துதரும்படி அரசை வலியுறுத்துகிறேன். அரசை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில், பேண்டேஜ் துணி உற்பத்தி, கைத்தறித் துணி உற்பத்தி, நூல் ஆலை, தீப்பெட்டித் தொழில் மற்றும் ஏராளமான தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் நல மருத்துவமனையில், அடிப்படை வசதி, போதிய மருத்துவர் இல்லாமை போன்ற குறைபாடுகள் உள்ளதால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குறைபாடுகளை நீக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய மருத்துவர்கள் இல்லாததால், நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எங்களது பகுதியில் சிக்-குன்-குன்யா நோய் அதிகமாகப் பரவுகிறது. இதைத் தடுக்கும்பொருட்டு, போதிய மருத்துவர்களை உடனே நியமனம் செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில், தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறையின்கீழ் நடத்தப்படுகின்ற மருத்துவமனை, தளவாய்புரத்தில் உள்ளது. அனைத்துப் பிரிவு நோய்களுக்கான கட்டட வசதியுடன் அமைந்துள்ளது. ஆனால், இங்கு நிரந்தர மருத்துவர் இல்லாததனால், ஏழையெளிய மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இங்கு குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன. இப்பகுதி மக்களின் நலன் கருதி இந்தக் கூட்டுறவு மருத்துவமனையில் ஒரு நிரந்தர மருத்துவரைப் புதிதாக நியமனம் செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அரிய வகை மூலிகைகள் விளைகின்றதால், இப்பகுதியில் அரசு மூலிகைப் பண்ணை அமைத்து, சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் செய்வதற்கு வழிவகை செய்து தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில், கிழவிகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள் அதிகமாகப் பயின்று வருகிறார்கள். இவர்களுடைய ஏழ்மை நிலையைக் கருதி, இங்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்றைப் புதிதாகத் தொடங்க வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில், சேத்தூர், செட்டியார்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் வசிக்கும் பெண்களின் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டு, நவீனக் கழிப்பறைகள் அமைத்துத் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராஜபாளையம் தொகுதியில், சாஸ்தாகோவில் அணைக்கட்டில் உள்ள shutters பழுதடைந்துள்ளதால், அணையில் தேங்கியுள்ள தண்ணீர் வீணாகச் செல்வதைத் தடுக்கும்பொருட்டு, மேற்படி பழுதான shutters–ஐ மாற்றித் தந்து, விவசாயிகளின் நலனைக் காக்குமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவிகளுக்குக் குடியரசு தினம், சுதந்திர தினம், தீபாவளி, பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு ஆகிய விழாக் காலங்களில், சிறப்பு உணவுக் கட்டணம் ஆதி திராவிட நலத் துறையின்கீழ் இயங்கும் விடுதிகளுக்கு வழங்குவதுபோல, இத்துறை விடுதிகளுக்கும் வழங்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நல விடுதிகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி, முடியுங்கள்.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல சேத்தூர், சாஸ்தாகோவில், அய்யனார் கோவில் பகுதியில், கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன்னால், பயங்கரமான காற்று அடித்ததில், தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்துவிட்டன. அதேபோல, வாழைக்கன்றுகள் மிகவும் பாதிப்புக்குள்ளாயின. ஆயிரம் ஏக்கர் அளவிற்கு பாதிப்பு இருக்கும், என்னுடைய தொகுதியில் விவசாயிகள் எல்லோரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆகவே, விவசாயிகளுக்குப் போதுமான நிவாரணம் வழங்கும்படி அரசை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை பொறுமையாக இருந்தமைக்கும், எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் திருமதி சந்திரா அவர்கள் கன்னிப்பேச்சு பேசிய காரணத்தினாலே நாங்கள் யாரும் குறுக்கிட விரும்பவில்லை. அவர்கள் இந்த அரசுக்கு ஒரு வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இராசபாளையத்திலே சாதிக் கலவரத்திலே ஈடுபட்டு, வழக்குகள் இன்னும் நீதிமன்றத்திலே இருக்கின்றன. அவற்றை இந்த அரசு திரும்பப் பெறவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள்.

கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே அந்த வழக்குகளை நீதிமன்றத்திலே திரும்பப் பெற்றிருக்கலாம். இருந்தாலும், கலைஞர்மீது நம்பிக்கை வைத்து *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த வேண்டுகோள் மாண்புமிகு உறுப்பினர் *(மேசையைத் தட்டும் ஒலி)* நிச்சயமாக சட்டப்படி தமிழக முதல்வர் கலைஞர் வைத்த காரணத்தால், நிச்சயமாக சட்டப்படி தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வழக்கறிஞர்களோடு கலந்தாலோசித்து மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை நிறைவேற்றுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவார்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், நாம் உயிருக்கும் மேலாக நேசிக்கின்ற நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், சொல்லிலே வேகம், செயலிலே விவேகம், இளைஞர்களின் இன்றைய முகவரியாம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுத் துறை, வேளாண் துறை அமைச்சர்களுக்கும் நன்றியைச் சொல்லி தொடங்குகிறேன்.

இங்கே, இன்றைய விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள், வேலுசாமி, மாணிக்கம், விஜயகுமார், தி.க. ராஜா, மாரிமுத்து, இராசசேகரன், வசந்தகுமார், சந்திரா ஆகியோர் தங்களது கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

தமிழக அரசின் வருவாய் இனங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கக்கூடியது வணிக வரித் துறை என்பது நாம் அறிந்தது. கடந்த பல ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்து, கடந்த ஆண்டில் ரூ.16,615 கோடியாக இது உயர்ந்துள்ளது, 2005–2006–ல். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல், மே, ஜூன் மாதம் வரை ரூ.4,705 கோடியை இத்துறை ஈட்டியுள்ளது. இந்த வருவாய் தற்பொழுது 21.4 சதவிகிதம் கூடுதலானது ஆகும்.

தலைவர் கலைஞர் அவர்கள், இரண்டாம் முறையாக 1971–ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது வணிகர்களின் பல்லாண்டு கோரிக்கையை அன்றையதினம் ஏற்று பலமுனை வரிக்கு உட்பட்டிருந்த 59 பொருள்களுக்கு, ஒருமுனை வரியைக் கொண்டுவந்து தமிழர்களின், அன்றைய வணிகர்களின் துயர் துடைத்தார்கள். தமிழகத்திலே முதன்முறையாக தலைவர் கலைஞர் அவர்கள்தான் அப்படிப்பட்ட ஒரு சாதனையை நிகழ்த்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வணிகர்களுடைய இடர்பாடுகள் களையப்பட்டன. அதுபோது, பண்பாளர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா அவர்கள் வணிக வரித் துறை அமைச்சராக இருந்தார்கள்.

1989–1990–ல் தலைவர் கலைஞர் அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றபோது பலமுனை வரியை இரத்து செய்து, ஒருமுனை வரி ஆக்கினார்கள். இது வணிகர்களிடையே பெருத்த வரவேற்புக்குரியதாக, அவர்களின் நன்மையை நாடியதாக இருந்தது.

அதேபோல, வணிகர்களுக்காக நீண்டகாலம் உழைத்துவந்த ஈரோடு காளிதாஸ் சேட், கும்பகோணம் சண்முகம், மைலாப்பூர் கழக முன்னோடி காசிச்சாமி, திருச்சி மாயாண்டி, திருச்சி கழக முன்னோடி கிருஷ்ணமூர்த்தி



ஆகியோர் நீண்டகாலமாக வணிகர்களுக்கு ஏதாவது நலன் செய்யவேண்டுமென்று தொடர்ந்து அரசை, கலைஞரை வற்புறுத்தி வந்தார்கள். அதைத் தன்னுடைய மனதிலே ஏற்றுக்கொண்டு, அவருக்கே உரிய அந்த முறையிலே, வணிக நல வாரியத்தை 1989–90–இலே உருவாக்கினார்கள். அதற்குப் பின்னாலே அதற்கு 2 கோடி ரூபாய் நிதியையும் தந்தார்கள்.

பிற்பகல் 1–25

அதேபோல, 1996–2001–ல் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அதுபோது அவர்களும், அதேபோல அன்பிற்குரிய மாண்புமிகு தங்கபாண்டியன் அவர்களும் வணிக வரித் துறை அமைச்சராக இருந்தார்கள். அவர் அப்போது ஆற்றிய உரை மிக அருமையான உரை, தங்கபாண்டியன் அவர்கள் ஆற்றிய உரை. 1996–2001–ல் தலைவர் கலைஞர் அவர்கள், 454 கோடி ரூபாய்க்கு, அன்றைக்கு வரி விலக்கு தந்தார்கள்.

அதேபோல விண்ணப்பித்த ஒரு வாரத்தில் பதிவுச் சான்றிதழ்கள் கிடைக்கச் செய்தது, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவு செய்தால் போதும் என்ற நிலையைக் கொண்டு வந்தது, உள் மாநிலத்திலே சோதனைச் சாவடிகளை நீக்கியது, நிலுவை வரிகளை, வசூல் செய்ய சமாதான திட்டம் கொண்டு வந்தது, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் மளிகைப் பொருட்களுக்கு, வரி விலக்கை அளித்தது, சிறு வணிகர்கள் பதிவு செய்யும் வரம்பை, ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சமாக உயர்த்தியது, அதேபோல self assessment 5 இலட்சத்திலிருந்து, 10 இலட்சமாக உயர்த்தியது போன்ற ஏராளமான நன்மைகளை வணிகர்களுக்குச் செய்தார்கள்.

அதேபோல வரி வருவாயையும் உயர்த்தினார்கள். இந்த ஆண்டு நமக்குத் தரப்பட்டிருக்கின்ற, வரிச் சலுகைகள் ஏராளமானவை என்பது நாம் எல்லாம் அறிந்ததே. இங்கே பேசிய உறுப்பினர்கள் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்கிற அந்த எண்ணத்தைச் சொன்னார்கள்.

இந்த ஆண்டில் ஏற்கெனவே பதவி உயர்வு தரப்படாத நிலையில் இருந்ததை, பதவி உயர்வு தரப்பட்டு 274 உதவி வணிக வரி அலுவலர்கள் பணியிடங்களும், 76 வணிக வரி அலுவலர் பணியிடங்களும், 8 துணை ஆணையர் பணியிடங்களும் மற்றும் 4 இணை ஆணையர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு இருக்கின்றன.

V.A.T.–ஐப் பற்றி சொன்னார்கள். 1–1–2007 முதல் என்று நாம் அறிவித்து இருக்கிறோம். அதைப் பற்றிச் சொல்கிறபோது, இந்திய அரசு, இந்த 1–1–2007–லே கொண்டு வந்தால்தான் அந்த 75 சதவிகிதத்தையாவது, மானியத்தை நாம் பெற முடியும் என்கிற நிலையினாலேதான், இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல வசந்த குமார் அவர்கள் V.A.T.– இரப்பர் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே V.A.T. வந்துவிட்டால் அது சரியாகி விடுகிறது. அதேபோல fridge – refrigerator போன்றவற்றை எல்லாம் V.A.T. வந்துவிட்டால் ஒரே சீரான அந்த 12.5 சதவிகிதத்திற்கு வந்துவிடுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். சில உணர்வுகளைத் தெரிவித்து, நான் பின்னாலே அறிவிப்பிற்கு வர நினைக்கிறேன். மாணிக்கவாசகப் பெருமான் சொல்லுவார்.

*"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்*
*தேனாய்இன் அமுதுமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்*
*தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்*
*ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"*

என்பான். நான் என்னப்பா பண்ணினேன்? உன்னையேதான் நினைத்துக்கொண்டிருந்தேன். வேறு ஒன்றும் நான் பண்ணவில்லை. நீ அதற்குப் பதிலாக என்னுடைய உள்ளத்திலே தேனாய், இன்னமுதமாய் வந்திறங்கி என்னை ஆட்கொண்டு விட்டாயே, என்று சொல்வார்.

இங்கே புதிதாக பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர்களாகிய நாங்கள் எல்லோரும், எங்களுடைய தலைவரை, நம்முடைய முதலமைச்சரை அப்படித்தான் நாங்கள் இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் எதுவும் செய்யவில்லை. நாங்கள், மாநாடுகளாக இருந்தாலும், ஊர்வலங்களாக இருந்தாலும், ஆர்ப்பாட்டங்களாக இருந்தாலும், எங்களுடைய தலைவரின் புகழை அடிவயிற்றிலிருந்து, நெஞ்சம் மகிழ்ந்து, வாழ்க, வாழ்க, வாழ்க என்று அந்த முழக்கமிட்டோமே, அது ஒன்றுதான் நாங்கள் செய்தது. இன்றைக்கு புதிய அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருக்கிற அத்தனை பேரின் சார்பாக நான் நம்முடைய தலைவர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாரதி சொல்லுவான்,



*"இனியொரு விதிசெய் வோம் – அதை*
*எந்த நாளும் காப்போம்;*
*தனி யொருவனுக்குணவிலை யெனில்.. (மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** பாரதி சொல்லுவான்.

*'இனியொரு விதிசெய் வோம்–அதை*
*எந்த நாளும் காப்போம்;*
*தனியொருவனுக் குணவிலை யெனில்*
*ஜகத்தினை அழித்திடு வோம்–'*

என்பான்.

வள்ளுவப் பேராசான் சொல்லுவான்.

*'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி'*

உங்கிட்டே பணம் இருக்காப்பா, அதை வைப்பதற்கு, ஒரு நல்ல இடம் நான் சொல்லவா? அது பசிக்கிறவனுடைய வயிறுதானப்பா, அப்படியென வள்ளுவன் சொல்லுவான். அந்தவகையிலேதான் இன்றைக்கு உணவுக்கு 1,950 கோடி ரூபாயை, எளிய மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் திருப்பிவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புறநானூற்றுப் பாடலிலே,

*'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று துவங்கி, ...*
*'பசிப்பிணி மருத்துவன் இல்லம்*
*அணித்தோ ? சேய்த்தோ ? கூறுமின், எமக்கே'*

என்று சொல்லப்படும்.

பசிப் பிணி மருத்துவன் பண்ணனை, பசிப்பிணி மருத்துவன் என்று புறநானூறு சங்க காலத்திலே சொல்லும். இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் ஏழைகளின் பசிப் பிணியை நீக்கிய அந்தப் பசிப் பிணி மருத்துவனாக இன்றைய தினம் நம்மிடையே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணிக்கவாசகப் பெருமான் உள்ளம் நெகிழ்ந்து சொல்லுவார்.

*'சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்,*
*திரண்டு திரண்டுன் திருவார்த்தை*
*விரிப்பார், கேட்பார், மெச்சுவார்,*
*வெவ்வேறு இருந்துன் திருநாமம்*
*தரிப்பார் .*
*. . அவர்முன்னே*
*நரிப்பாய் நாயேன் இருப்பேனோ?*
*நம்பி இனித்தான் நல்காயே!*

என்று உளம் நெகிழ்ந்து, மெய்ம் மறந்து கூத்தாடுகிற நிலையிலே இருப்பார். இன்றைக்கு நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே நம்முடைய காங்கிரஸ் பேரியக்க முன்னணித் தலைவர்கள், பா.ம.க. முன்னணித் தலைவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், அதேபோல கழக உடன் பிறப்புக்கள், இன்னும் நாட்டில் உள்ள நல்லோர், குறிப்பாக, நலிந்தோர் ஏற்றிப் போற்றிப் பாராட்டுகிற நிலையைப் பார்க்கிறபோது, நம்முடைய மாணிக்கவாசகப் பெருமான் நெகிழ்ந்து பாடினாரே, அந்தப் பாடல் வரிகள்தான் நம் கண் முன்னாலே வந்து நிற்கின்றன.

இரவீந்திரநாத் தாகூர் சொல்லுவார். 'ஏனப்பா, மூலையிலே உட்கார்ந்துகொண்டு, ஜப மாலையை உருட்டிக் கொண்டு அமர்ந்திருக்கிறாயே, உச்சாடனம் செய்கிறாயே, நீ தேடுகிற இறைவன் அங்கேயா இருக்கிறான்? இல்லையப்பா இல்லை. அவன் உழுகிற விவசாயினுடைய வியர்வையிலே இருக்கிறான்; கல்லுடைக்கிறானே தொழிலாளி அவனுடைய நிழலிலே இருக்கிறான்' என்று சொல்லுவார். அந்த வகையிலேதான் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் வழியில் இன்றையதினம் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய நலத் திட்டங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள்.

அதேபோல, கலித் தொகை பாடல் ஒன்று,

*'தம் புகழ் கேட்டார்போலதலை*
*துஞ்சின மரங்கள் எல்லாம்'*

என்று சொல்லும். இங்கே எதிர்வரிசையிலே இருக்கிற தோழமைக் கட்சியினர் எல்லாம் புகழ்ந்து பேசுகிறபோது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய தலை சாய்ந்தே இருந்தது.



*'தம் புகழ் கேட்டார்போலதலை*
*துஞ்சின மரங்கள் எல்லாம்'*

என்ற அந்த வரிகள்தான் நம் கண் முன்னாலே நிற்கும்.

அதேபோல, இந்தப் பேரவையை நடத்திச் செல்வதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் விரும்புகிற முறை—பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள். 'விட்டுக் கொடுத்து வாழ்பவர்கள் ஒருபோதும் கெட்டுப் போவதில்லை; கெட்டுப்போக நினைப்பவர்கள் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை' என்று சொல்லுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே—மிகச் சீரிய முறையிலே, சிறப்பான முறையிலே எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்கிற தலைவர் கலைஞர் அவர்களுடைய அந்த உயர்ந்த எண்ணம் நம் நெஞ்சிலே நிற்கிறது என்பதைச் சொல்லி, இப்போது அறிவிப்புகளுக்கு வருகின்றேன்.

பிற்பகல் 1–35

அறிவிப்புகள், நிர்வாகத்தைப் பற்றியது. நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் துறை தெளிவுரைகளில் மாற்றம் காரணமாக வணிகர்கள் கொள்முதல் செய்வோர்களிடமிருந்து வரி வசூல் செய்யாத நிகழ்வுகளில் பல்லாண்டுகளாக நிலுவையிலுள்ள வரி கைவிடுதல் பிரேரணைகளை ஆய்வு செய்து முடிவு எடுப்பதற்காக ஆணையர் (வணிக வரிகள்), செயலர் (வணிக வரிகள்), செயலர் (நிதி) ஆகிய மூவர் கொண்ட வரித் தள்ளுபடி ஆய்வுக் குழு (Waiver Committee) ஒன்று அமைக்கப்படுகிறது.

சமாதானத் திட்டம் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது இந்த நடப்புக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவரப்படும்.

இங்கே உறுப்பினர்கள் எல்லோரும் தங்களுடைய வேண்டுகோள்களை வைத்தார்கள். ஒவ்வொருவரையும் நான் பெயர் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். பருப்பு மற்றும் பயறு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும், வறுகடலைக்கும் தற்போது 2 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று, 22–7–2006 முதல், வரி விலக்கு அளிக்கப்பட்ட பருப்பு மற்றும் பயறு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும், வறுகடலைக்கும் வரி விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உள் மாநிலத்தில் விற்கப்படும் வெல்லம் மற்றும் நாட்டுச் சர்க்கரைக்கு தற்போது 4 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த கோரிக்கையை, அதேபோல சட்டமன்ற

உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இதற்கு 2002 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில் இருநதது போலவே வரி விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

22–7–2006 முதல் சாம்பிராணிக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்த வேண்டுகோளை ஏற்று இச்சலுகை மாத்திரை வடிவிலும், குச்சி வடிவிலும் உள்ள சாம்பிராணிக்கும் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கழிவுத் தாள்கள் வெளி மாநிலத்திலிருந்து விற்கும்போது மாநில கொள்முதல் 4 சதவிகித வரி, உடன் மத்திய விற்பனை வரி 4 சதவிகிதம் ஆக 2 வரிகள் செலுத்த வேண்டிய நிலையை நீக்க மத்திய விற்பனை வரிக்கு 22–7–2006 முதல் விலக்கு அளிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று 22–7–2006–க்கு முற்பட்ட காலத்திற்கு மத்திய விற்பனை வரி அல்லது மாநில கொள்முதல் வரி, இதில் ஏதாவது ஒரு வரி கட்டினால் போதும் என்று ஆணை வழங்கப்படும். கழிவுத் தாளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கூடுதலாக பழைய காலி பாட்டில்களுக்கும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது இளநீருக்கு வரி இல்லை. ஆனால், நீராடும் தேங்காய்கள் வெளி மாநிலத்திலிருந்து விற்கப்படும்போது, அந்த விற்பனை சமையல் உபயோகத்திற்காக விற்கப்பட்டாலும், 2 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. அந்த விற்பனைக்கு 'சி' படிவம் இல்லையெனில் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படும் நிலை உள்ளது. இந்த வரி விதிப்பினால், தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் வைத்த வேண்டுகோளை ஏற்று, உள் மாநிலத்திலும், வெளி மாநிலத்திலும் விற்கப்படும் நீராடும் தேங்காய் மீதான வரிக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 50/–க்கும் குறைவான மதிப்புள்ள காலணிகளுக்கு கழக அரசால் 1997–ல் வரி விலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் 2001–ல் இவ்வரம்பு ரூபாய் 100/–ஆக உயர்த்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வணிகர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, தற்போது சாதாரண மக்கள் பயன்படுத்தும் ரூபாய் 200/–க்கும்கீழ் மதிப்புள்ள காலணிகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜரிகைக்கும், நெய்க்கும் வரி விலக்கு கேட்டிருக்கிறார்கள். அது லிக்கப்படுகிறது. முடிந்தால் அது பின்னாலே ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிவிக்கப்படும்.





மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நன்கு படித்துப் பார்த்திருக்கிறோம். இதிலேயே ஓரளவுக்கு பூரண திருப்தி அடைந்திருப்பீர்கள் என்றும் கருதுகிறேன். உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டு அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு தாயாய், தந்தையாய் இருந்து என்னை ஆளாக்கி, இந்த மாமன்றத்தில் 3 தடவை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்கும், அவற்றில் இரண்டு தடவை அமைச்சர் பொறுப்பினைக் கொடுத்து, இந்த மானியக் கோரிக்கையின் அடிப்படையில் பதிலளிக்கின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், எங்களுடைய முதல்வர், எங்களுடைய குடும்பத் தலைவர் அவர்களை வணங்கி எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–40

எனது வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கின்ற நிதி அமைச்சர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், எனக்கு வழிகாட்டியாக இருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய கழகத்தினுடைய பொருளாளர், மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாமன்றத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் என்பது இம்மாமன்றத்தில் உள்ள அனைவரும் அறிந்தது ஆகும். இவர்களுடைய வறுமை அகல வேண்டும், வாழ்வு உயர வேண்டுமெனில்

கல்வியறிவு மிகவும் இன்றியமையாதது. இம்மக்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக 'பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை' என்ற ஒரு துறையை உருவாக்கியதும் கலைஞர் அவர்கள்தான்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக 1989 ஆம் ஆண்டு 'மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்' என்ற தனித் துறையை உருவாக்கியதும் இதே முதல்வர் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர்தான். சிறுபான்மையினரின் நலனுக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை என 1999–ல் பெயர் மாற்றம் செய்ததும் தமிழனத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்றக் கழகம் அமைத்ததும் தலைவர் கலைஞர்தான்.

தனியார் கல்வி நிறுவனங்களில் 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் கொண்டு வந்ததும் நம்முடைய முதல்வர் கலைஞர்தான். மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்ததும் முதல்வர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தந்த மாநிலங்களில் வாழும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கேற்ப இட ஒதுக்கீடு அளவை அந்தந்த மாநிலங்களே நிர்ணயிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட மத்திய அரசை வலியுறுத்துவதும் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர்தான்.

பிற்படுத்தப்பட்டோர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டில் கல்விக்காக மட்டும் 76 சதவிகிதம், அதாவது 240 கோடி அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் மூலம் கல்விக்கு இந்த அரசு தரும் முக்கியத்துவத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ளலாம்.



கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், பராமரிப்புக்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்து கொடுப்பதிலும் இந்த அரசு முனைப்பாக உள்ளது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எழுதுபலகைகள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக 26 கோடியே 82 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதும் கலைஞருடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பொதுப் பரிசுகளும், மேலும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று தொழிற் கல்வி மற்றும் பட்டயப்படிப்பு பயில்பவர்களுக்கு முறையே அண்ணா பெயரிலும், தந்தை பெரியார் பெயரிலும் பரிசுகள் வழங்கி வருகிறது. மேலும், இவர்களுடைய பொருளாதார நிலை மேன்மை பெற வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் மூலமாகவும் ஏற்படுத்த முடியும். அதனால் கீழ்க்கண்ட புதிய அறிவிப்புகள் இத்துறை மூலமாக செயலாற்றப்பட இருக்கின்றன. அவையாவன:

2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 50 புதிய விடுதிகள் இந்த ஆண்டே தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

2 கோடி ரூபாய் செலவில் 2000 இளைஞர்களுக்கு Diploma in Computer Application பயிற்சி அளிக்கப்படும். அதாவது ஒரு நபருக்கு அரசு ஒதுக்கீடு செய்வது, மானியமாகக் கொடுப்பது 10 ஆயிரம் ரூபாய் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 இளைஞர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. அதற்கு தமிழக அரசு, 16,400 ரூபாய் ஒரு நபருக்கு வழங்குகிறது. அதாவது போக்குவரத்துக் கழகங்களில் driver எல்லாம் இல்லையென்று சொல்கிறார்கள். ஓட்டுநர்களெல்லாம் இல்லையென்று சொல்கிறார்கள். அவர்களுடைய குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில், வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு இந்தப் பயிற்சி மூலமாகக்

கண்டிப்பாகக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அரசு ஒரு நபருக்கு இலவசமாகக் கொடுப்பது 16,400 ரூபாய்.

1 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 3,000 இளைஞர்களுக்கு Television Mechanic பயிற்சி வழங்கப்படுகிறது. அதற்கு ஒரு நபருக்கு அரசாங்கம் செலவு செய்வது 3,600 ரூபாய். இலவச கலர் டெலிவிஷன் தமிழ்நாடு பூராவும் கொடுக்கப் போகிறார்கள். அது தலைவர் கலைஞர் அவர்களுடைய தேர்தல் அறிக்கையின் அடிப்படையில், தலைவர் கலைஞர் அவர்கள், எந்த நாட்டிலும் எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனையாக டி.வி. கொடுக்கப் போகிறார்கள். கண்டிப்பாக இந்தப் பயிற்சியைப் பெற்றால், உடனடியாக கண்டிப்பாக வேலைவாய்ப்பு கிடைக்கும். இதைப் பயன்படுத்திக்கொள்வது நம் கையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) (குறுக்கீடு) சிரிக்கக் கூடாது. ஏனென்றால், சின்ன சின்ன பிரச்சினைகள் வந்தால், tune பண்ணக்கூட தெரியாமல் சிலர் இருக்கிறார்கள்.

1 கோடி ரூபாய் செலவில் 1,000 மகளிருக்கு Clinical Nursing Assistant பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்கு அரசாங்கம் ஒரு நபருக்கு ஒதுக்கீடு செய்யும் தொகை 10 ஆயிரம் ரூபாய் இலவசமாக அவர்களுக்கு பயிற்சிக் கட்டணமாக அளிக்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

60 இலட்சம் ரூபாய் செலவில் 500 இளைஞர்களுக்கு Diploma in 2-D மற்றும் 3-D Animation பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. ஒரு நபருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 12 ஆயிரம் ரூபாய், இலவசமாக கொடுக்கப்பட இருக்கிறது.

40 இலட்சம் ரூபாய் செலவில் 200 இளைஞர்களுக்கு கதிரியல் (Radiology) பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. ஒரு நபருக்கு அரசாங்கம் செலவிடும் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 35 இலட்சம் ரூபாய் செலவில் 500 இளைஞர்களுக்கு Medical Transcription பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. அதற்கு அரசு செலவிடுவது, ஒரு நபருக்கு 7 ஆயிரம் ரூபாய்.

28 இலட்சம் ரூபாய் செலவில் 300 இளைஞர்களுக்கு ஓட்டல் வரவேற்பாளர் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. அதற்கு ஒரு நபருக்கு செலவு செய்வது 9,350 ரூபாய் ஆகும்.



21 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் 300 இளைஞர்களுக்கு உணவு தயாரித்தல் பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. அதற்கு ஒரு நபருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 7,260 ரூபாய் என்பதாகும்.

20 இலட்சம் ரூபாய் செலவில் 100 இளைஞர்களுக்கு பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கும் பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. இதற்கு ஒரு நபருக்கு செலவிடும் தொகை 20 ஆயிரம் ரூபாய் என்பதனை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

18 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 இளைஞர்களுக்கு D.T.P. பயிற்சி வழங்கப்படவிருக்கின்றது. அதற்கு ஒரு நபருக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,800 ரூபாய்.

15 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் 500 மகளிருக்கு அழகுக் கலைப் பயிற்சி—Beautician — வழங்கப்படவிருக்கின்றது. ஒரு நபருக்கு 3,025 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14 இலட்சம் ரூபாய் செலவில் 300 இளைஞர்களுக்கு உணவு மற்றும் பரிமாறுதல் பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. அதற்கு ஆகும் செலவு ஒரு நபருக்கு 4,770 ரூபாய்.

14 இலட்சம் ரூபாய் செலவில் 200 இளைஞர்களுக்கு Bakery மற்றும் Confectionery பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. ஒரு நபருக்கு 7 ஆயிரம் ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

13 இலட்சம் ரூபாய் செலவில் 50 இளைஞர்களுக்கு ஓட்டல் பராமரிப்பில் முதுநிலை பட்டயப் படிப்பு பயிற்சி வழங்கப்படும். இதற்கு ஒரு நபருக்கு ஆகும் செலவு 25,000/- ரூபாயை அரசு இலவசமாக அளிக்க இருக்கிறது.

இதுபோன்ற வேலைவாய்ப்பு பயிற்சிகளுக்கு கழக அரசு நடப்பாண்டில் 10 கோடி ரூபாய் செலவில் 42 வகையான வேலைவாய்ப்பு பயிற்சி, அதுவும் 13,290 வேலையற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

அடுத்ததாக 85 இலட்சம் ரூபாய் செலவில் 5 ஆயிரம் நபர்கள் பயன்பெறும் வகையில் 5,000 சலவைப் பெட்டிகள் இந்த ஆண்டே வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) அரசு நிகழ்ச்சியிலே எல்லோரும் பார்ப்பது Iron Box. Iron Box கொடுப்பது...

அதேபோல தையல் மெஷின் இந்த ஆண்டு 2 ஆயிரம் பெண்கள் பயிற்சி பெறுகிற அளவுக்கு தையல் மெஷினும் கொடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 1,000 நபர்களுக்கு ரூபாய் 3 ஆயிரம் கடனாகவும், அரசு மானியமாக ஒரு நபருக்கு ரூபாய் 2 ஆயிரமும் ஆக மொத்தம் ரூபாய் 5 ஆயிரம் செலவில் நடமாடும் சலவையகம் வழங்கப்படும். இதற்கு கழக அரசு 20 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டுமனையே இல்லாமல் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. முற்பட்ட வகுப்பினர்களுக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் இந்த அரசால் 1997–1998 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டு காலத்தில் மட்டும் 61 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் 1 இலட்சத்து 54 ஆயிரத்து 99 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால், 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. 5 ஆண்டு கால ஆட்சியில் 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் மட்டுமே இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டு 6,869 நபர்களுக்கு மட்டுமே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. கடந்த ஆட்சியில் 2002–2003 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் முழுமையாகக் கைவிடப்பட்டது. ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றிருக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு நிதியொதுக்கீடு செய்யதுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதியில் தங்கிப் பயிலும் 32,663 மாணவ, மாணவியர்களுக்கு போர்வைகள் வழங்கப்பட



உள்ளன. இதற்கென இந்த ஆண்டு 32 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

100 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் 8 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். 200 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் சுத்திகரிப்பு வசதிகள் வழங்கப்படும்.

ஐந்தாவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியரின் நலன் கருதி ஒருங்கிணைந்த இருக்கையுடன்கூடிய மரத்திலான எழுது மேசை 2 கோடியே 9 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக பத்திரப் பதிவுத் துறையில் சில கருத்துக்ளைக் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளவிருக்கின்றேன். பதிவுத் துறையானது 1865 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இது அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது இடத்தில் உள்ளது. பொதுமக்களால் சொத்துக்களை வாங்குவது, விற்பனை செய்வது தொடர்புடைய ஆவணங்களைப் பதிவு செய்வது இதன் தலையாய பணியாகும்.

இதன் காரணமாக முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வாயிலாக அரசுக்கு வருவாய் கிடைக்கிறது. இந்த வருவாய் பல்வேறு வகையான மக்கள் நலன்காக்கும் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுத்து வருவாயைப் பெருக்கிட தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பல அனைத்து வழிகளிலும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

கடந்த ஆண்டில் அதாவது மே மாதம் 2005 முதல் ஜுலை 2005 வரையிலான 3 மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 538 கோடி ரூபாயாகும். ஆனால், நடப்பு ஆண்டில் அதாவது மே மாதம் 2006 முதல் ஜுலை 2006 வரையிலான 3 மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 730 கோடி ரூபாயாகும். இப்படி, கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 201 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதலாக இந்த ஆண்டு கழக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்தச் சாதனையைப் படைத்துள்ளது என்பதனை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–55*

அடுத்ததாக, போலியாக ஆவணங்களைப் பதிவு செய்பவரையும், பினாமி சொத்து பரிமாற்றத்தினை தடுக்கும் வகையில் கடந்த 2001 ஆம் ஆண்டு மைய அரசு, 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தது. அதன்படி, சொத்துக்களை வாங்குவோர் மற்றும் விற்பவருடைய புகைப்படங்கள் ஆவணங்களில் கட்டாயம் ஒட்டப்பட வேண்டும். மைய அரசால் கொண்டு வரப்பட்ட இந்த மக்கள் நலன்பயக்கும் சட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வர அ.தி.மு.க. அரசு கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை, முன்வரவில்லை. இருப்பினும் இத்திட்டம் மக்களுக்குப் பெரிதும் பயனுடைய திட்டமாக இருக்கும் என்கிற காரணத்தால் கழக அரசு பொறுப்பேற்றவுடன் மேற்சொன்ன திட்டத்தை 1–7–2006 முதற்கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், போலியாக ஆவணங்கள் பதிவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஏமாற்றப்படும் நிலையும் தடுக்கப்பட்டுள்ளது. மக்கள் இதனைப் பெரிதும் வரவேற்றுள்ளனர் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

இந்த அரசு, இதற்குப் புதிய மாற்று ஏற்பாடாக மற்றும் ஒரு ஏற்பாடு, மின்னணு முறையில் முத்திரையிடும் முறையை, e–stamping method–ஐ அறிமுகப்படுத்துவது குறித்துப் பரிசீலித்து வருகிறது. இதன் காரணமாக, போலி முத்திரைத் தாள்கள் பயன்படுத்துவது முற்றிலும் தடுக்கப்படுவதுடன், அரசுக்குண்டாகும் வருவாய் இழப்பும் தவிர்க்கப்படும். மேலும், போலியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் வித்தியாசத்தை அறிந்துகொள்ளவும், போலி ஆவணங்களைத் தவிர்க்கவும் "ஹலோகிராம்" ஒட்டுவில்லைகளை ஆவணங்களில் ஒட்டவும் கழக அரசு ஆணையிட்டுள்ளது.

வளர்ந்து வரும் அறிவியல் மாற்றத்திற்கேற்ப இத்துறையை முற்றிலும் கணினிமயமாக்க வேண்டுமென்ற பெருமுயற்சி கழக ஆட்சிக் காலத்தில்தான் அதாவது 1996–2001 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், இத்துறை படிப்படியாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 558 சார் பதிவாளர் அலுவலகங்களில் கணினிமயமாக்கப்படாமல் இருக்கும் 108 சார் பதிவாளர் அலுவலகங்களையும் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பதிவுத் துறையில் 558 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இதில் 255 அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகையாக 1½ கோடி ரூபாய் ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. இந்தச் செலவைக் குறைக்கும்பொருட்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் அனைத்து, அதாவது 255 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்தமாகக் கட்டடங்கள் கட்ட வேண்டியது அவசியமாகும்.

1996–2001 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் 14 சார் பதிவகங்களுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனால், 2001–2005 ஆம் ஆண்டில் அதாவது ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 2 அலுவலகங்களுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் கழக அரசு பதவியேற்றவுடன் நடப்பு நிதியாண்டில் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 15 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அறிவிப்புகளாக, சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு ஆவணங்களைப் பதிவு செய்ய பொதுமக்கள் வருகின்றனர். அப்பொதுமக்களுடைய நலன் கருதி, அவர்களின் வசதிக்காக உட்காருவதற்கான நாற்காலிகள், குடிநீர் வசதி, ஆவணங்களை வைத்து எழுதுவதற்கு வசதியாக சுவரில் பொருத்தப்பட்ட பலகைகள், ஆவணப் பதிவு நடைமுறைகளைத் தெரிந்துகொள்ளும் வகையில் அறிவிப்புப் பலகைகள் ஆகியவை அமைக்கப்படும். முதறகட்டமாக 60 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு அலுவலகத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் 300 சார் பதிவாளர் அலுவலகங்களில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, பதிவு செய்யப்படும் ஆவணங்களின் நகல்கள் கோரி பெருமளவில் விண்ணப்பங்கள் வருவதால் 60 இலட்சம் ரூபாய் செலவில், 60 சார் பதிவாளர் அலுவலகங்களில் படிபெருக்கிகள் – Xerox இயந்திரங்கள் நிறுவப்படும்.

அடுத்ததாக, ஒரு குடும்பத்தில் குடும்ப உறுப்பினராக இருப்பினும், சகோதர, சகோதரிகளுக்கிடையே பதிவு செய்யப்படும் settlement ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான சொத்து பரிமாற்றங்களாக தற்போது கருதப்படுவதில்லை. இந்நிலையை மாற்றி இனிவரும் காலங்களில் சகோதர, சகோதரிகளுக்கிடையே சொத்துப்

பரிமாற்றம் செய்து பதிவு செய்யப்படும் விடுதலை மற்றும் ஏற்பாடு ஆவணங்கள் குடும்ப உறுப்பினர்களிடையிலான சொத்து பரிமாற்றமாகவே கருதப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதிலே கழக அரசு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பதிவு செய்யப்படும் ஆவணங்களில் ஆவணதாரரின் பெருவிரல் ரேகையை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை நவீன கருவிகள்மூலம், Bio–Metric Device பதிவு செய்ய பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் தங்கள் தொழில் சம்பந்தப்பட்ட தேவைகளுக்கான நகைகள் மற்றும் அசையாச் சொத்துக்களை வங்கிகளில் அடமானம் வைத்துக் கடன் பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் கடனுக்காக அளிக்கப்படும் அடமான ஆவணங்களுக்கு விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் கடன் தொகையில் 0.5 சதவிகிதம் முத்திரைத் தீர்வை செலுத்த வேண்டியுள்ளது.

*பிற்பகல் 2–00*

விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அத்தாட்சி செய்யப்படாத அடகு அல்லது அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும். (மணியடிக்கப்பெற்றது)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் பதிவுத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் என்று கருதுகிறேன். எனவே, இம்மானியக் கோரிக்கைகள்மீது, தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களின்மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து, உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று இம்மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.



**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பிராணிக்கு வரி விலக்கு கொடுத்து இருக்கிறீர்கள். அதேபோன்று, வெல்லத்திற்கு வரி விலக்குக் கொடுத்து இருக்கின்றீர்கள். அதற்காக இந்த அரசை மனமார பாராட்டுகிற இந்த நேரத்தில் சாம்பிராணியின் மூலமாகச் செய்யப்படுகின்ற, கையினால் செய்யப்படுகின்ற ஊதுவத்திக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற மாவு, சாம்பிராணி போன்றவற்றிற்கு வரி விலக்குச் செய்து அதை நிறைவேற்ற வேண்டும் என்ற தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மாண்புமிகு முதல்வர் அவர்களும், வணிக வரித் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள அறிவிப்புக்கு மனம் கனிந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு ஐய வினா? சாம்பிராணிக்கு வரி விலக்கு என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இது உடனடிச் சாம்பிராணிக்குப் பொருந்துமா என்பதையும், வெல்லம் என்பதிற்கு வரி விலக்கு அறிவித்திருக்கிறார்கள். அது கரும்பு வெல்லத்திற்குப் பொருந்துமா என்பதையும், சாம்பிராணியில் உடனடிச் சாம்பிராணி, வெல்லத்திலே கரும்பு வெல்லம் இவற்றிற்குப் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) பொருந்தும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அந்த மக்களின் சார்பாகவும், மனம் கனிந்த நன்றியை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி. (குறுக்கீடு) அவர் பேசிவிட்டாரே ?

**•திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, 50 கோடி ரூபாய்க்கு வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு அரசு நிதி ஒதுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். 15–09–2005 அன்று ரூ.50 கோடி, அரசாணை எண் 534–ல் அறிவிக்கப்பட்டு மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காண்பிக்கின்றேன். அதேபோன்று பயிற்சி எடுப்பதில் கனரக வாகனங்களுக்குப் பயிற்சி எடுப்பதில் 1 கோடி ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவிக்கப்பட்ட கனரக வாகன ஓட்டுநர் 500 பேருக்கு ரூ. 73,80,000 இதில் சேருகின்றதா இல்லையா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார். ஒரே ஒரு கேள்வி கேட்டுவிட்டு உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரே கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டிருக்கின்ற சூழ்நிலையில் வணிக வரி அலுவலகங்கள், பதிவுத் துறை அலுவலகங்கள் எல்லாம் கணினிமயமாக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், ஒரு வணிகரோ அல்லது முத்திரைத் தாள் குறித்து ஒரு தகவல் முத்திரைத் தாள் அலுவலகங்களிடமிருந்து பெற வேண்டும் என்றால் கணிணிமயமாக்கப்பட்ட சூழ்நிலையில் முத்திரைத் தாள் அலுவலகங்களையும் அதேபோன்று நம்முடைய வணிக வரி அலுவலகங்களையும் தனித்தனியாக Inter–link பண்ணுகின்ற ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மத்திய அரசு 145 கோடி ரூபாயில் காகிதங்கள் இல்லாமலேயே இத்தகைய பரிமாற்றங்களைச் செய்துகொள்ளக்கூடிய அளவிலே 14 துறைகளைத் தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுத்து, முதல் துறையாக வணிக வரித் துறையை எடுத்துக்கொண்டு இருக்கிறது. அதன்மூலம் எல்லாவற்றையும் நாம் செய்துகொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

*பிற்பகல் 2–05*

## (அ) மானியக் கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9 — பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். இருக்கையில் இல்லை.

டாக்டர் இஎஸ்எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ் சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ் சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

(ii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு 10 ஆம் வகுப்பு முதல் மூன்றாண்டு பட்டப் படிப்பு வரை எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வி வழங்கும் திட்டம் இவ்வரசால் 1989-90 ஆம் ஆண்டில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம், சில நிபந்தனைகளுடன் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும் நீட்டிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இலவசக் கல்வித் திட்டம் சில நிபந்தனைகளுடன் பாலிடெக்னிக் படிப்பு மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற தொழிற் பட்டப் படிப்புகளைப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும் நீட்டிப்பு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(அ) பள்ளிப் படிப்பு உதவித்தொகை**

**(i) சிறப்புக் கட்டணம் ஈடுசெய்தல்**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணங்கள் ஈடுசெய்யும் திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படுகிறது:-



2006 ஆகஸ்ட் 7]

6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும், 9 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட சிறப்புக் கட்டணத் தொகை ஈடு செய்யப்படுகிறது.

**(ii) இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, அனைத்து பாடப் புத்தகங்களும் கல்வித் துறை மூலமாக இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ஏற்படும் செலவினம், இத்துறையின் மூலமாக தமிழ்நாடு பாட நூல் கழகத்திற்கு ஈடு செய்யப்படுகிறது.

**(iii) தேர்வுக் கட்டணம்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரடியாக இத்துறையால் அரசுத் தேர்வுகள் துறைக்கு ஈடு செய்யப்படுகிறது.

**(iv) ஆங்கில வழி படிப்பிற்கான பயிற்றுவிப்புக் கட்டணம்**

பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி யாருமில்லை என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதும் இன்றி பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

மேற்படி பள்ளிப் படிப்பு உதவித்தொகை திட்டத்திற்கு, 2006-07 ஆம் ஆண்டில் ரூ.2,147.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஆ) பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை

### (i) பிற்படுத்தப்பட்டோர்

பள்ளி மேல்நிலைப் படிப்பு, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் பயிற்சிப் படிப்பு, தொழில்நுட்பப் படிப்பு மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

### (ii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

கல்லூரி பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் பட்டய படிப்பு, பல்கலைக்கழக ஆராய்ச்சி படிப்பு போன்றவற்றில் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவிகளுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியவை கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டவாறும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

### (iii) தேர்வுக் கட்டணம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் நேரடியாக இத்துறையால் அரசுத் தேர்வுகள் துறைக்கு ஈடுசெய்யப்படுகிறது.

### (iv) ஆங்கில வழி படிப்பிற்கான பயிற்றுவிப்புக் கட்டணம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி யாருமில்லை என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு



பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு நிபந்தனைகள் ஏதும் இன்றி பயிற்றுவிப்புக் கட்டணம் ஈடுசெய்யப்படுகிறது.

பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை திட்டத்திற்கு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.3,059.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி

7 (i) 10 ஆம் வகுப்பு முதல் மூன்றாண்டு பட்டப்படிப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனை இன்றியும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயித்த அளவிலான பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்ப வழங்க இயலாத கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

(ii) இத்திட்டத்திற்கு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.2,541.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழிற் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் பட்டயப்படிப்பு இலவசக் கல்வி

8 (i) பாலிடெக்னிக் பட்டயப் படிப்பு மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம், விவசாயம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்வி போன்ற தொழிற்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அரசு நிர்ணயித்த அளவிலான பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்ப வழங்க இயலாத கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

(ii) இத்திட்டத்திற்கு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.2,010.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 7

## மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

### பள்ளிப்படிப்பு உதவித் தொகை

9(i) பள்ளிக் கல்வி பயிலும் தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மைய அரசின் பள்ளிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம், மைய மற்றும் மாநில அரசின் 50:50 என்ற பங்களிப்பின்கீழ் 2003-04 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.44,500/-

இத்திட்டத்தின்கீழ் 2005-06 ஆம் ஆண்டில் மைய அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.400.00 இலட்சம் பெறப்பட்டு செலவிடப்பட்டது.

### பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

(ii) புள்ளி மேற்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் தொழில் பட்டப் படிப்பு போன்ற கல்வி பயிலும் தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மைய அரசின் பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைத் திட்டம், 2003-04 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் 100 விழுக்காடு பங்களிப்பின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.44,500/-

இத்திட்டத்திற்காக 2005-06 ஆம் ஆண்டில் மைய அரசிடமிருந்து ரூ.290.00 இலட்சம் பெறப்பட்டு செலவிடப்பட்டது.

## கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

10(i) ஆரம்பப் பள்ளி அளவிலேயே கல்வியை இடையில் கைவிடுவதற்கு கிராமங்களில் நிலவும் வறுமையே அடிப்படைக் காரணமாகும். குறிப்பாக மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர்களிடையே இந்நிலை அதிகமாகக் காணப்படுகிறது. வறுமையின் காரணமாக தொடர்ந்து கல்வி பயிலாமல் இடையில் நின்றுவிடும் இப்பிரிவினைச் சார்ந்த மாணவியர்கள் நடுநிலைப் பள்ளி வரை தொடர்ந்து பயில்வதை ஊக்குவிக்க கிராமப்புறங்களில் 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ.500/- ஊக்கத் தொகையும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியருக்கு மாதமொன்றிற்கு ரூ.100/- வீதம் ஒரு ஆண்டில் பத்து மாதத்திற்கு



2006 ஆகஸ்ட் 7]

ரூ.1,000/- ஊக்கத் தொகையும் வழங்கும் திட்டம் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் இவ்வரசால் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.25,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 90,000 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்கள் பயன் பெறுகின்றனர்.

(ii) இத்திட்டத்திற்கு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.600.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பரிசுகள் வழங்கும் திட்டம்

### மாநில அளவிலான பரிசுகள்

11 (i) இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு, இரண்டு முதல் பரிசுகள், (மாணவருக்கு ஒன்று மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில், முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/-மும், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.5,000/-மும் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.1,500/-ம், மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராக இருந்தால் ரூ.3,000/-மும் வழங்கப்படுகிறது.

### மாவட்ட அளவிலான பரிசுகள்

(ii) மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு ஒன்றும், மாணவியருக்கு ஒன்றுமாக இரண்டு முதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவராக இருப்பின் ரூ.1,500/-மும், மிகப்பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்தவராக இருப்பின் ரூ.3,000/-மும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகின்றது. அதே போன்று மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்ற

மாணவருக்கு ஒன்றும், மாணவியருக்கு ஒன்றுமாக இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியராய் இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.500, ரூ.250 மற்றும் ரூ.150 வழங்கப்படுகின்றது. மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியராக இருப்பின், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.1,000, ரூ.500 மற்றும் ரூ.300 வழங்கப்படுகின்றன.

இப்பரிசுகள் வழங்கும் திட்டங்களுக்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.2.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு**

(iii) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற் படிப்பில் சேருகின்ற முதல் இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.3,000 வீதம் நான்கு/ஐந்து ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக, 2006-07 ஆம் ஆண்டில் ரூ.14.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தந்தை பெரியார் நினைவுப் பரிசு**

(iv) ஒவ்வொரு மாவட்டத்திலும் பாலிடெக்னிக்குகளில் மூன்றாண்டு டிப்ளமோ படிப்பில் சேர்ந்துள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சார்ந்த மாணவ, மாணவியரில் பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்றுள்ள இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.3,000 வீதம் மூன்றாண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவுப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக, 2006-07 ஆம் ஆண்டில் ரூ.9.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்**

12 (i) அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசிடமிருந்து பகுதியாக நிதியுதவி பெற்றுச் செயல்படும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு வருமான வரம்பின்றி இலவசமாக மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன

(ii) இத்திட்டத்திற்காக நடப்பு 2006-07 ஆம் ஆண்டில் ரூ.6,035.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விடுதிகள்**

13 (i) ஏழை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் நலனுக்காக தமிழகம் முழுவதுமாக மொத்தம் 1,081 மாணவ, மாணவியர் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் 601 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறையின்கீழ் 480 விடுதிகளும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் மொத்தம் 61,989 மாணவ, மாணவியர் தங்கிப் பயின்று பயனடைந்து வருகின்றனர். இவ்விடுதிகளில் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ii) மொத்தம் உள்ள 1,081 விடுதிகளில் 511 விடுதிகள் அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகள் அனைத்திலும் மாணவ, மாணவியர் எவ்வித குறையுமின்றி தங்கிப் பயில போதுமான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, குளியலறை வசதி, போதுமான இட வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. அதேபோன்று மேற்கொண்டு 461 விடுதிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட அரசு சொந்தக் கட்டடம் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. இது தவிர, தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் எஞ்சிய 109 விடுதிகளுக்கு படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்ட இவ்வரசு முடிவு செய்துள்ளது.

(iii) இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வாராந்திர வரையறுக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்பொருட்டு, விரைவாக உணவு வகைகளைத் தயாரித்து

மாணவ, மாணவியருக்கு வழங்குவதற்காக விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்களும், எரிவாயு இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. விடுதி மாணவ, மாணவியரின் உணவுச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றிற்கு, நபர் ஒருவருக்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.300-ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.400-ம் உணவுக் கட்டணமாக செலவிடப்படுகிறது.

(iv) மாணவ, மாணவியர்களின் நலனுக்காக கீழ்க்கண்ட கூடுதல் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன:

(1) கல்லூரி விடுதிகள் அனைத்திலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

(2) அனைத்து விடுதிகளுக்கும் விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(3) விடுதிகளில் நூலக வசதிகளும், பொது அறிவுத் திறனை வளர்த்திடவும் அன்றாட உலக நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் தினசரி ஆங்கில நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ் இரண்டும் வழங்கப்படுகின்றன.

(4) விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்காக அனைத்து பாடப் பிரிவுகளுக்கும் சிறப்பு வழிகாட்டி புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

(v) 2006-07 ஆம் ஆண்டில் விடுதி மாணவ மாணவியருக்கு போர்வைகள் வழங்குவதற்காக ரூ.60.38 இலட்சமும், இம்மாணவ, மாணவியர் தங்களது பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பில் சிறந்து விளங்கும் பொருட்டு விடுதி நூலகங்களுக்கு பாட குறிப்புப் புத்தகங்கள் வழங்க ரூ.10.90 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vi) இவ்விடுதிகளின் நிர்வாகம், பராமரிப்பு மற்றும் உணவுச் செலவினங்கள் போன்றவற்றிற்காக 2006-07 ஆம் ஆண்டிற்கு ரூ.5,637.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(vii) இது தவிர, விடுதிகளின் கட்டுமானப் பணிகளுக்காக நடப்பாண்டில் ரூ.4,319.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

14(i) இத்துறையின்மூலம் நடத்தப்படும் அரசு விடுதிகள் தவிர பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ மாணவியர் பயனடையும் வகையில் 39 தனியார் விடுதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களின், பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாத பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் உணவுச் செலவினங்களுக்காக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.

(ii) இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.40.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

15. சமுதாயத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் பொருட்டு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களாக, இலவச தையல் இயந்திரம் மற்றும் சலவைப் பெட்டி வழங்கப்படுகிறது. மேலும் வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்களும் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## தையல் இயந்திரங்கள் வழங்குதல்

16(i) சுய வருவாயை ஏற்படுத்தும் வகையில், வறுமை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த ஆண்டு வருமான வரம்பாக கிராமப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.16,000-க்கு மிகாமலும் நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு ரூ.24,000-க்கு மிகாமலும் உள்ளவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ii) இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

17(i) சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும்பொருட்டு இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான வரம்பு கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்கு ரூ.16,000-க்கு மிகாமலும் நகர்ப்புறங்களில் வசிப்பவர்களுக்கு ரூ.24,000-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(ii) இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.47.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பயிற்சிகளும் வேலைவாய்ப்புத் திட்டங்களும்

### அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி நிலையம்

18(i) சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த திறமையான மாணவர்களும் மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகளுக்கான தேர்வுகளில் வெற்றி பெற போட்டியிடும் வகையில் அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க கருத்தில் கொண்ட இவ்வரசு கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பாகவே 1971 ஆம் ஆண்டில் சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்றினை துவக்கியது. இப்பயிற்சி நிலையத்தில் ஆண்டுதோறும் நூறு நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் வருமான வரம்பின்றி பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையத்துடன் கூடிய விடுதியில் தங்குவதற்கு ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விடுதியில் தங்கிப் பயிற்சி பெறும் மாணவ, மாணவியரின் உணவுச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.500/- வீதம் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது.

(ii) இந்நிறுவனத்தைப் போன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பயிற்சி அளிப்பதற்கென தனியே ஒரு பயிற்சி நிலையம் சென்னையில் இயங்கி வந்தது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் ஒன்றாக இணைந்து வாழ்வதன்மூலமே நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என்ற சமத்துவபுர கோட்பாட்டின்படி, இவ்வரசால் கடந்த 1999-2000 ஆம் ஆண்டு இரு பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி நிலையம்





சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

(iii) இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.33.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்

19(i) பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர் வேலைவாய்ப்பு பெறவும், சுய தொழில் செய்து தங்களின் பொருளாதாரத்தி ன மேம்படுத்திக் கொள்ளவும், இந்த வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் வழிவகை செய்கின்றன. வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டங்கள் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதிகள் இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள்மூலமாகவும் அளிக்கப்படுகின்றன. இதற்குரிய பயிற்சிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்கிறது. இப்பயிற்சித் திட்டங்களின்கீழ், கணினி பயிற்சி, அழகுக் கலைப் பயிற்சி, தோல்பொருள் உற்பத்தியில் செயல்திறன் பெற்ற பொறி இயக்கும் பயிற்சி, பிளாஸ்டிக்ஸ் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கும் பயிற்சி, காலணி தயாரிப்பில் சான்றிதழ் படிப்பு, தோல் பொருள் தயாரிப்பில் சான்றிதழ் படிப்பு, உணவு தயாரிப்பு, உணவு மற்றும் பானம் பரிமாறுதல், விடுதிப் பாராமரிப்பு, விடுதி வரவேற்பு அலுவல், கட்டட உள் அலங்கார பயிற்சி, பேக்கரி மற்றும் கன்பக்‌ஷனரி, ஆட்டோ மொபைல் மெக்கானிக், ரெப்ரிஜெரேஷன் மெக்கானிக், ஏர்கண்டிஷனிங் மெக்கானிக், அழைப்பு மையப் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி போன்ற பல்வேறு வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இது தவிர, வேலைவாய்ப்புகளை அதிக அளவில் பெறும்பொருட்டு, வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதிக எண்ணிக்கையில பயனாளிகள் பயனடையும் வகையில் பல்வேறு வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்களை செயல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளளது.

(ii) இப்பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்த 2006-07 ஆம் ஆண்டில ரூ.164.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இலவச வீட்டுமனை வழங்கும் திட்டம்

20(i) நலிவுற்ற மக்கள் தங்களுக்கு உறைவிடத்தை அமைத்துக்கொள்ளும் வகையில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு குறிப்பாக முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், போயர் மற்றும் நரிக்குறவர் ஆகிய வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை 1981-82 ஆம் ஆண்டு அரசு துவக்கியது. 1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டம் அனைத்து மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பிற்படுத்தப்பட்ட மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு இவ்வரசால் விரிவுபடுத்தப்பட்டு, 2000-2001 ஆம் ஆண்டு வரையில் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டம் துவங்கப்பட்ட நாள் முதல் 2000-01 ஆம் ஆண்டு வரை மொத்தம் 1,93,300 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 2000-01 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுகளில் மட்டும் இத்திட்டத்திற்கு ரூ.6,142.80 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,54,099 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2001-02 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் நடப்பாண்டு முதல் மீண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த 2006-07 ஆம் ஆண்டிற்கு ரூ.525.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) இத்திட்டம் தவிர ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டாக்களைப் பெற்ற பயனாளிகள் தத்தம் வீட்டுமனைகளில் வீடுகளைக் கட்டி குடியேறுவதை ஊக்குவிக்கும் விதமாக அப்பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகளான சாலை வசதிகள், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(iii) இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.128.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## ஈமச்சடங்கிற்கு நிதியுதவி வழங்குதல்

21. வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த குடும்பங்களில் இறப்பு ஏற்பட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூ.500/- நிதி உதவித் தொகை வழங்கும் திட்டம் கடந்த 2000-01 ஆம் ஆண்டில் இவ்வரசால் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஏனைய திட்டங்கள்

### சமூகநீதிக்கான தந்தை பெரியார் விருது

22. தமிழ்நாட்டில் சமூகநீதிக்காக போராடியவர்களை கௌரவிக்கும்பொருட்டு ஆண்டுதோறும் சமூகநீதிக்கான தந்தைப் பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் விருதாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 2006-07 ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

23. மண்டல் குழு வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் நீக்குவதற்கு பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசிலித்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் என்னும் நிரந்தர ஆணையம் 1993 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர், மிகவும் பிற்படுத்தபட்டோர் வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திருத்தும் பணியும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்தும், அவை மீதான மறுப்புகள் குறித்தும் ஆணையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தற்போது நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில்

[2006 ஆகஸ்ட் 7

அரசாணை (நிலை) எண் 30, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 11-07-2006-இல் இரண்டு ஆண்டுகளுக்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

24(i) தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசால் 16-11-1981 ஆம் நாளன்று நிறுவப்பட்டு 22-5-1982 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களுக்கு உதவிடும் வகையில் குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார மற்றும் நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறுகள் உள்ள சிறுதொழில் அல்லது வியாபாரம் செய்து தங்களது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு பல்வேறு கடனுதவித் திட்டங்களை செயல்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், புதுதில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகவராக செயல்படுகிறது.

(ii) இந்நிறுவனத்தின் கடன்களை வழங்கிடவும் கடன்களை வசூலித்திடவும் கீழ்க்கண்ட நிறுவனங்கள் துணை முகவர்களாக செயல்பட அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3. கூட்டுறவு வங்கிகள்
4. அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள்
5. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

(iii) ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளரின் தலைமையின்கீழ் கூர்ந்தாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு கடன் விண்ணப்பங்களைத் தேர்வு செய்து அவற்றை சம்பந்தப்பட்ட நிதி உதவி அளிக்கும் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கிறது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், இதுவரையில், புது தில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 1993-94 ஆம் ஆண்டு முதல் 31-3-2006 வரை ரூ. 6,815.54 இலட்சங்கள் காலக் கடனாகப் பெற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கு காலக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் மேற்கண்ட தொகையினை முழுமையாக வழங்கியுள்ளது.



2006 ஆகஸ்ட் 7]

(iv) மேலும் சிறுபான்மையினருக்கு கடன் வழங்குவதற்காகப் புது தில்லியிலுள்ள தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 464.00 இலட்சம் காலக் கடனாகப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்படும் முன்னர், இக்கழகத்தால் சிறுபான்மையினர் இனத்தவர்களுக்கு காலக் கடன் திட்டத்தின்கீழ் ரூ. 143.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பயன்பாட்டுக்காக நிதி மாற்றம் செய்யப்பட்டது.

(v) இதுவரையில் இக்கழகம், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி இணையங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனி நபர் கடன்களை (தனியார் கட்டடங்களில் இயங்கும் அரசு விடுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வழங்கும் கடன்கள் உட்பட) பொதுக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 43,291 நபர்கள் பயன்பெறும் வகையில் மொத்தம் ரூ. 5,099.98 இலட்சங்களை கடனாக வழங்கியுள்ளது.

(iv) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிருக்கு சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்காக தலா ரூ. 2,000/- வீதம் கூட்டுறவு வங்கிகளின்மூலம் சிறு கடன் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

(vii) இத்திட்டத்தின்கீழ் புது தில்லி, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் 1,06,588 மகளிர் பயனடையும் வகையில் இது வரையில் ரூ. 2,131.76 இலட்சங்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்கு கடன் வழங்கும் திட்டம்

(viii) சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் சுயதொழில் மேற்கொண்டு வருமானம் ஈட்டும் வகையில் தமிழ்நாடு

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமானது தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மகளிருக்கு அதிகபட்ச திட்ட மதிப்பீட்டு தொகையாக ரூ. 10,000/- வரை கடனுதவி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இது வரையில் 315 மகளிருக்கு மொத்தம் ரூ. 30.58 இலட்சங்கள் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்**

25 (i) 1-1-1996 முதல் அமலுக்கு வந்த 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 43/1995) தமிழ்நாடு வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் 13 உறுப்பினர்களைக் கொண்டதாகும். வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான தகராறுகளை முடிவு செய்வதற்கு, 30 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும், அரசு, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு நிதியிலிருந்து நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. இவ்வாரியத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 45.00 இலட்சம் நிர்வாக மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பழுதுபார்ப்பு/சீரமைப்பு மானியம்**

(ii) மசூதிகள் மற்றும் தர்காக்களைப் புதுப்பித்தல் மற்றும் முஸ்லிம் இடுகாடுகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வோராண்டும் வாரியத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கென 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உலமா ஓய்வூதியத் திட்டம்**

(iii) முவாஜின் (மோதினார்), பேஷ் இமாம் அல்லது முஜாவர் (முஸ்லிம்) அரபு மொழி ஆசிரியர்களாக 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்தவர்களாகவும், அளவை செய்யப்பட்டு, அறிவிக்கை வெளியிடப்பட்டு, ஆண்டு சகாயத் தொகை செலுத்தும் வக்ஃபு நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களாகவும் மற்றும் வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு, உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ. 750/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஊனமுற்றவர்களுக்கான வயது வரம்பினை 50 ஆண்டுகளாகவும், தேவையான பணிக்கால அளவினை 10 ஆண்டுகளாகவும் தளர்த்தப்பட்டு ஆணையிடப்





பட்டுள்ளது. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழுவின் பரிந்துரையினைப் பெற்று உலமா ஓய்வூதியம் வழங்கி ஆணையிட தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2,200. அதில், தற்போது உலமா ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,870. இத்திட்டத்திற்காக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அன்னதானத் திட்டம்**

(iv) தமிழ் நாட்டில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 12 தர்காக்களில் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வியாழக்கிழமைதோறும் ஏழை முஸ்லீம் பக்தர்களுக்கு, தர்காக்களில் கொடையாளிகள் மூலமாக பெறப்படும் பொது நன்கொடைகளிலிருந்து, உணவு வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு மாநில ஹஜ் குழு**

**ஹஜ் குழுவின் அமைப்பு:**

26 (i) ஹஜ் குழு சட்டம், 1958-ன்கீழ் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, முதன் முறையாக 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் செயல்முறை ஆணைப்படி நிறுவப்பட்டது. அதன் பின்னர், மத்திய அரசு, புதிய ஹஜ் குழு சட்டம், 2002-ஐ 12-6-2002 அன்று அறிவிக்கை செய்து, மாநில அரசுகள், புதிய ஹஜ் குழு சட்டம், 2002-லுள்ள பிரிவுகளின்கீழ் மாநில ஹஜ் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது. அதன்படி, 27-6-2003 நாளிட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறையின் அரசாணை எண் 34-ல் அலுவல் சார் உறுப்பினர்-செயல் அலுவலருடன் 16 உறுப்பினர்கள் அடங்கிய தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவினை அமைத்து அறிவிக்கை வெளியிட்டது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவினை திருத்தி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மானியங்கள்/உதவிகள்:**

(ii) தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அதன் நிருவாகச் செலவுகளுக்காக அரசு, ஒவ்வோராண்டும் ரூ. 10.00 இலட்சம் மானியமாக

வழங்கி வருகிறது. ஹஜ் புனித பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்கு சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்குமிடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜித்தாவிற்கு விமானச் சேவைக்கான உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை, ஹஜ் பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது. நிர்வாகச் செலவுகளுக்கான மானியமாக 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) நிர்வாகச் செலவிற்கான மானியத்துடன், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு, ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும் ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களை தேர்வு செய்யும் குழுவின் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும் ஆகும் செலவினத்திற்காக தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியம் அளித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இதற்கு ரூ. 6.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம்**

27. முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் இச்சங்கத்தின் தலைவராவார். ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குதல், தகுதியுடைய முஸ்லிம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லிம் மகளிருக்கு, கைத்திறத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். இச்சங்கம் தன்னார்வலர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகளின்மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. ஆண்டுதோறும் இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையான தொகையை தமிழக அரசு, மானியமாக வழங்குகிறது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு மானியமாக ரூ.2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**புதிய திட்டங்கள்**

28. 2006-2007 ஆம் ஆண்டில் கீழக்கண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | 2006–2007–ல் செலவு |
|---|---|---|---|
| | **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்** | | |
| 1. | 18 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்புடன்கூடிய நிகரி மற்றும் ஒளிநகல் இயந்திரம் வழங்குதல் | 12.06 | 12.06 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககத்திற்கு ஒரு ஒளி நகல் இயந்திரம் வழங்குதல் | 0.54 | 0.54 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககத்தை கணினிமயமாக்குதல் | 2.78 | 2.78 |
| 4. | பிற்படுத்தப்பட்ட நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவிகளுக்கு போர்வைகள் வழங்குதல் | 32.66 | 32.66 |
| 5. | 100 பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்குதல் | 8.00 | 8.00 |
| 6. | 200 பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்குதல் | 22.00 | 22.00 |
| 7. | 71 பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கென விடுதி நூலகங்களுக்கு பாடக்குறிப்பு புத்தகங்கள் வழங்குதல் | 7.10 | 7.10 |
| 8. | 2 பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டித் தருதல் | 5.50 | 5.50 |
| | **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மொத்தம்** | **90.64** | **90.64** |
| | **மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்** | | |
| 9. | மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்திற்கு நிகரியுடன்கூடிய நகல் எடுக்கும் இயந்திரம் வழங்குதல் | 0.67 | 0.67 |
| 10. | மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவிகளுக்குப் போர்வைகள் வழங்குதல் | 27.72 | 27.72 |
| 11. | 75 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் 25 சீர்மரபினர் நல விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரம் வழங்குதல் | 8.00 | 8.00 |

[2006 ஆகஸ்ட் 7

| | | | |
|---|---|---|---|
| 12. | 200 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் வழங்குதல் | 22.00 | 22.00 |
| 13. | 2 சீர்மரபினர் நல மாணவியர் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தருதல் | 6.98 | 6.98 |
| 14. | பள்ளி ஒன்றிற்கு உபகரணங்களுடன்கூடிய 10 கணினிகள் வீதம் 8 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்குதல் | 24.00 | 24.00 |
| 15. | பள்ளி ஒன்றிற்கு உபகரணங்களுடன்கூடிய 5 கணினிகள் வீதம் 23 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்குதல் | 34.50 | 34.50 |
| 16. | கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நான்கு இருக்கையுடன்கூடிய மேசை வழங்குதல் | 269.67 | 269.67 |
| 17. | 25 மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் 13 சீர்மரபினர் நல கல்லூரி விடுதிகளில் உள்ள விடுதி நூலகங்களுக்குப் பாடக்குறிப்பு புத்தகங்கள் வழங்குதல் | 3.80 | 3.80 |
| | **மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் மொத்தம்** | **397.34** | **397.34** |
| | **தமிழ்நாடு மாநில ஹஜ் குழு** | | |
| 18. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு கணினி வாங்குதல் | 1.40 | 1.40 |
| | **தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மொத்தம்** | **1.40** | **1.40** |
| | **தமிழ்நாடு வக்ஃபு வாரியம்** | | |
| 19. | வக்ஃப் வாரியத்திற்கு ஒரு நகலெடுக்கும் கருவி வாங்குதல் | 0.60 | 0.60 |
| 20. | புதியதாகக் கட்டப்படும் வக்ஃப் வாரிய அலுவலகத்திற்குத் தேவையான மரச்சாமான்கள் வாங்குதல் | 10.00 | 10.00 |
| 21. | மண விலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 1986-ன்கீழ் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் அளித்தல் | 1.00 | 1.00 |
| | **தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மொத்தம்** | **11.60** | **11.60** |
| | **பெரு மொத்தம்** | **500.96** | **500.96** |



2006 ஆகஸ்ட் 7]

**முடிவுரை:**

29. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதையும், அவர்களின் நலன்களை கட்டிக்காப்பதையும் இவ்வரசு முதன்மையான கடமையாகக் கருதி செயல்படுகிறது. இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் திறம்படப் பின்பற்றுவதுடன், இப்பிரிவினர்களுக்கான நலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி தமிழகத்தைப் பிற மாநிலங்களைவிட முன்னிலையில் திகழச் செய்வதில் இவ்வரசு உறுதிபூண்டுள்ளது.

## இணைப்பு

## 2006-07 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 166.63 | – | – | 166.63 |
| வக்ஃப், ஹஜ் குழு மற்றும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் | 177.27 | – | 10.00 | 187.27 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் | 14,425.21 | 2,483.44 | – | 16,908.65 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் | 12,840.60 | 1,835.57 | – | 14,676.17 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் | 35.16 | – | – | 35.16 |
| தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையம். | 22.40 | – | – | 22.40 |
| **மொத்தம்** | **27,667.27** | **4,319.01** | **10.00** | **31,996.28** |

# இணைப்பு II

*(93.ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## சிறுபான்மையினர் நலன்

## (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் உள்ளது)

மத்திய அரசு இஸ்லாமியர், கிருத்துவர், சீக்கியர், புத்தமதத்தினர் மற்றும் பார்சி மதத்தைச் சார்ந்த மக்களை, தேசிய அளவில் சிறுபான்மையினர் என அறிவித்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில், இந்த ஐந்து மதங்களையும் சார்ந்த மக்கள் 12 விழுக்காடு உள்ளனர். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தேவைப்படும் நிலையான தன்மை, ஜனநாயக உரிமை, அமைதி ஆகியவற்றுக்குச் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மக்கள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியம் என்ற உண்மை உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மையின மக்களின் அரசியல் மற்றும் சட்டப்படியான உரிமைகளைப் பாதுகாப்பதும், பெரும்பான்மையான மக்களுக்கு இணையாக, கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்குவதும் முக்கியமானதாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ்த் தத்துவத்தின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசு, வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட சமுதாயத்தைக் காண்பதற்குரிய சூழலை உருவாக்குவதில் உறுதி கொண்டுள்ளது. ஒரு பக்கம், சிறுபான்மை இனத்தவரின் பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலையை ஊக்குவிப்பதுடன்; மறுபுறம், அவர்களது மதம், மொழி, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத் தொடர்புகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1989–இல் மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது. 1999–ல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை மாற்றி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை என உருவாக்கப்பட்டது. 1999–ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டது. இவை சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு எடுத்த முக்கிய நடவடிக்கைகள் ஆகும்.



## 2. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ)

சிறுபான்மையின மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்திடவும், குறிப்பாக சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டின்மீது தனிக் கவனம் செலுத்திடவும் 1999 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.500 இலட்சம் ஆகும்.

### 2.1 நோக்கம்

மிகவும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் சிறுபான்மை இனத்தவருக்குச் சுயதொழில் செய்ய பொருளாதாரச் சலுகைகள் அளிப்பதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இக்கழகத்தின் குறிக்கோள்களில் பின்வரும் அம்சங்களும் அடங்கும்:

(1) சிறுபான்மை இனத்தவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டங்களைத் தயாரித்து, அவற்றின் செயல்பாட்டைக் கவனித்தல்.

(2) தொழில் முனைவோர் மற்றும் அவர்களது செயல்திறன் வளர அவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) சிறுபான்மை இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோர் சிறுதொழில் மற்றும் குறுந்தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.

(4) சிறுபான்மையினர் ஈடுபடும் வணிகம், தொழில் மற்றும் பொதுச் செயல்பாடுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவுதல்.

(5) தேசிய சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்றக் கழகத்தின் முகவராகச் செயலாற்றுதல்.

(6) சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்கள் விவசாயம், தொழில், கால்நடைப் பராமரிப்பு மற்றும் இதர கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

## 2.2. முக்கியத் திட்டங்கள்

இக்கழகம் மாநில அரசு மற்றும் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்றுத் தமிழ்நாட்டில் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 2.2.1 தனிநபர் காலக் கடன்

தனிநபர் காலக்கடன், கடன் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இதில் 95 விழுக்காடு கடனாக வழங்கப்படுகிறது. அனைத்துக் கடன்களும் 6 விழுக்காடு சலுகை வட்டியில் வழங்கப்படுகிறது.

### 2.2.2 சிறு கடன் வசதி

வறுமை நிலையிலுள்ள சிறுபான்மையின மக்களைச் சென்றடையும் வகையில், குறிப்பாக, வங்கிகளில் காலக்கடன் பெறும் வசதியைப் பயன்படுத்தாத கிராமம் மற்றும் நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த மகளிர், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகவுள்ள நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.10,000 வரை, நான்கு விழுக்காடு வட்டி விகிதத்தில் அவர்களின் விருப்பத்திற்கேற்பத் தொழில் தொடங்கச் சிறுகடன் வழங்கப்படுகிறது.

### 2.2.3 மகிளா சம்ரிதி யோஜனா

சிறுபான்மை இன மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, தையல், பின்னல், பூத்தையல் போன்றவற்றில் பயிற்சி பெற்று சிறுகடன் திட்டத்தின்கீழ் கடன் பெறும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தேசிய சிறுபான்மை வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்துடன் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. 2005–06 ஆம் ஆண்டில், தையல், பின்னல், பூத்தையல் ஆகியவற்றில் 40 சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஏழை மகளிருக்கு அரசு சாரா நிறுவனங்கள் மூலம் ரூ.1.80 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 2.2.4 தொழில் சார்ந்த பயிற்சித் திட்டம்

சிறுபான்மைப் பயனாளிகள் சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்பு பெற்றிட தொழில் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுன்றன.



### 2.2.5 கறவை மாடு திட்டம்

சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் கறவை மாடுகள் வாங்கிட 'ஆவின்' மூலமாக கடனுதவி வழங்கப்படுகின்றது. இரண்டு கறவை மாடுகள் வாங்கிட ஒரு பயனாளிக்கு ரூ.30,000/– வரை கடன் வழங்கப்படுகிறது.

### 2.2.6 தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இஸ்லாமிய சமுதாயத்தினர் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் 1000 இஸ்லாமிய இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்குச் சுய தொழில் தொடங்கிட ரூ.25,000/– வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

### 2.2.7 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

இத்திட்டத்தின்கீழ், இஸ்லாமிய இளைஞர்கள் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அதன்மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்கிட தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், கடன் உதவி செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு 6 விழுக்காடு குறைந்த வட்டியில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வங்கிகள்மூலம் கடன் வழங்கப்படுகிறது. அவர்கள் ஆட்டோ கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு 2005–06 ஆம் ஆண்டில் 141 பயனாளிகளுக்கு ரூ.118.50 இலட்சம் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 2006–2007 ஆம் ஆண்டில் சிறுபான்மையின மக்கள் பயன் அடையும் வகையில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத் திட்டங்களைச் செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது.

## 3. மாநில சிறுபான்மையினர் ஆணையம்

இம்மாநிலத்தில் வாழும் மதம் மற்றும் மொழிச் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க, 1989 ஆம் ஆண்டில் மாநில அரசால் சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 4. புதிய முயற்சிகள்

### 4.1 கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சிறுபான்மையினத்தவருக்கு ஒதுக்கீடு

தமிழகத்தில் நடைமுறையிலுள்ள 69 விழுக்காடு மொத்த இட ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு இடங்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய ஒதுக்கீடுகளில் கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் இந்த ஒதுக்கீட்டின்மூலம் பெருமளவில் பயனடைகின்றனர். எனினும், அனைத்துக் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையினருக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்குவதற்கென சட்டத்தினை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

### 4.2 பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம்

சிறுபான்மை இனத்தவரின் நலனுக்காக, புதிய 15 அம்சத் திட்டத்தை இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார். சிறுபான்மை இனத்தவரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தோடு இணைந்துள்ள செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் 15 அம்சத் திட்டம் ஆய்வு செய்து மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தில் சிறுபான்மை இனத்தவரின் நலன்கள் குறித்து இடம் பெற்றுள்ள அம்சங்கள்:

1. கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல்
2. பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்புகளில் சம பங்கு அளித்தல்
3. சிறுபான்மை இனத்தவரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்
4. இனக் கலவரங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுத்தல்

அனைத்து மாநில அரசுகளும் இத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து, செயல்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு, இத்திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இந்த முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்திட ஓர் உயர்நிலைக் குழுவை அமைக்கும்.





# இணைப்பு III

*(93ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 11 – வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

பதிவுத் துறை 1865 ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வரும் தொன்மையான துறையாகும். இத்துறை அரசுக்கு வருவாயை ஈட்டித்தருவதில் மூன்றாவது பெரிய துறையாக விளங்குகிறது. பொது மக்களின் சொத்து பரிமாற்றங்களை முறைப்படுத்தக்கூடிய விற்பனை, கொடை, அடமானம், குத்தகை, பாகப்பிரிவினை, செட்டில்மெண்ட் போன்ற ஆவணங்களைப் பதிவு செய்து அதன்மூலம் அரசுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வாயிலாக வருவாயை ஈட்டித்தருவது இத்துறையின் தலையாய கடமையாகும். இத்துறை கணினி மயமாக்கப்பட்ட பின்னர் புத்துணர்ச்சி பெற்றதுடன் விரைவான வெளிப்படையான தங்குதடையற்ற செயலாற்றலுக்கு வழிவகுப்பதுடன் பொது மக்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றுள்ளது. பதிவுத் துறையின்மூலம் கடந்த 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.2,349 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல், 2006 முதல் ஜூலை 2006 வரையிலான காலத்தில் ரூ.959 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் அதாவது 2005 ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான காலத்தில் ஈட்டப்பட்ட வருவாயான ரூ.701 கோடியைவிட 36.77 விழுக்காடு அதிகமாகும்.

### 1. (அ) பதிவுத் துறை நிர்வகிக்கும் சட்டங்கள்

1. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)
2. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)
3. 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1972)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975)

[2006 ஆகஸ்ட் 7

5. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

(ஆ) கீழ்க்கண்ட சட்டங்களின்கீழ் சில வரையறுக்கப்பட்ட கடமைகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1. 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)
2. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)
3. 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)
4. 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (மத்திய சட்டம் 3/1936)
5. 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)
6. 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)
7. 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)
8. 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

## 2. பதிவுத் துறையின் அமைப்பு

பதிவுத் துறை தலைவரின் தலைமையில் செயல்படும் இத்துறையில் பின்வரும் அலுவலர்கள் அவருக்கு உதவியாகத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றனர்.

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
3. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
4. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்



2006 ஆகஸ்ட் 7]

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது)
6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு)
7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)
8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)
9. கணக்கு அலுவலர்

பதிவுத் துறைத் தலைவர் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராகவும், 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் சீட்டுப் பதிவாளராகவும், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கப் பதிவாளராகவும், 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளராகவும் செயல்படுகிறார்.

பெருமளவில் அரசுக்கு வருவாயை ஈட்டித்தரும் பதிவுத் துறையைச் செவ்வனே நிர்வகிக்க ஏதுவாக மாநிலம் முழுவதும் 9 பதிவு மண்டலங்களாகவும், 50 பதிவு மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றின் விவரம் பின்வருமாறு:—

### மண்டல அலுவலகங்கள்

துணைப் பதிவுத் துறைத் தலைவரால் நிர்வகிக்கப்படும் 9 பதிவு மண்டலங்கள், சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சி, சேலம், கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. மண்டல நிர்வாகம். மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், திடீர் ஆய்வு செய்தல், விசாரணை நடத்துதல் ஆகியவை துணைப் பதிவுத் துறை தலைவரின் பணிகளாகும். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப்பதிவாளராகவும், முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமனத்தில் உதவி பதிவுத் துறைத் தலைவர் அல்லது மாவட்டப் பதிவாளர் பிறப்பிக்கும் ஆணையின்மீது மேல்முறையீட்டு அலுவலராகவும் துணை பதிவுத் துறைத் தலைவர் செயல்படுகின்றார்.

### வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சி, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட 5 உதவி பதிவுத் துறைத் தலைவர்கள், துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களில் செயல்படுகின்றனர். சார் பதிவகங்களை ஆய்வு செய்தல், புகார் மனுவின்மீது விசாரணை செய்தல், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களால் செய்யப்படும் தணிக்கைப் பணியின்மீது சோதனை ஆய்வு செய்வது ஆகியவை இவர்களது முக்கியப் பணிகளாகும். மேலும், இவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர். முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமங்கள் வழங்குதலுக்கு இவர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாக உள்ளனர்.

### மாவட்ட அலுவலகங்கள்

நிர்வாக வசதிக்காக மாநிலம் முழுவதும் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. பணிப்பளு மற்றும் சிக்கலான தன்மை கொண்ட பணிகளைக் கருத்தில்கொண்டு 12 பதிவு மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஓர் உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரால் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்கள் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதி சட்டத்தின்கீழ் துணைப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும், முத்திரைத்தாள் விற்பனையாளர் உரிமம் வழங்கும் அதிகாரிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

### தணிக்கை குழுக்கள்

பதிவு செய்யப்படும் ஆவணங்களில் முத்திரைத் தீர்வை முறையாக வசூலிக்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆவணத்தின் தன்மை சரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும் கண்டறிவதற்கு ஏதுவாக பதிவுத் துறையில் 45 தணிக்கைக் குழுக்கள் ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

### சார்பதிவகங்கள்

மாநிலம் முழுவதும் 558 சார்பதிவகங்கள் உள்ளன. ஆவணங்கள் பதிவு தவிர இந்து திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் சார்பதிவாளர்





செயல்படுகின்றார். மேலும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டு நிதி சட்டத்தின்கீழ் உதவிப் பதிவாளராகவும் செயல்படுகின்றார்.

### பதிவுத் துறை பயிற்சி நிலையம், சென்னை

பதிவுத் துறை பயிற்சி மையம், பதிவுத் துறையில் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திறத்தை மேம்படுத்த 1996 ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. உதவிப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் மற்றும் மாவட்டப் பதிவாளர் நிலையில் இரண்டு விரிவுரையாளர்கள் அலுவலர்கட்கு பயிற்சியளித்து வருகின்றனர்.

'ஸ்டார்' (எளிய மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகம்) எனும் தகவல் தொழில்நுட்பத் திட்டம் குறித்த பயிற்சியைப் பணியாளர்கட்கு இந்நிலையம் வழங்குகின்றது.

## 3. துறையின் செயல்பாடுகள்

### முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலர்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அலுவலராக உள்ள பதிவுத் துறைத் தலைவர், முத்திரைச் சட்டத்தின்கீழ் ஆட்சியர்களின் பணிகளைக் கண்காணிக்கவும்/சீராய்வு செய்யவும் அதிகாரம் பெற்றவராவார். இவர் மேலும், சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து, மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை) பிறப்பிக்கும் ஆணையின்மீது மேல் முறையீட்டு அலுவலராகவும் உள்ளார். இவர்கள் பிறப்பிக்கும் ஆணையினை தன்னிச்சையாகச் சீராய்வு செய்யும் அதிகாரமும் இவருக்கு உள்ளது.

### வழிகாட்டி மதிப்பின் சீரமைப்பு

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி மாற்றம் செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பிற்கேற்ப முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட வேண்டும். சந்தை மதிப்பைப் பற்றிய விவரங்களை அறிந்திட அனைத்து சார்பதிவாளர்களுக்கும் கிராம வாரியான மதிப்புகளைக் கொண்ட வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 7

வழிகாட்டி மதிப்புகளை வெளிப்படையாக்கும் நோக்குடன் அவற்றின் நகல்கள் வர்த்தக சங்கங்களுக்கும், விவசாயிகளின் சங்கங்களுக்கும் மற்றும் கிராம பஞ்சாயத்துகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுமைக்குமான வழிகாட்டி மதிப்புகள் பதிவுத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

வழிகாட்டி மதிப்புகளில் முரண்பாடுகள் அதிக அளவில் இருப்பதாக பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகளின்மூலம் அறியப்பட்டுள்ளது. இதனை சரிசெய்யும்பொருட்டு மாநிலம் முழுமைக்குமான வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியினை நிறைவு செய்யும் பொருட்டு வட்டக் குழுக்கள், மாவட்டக் குழுக்கள் மற்றும் மாநிலம் அளவிலான மைய மதிப்பீட்டுக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்புகளைச் சீரமைக்கும் பணி துரிதமாக முடிக்கப்பட்டு திருத்திய வழிகாட்டி மதிப்புகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

### புலனாய்வுக் குழு

சொத்து மாற்றம் நடைபெறும்போது அவற்றில் உள்ள கட்டடமும் மாற்றம் செய்யப்பட்டால், அக்கட்டடத்தின் மதிப்பை நிர்ணயம் செய்து அதற்கேற்ப முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட வேண்டும். எனவே, கட்டடங்களை ஆய்வு செய்து மதிப்பிடவும் மற்றும் முத்திரைத் தீர்வை ஏய்ப்பை தடுத்திடவும் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் 8 மாவட்டப் பதிவாளர்கள் 4 சார்பதிவாளர்கள் மற்றும் 2 உதவி செயற் பொறியாளர்களையும் கொண்ட புலனாய்வுக் குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது. கள ஆய்வுக்காக அதிக அளவில் ஆவணங்கள் நிலுவையாக இருப்பதனால் அவற்றை விரைவில் ஆவணதாரர்களுக்குத் திரும்ப வழங்கிட ஏதுவாக அனைத்து பதிவு அலுவலர்களும் கள ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### விழிப்புப் பணிக் குழு

பொது மக்களிடமிருந்து துறைப் பணியாளர்களின் தவறான செயல்பாடுகள் குறித்து பெறப்படும் புகார்கள்மீது விசாரணை நடத்தும்பொருட்டு ஓர் உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் ஒரு சார்பதிவாளரைக் கொண்ட விழிப்புப் பணிக் குழு பதிவுத் துறையில் செயல்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 7]

## 4. வருவாய்

வணிகவரி மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைகளுக்கு அடுத்தபடியாக அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதில் மூன்றாவது பெரிய துறையாக பதிவுத் துறை விளங்குகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூபாய் 2,348.64 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டான 2006–2007-ல் ஜூலை 2006 வரை ரூபாய் 959.26 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 5. சந்தை மதிப்பு நிர்ணயம்

இந்திய முத்திரைச் சட்டத்தின்படி பரிமாற்றம் செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை கணக்கிட்டு வசூலிக்கப்பட வேண்டும். சொத்துக்களின் சந்தை மதிப்பை அறிய ஏதுவாக பதிவு அலுவலர்களுக்குக் கிராம வாரியாக வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்தில் சரியான சந்தை மதிப்பு குறிப்பிடப்படவில்லையெனில், அவ்வாவணம் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47–A(1)–ன்படி சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பப்படுகிறது. இவர்கள் சொத்தின் சரியான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்கின்றனர். இப்பணியைச் செய்திட சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா 1 மாவட்ட வருவாய் அலுவலரும் (முத்திரை), திருச்சி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 9 இடங்களில் தனித் துணை ஆட்சியர்களும் (முத்திரை) உள்ளனர்.

## 6. முத்திரைத் தீர்வையுடன் வசூலிக்கப்படும் மாற்றுத் தீர்வை (Transfer Duty)

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, நிலையான குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் 2 விழுக்காடும் அனுபவ உரிமையுடன் கூடிய அடமான ஆவணங்களுக்கு 1 விழுக்காடும் மாற்றுத் தீர்வை கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கப்படும் தொகையில்

5 விழுக்காட்டுத் தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள 95 விழுக்காட்டுத் தொகையை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு வழங்குகின்றது.

அதே போன்று சிறப்பு நிலை பஞ்சாயத்துகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்படும் மாற்றுத் தீர்வையில், 3 விழுக்காட்டை பதிவுத் துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொண்டு மீதமுள்ள 97 விழுக்காட்டை சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கும், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் வழங்குகிறது.

## 7. முத்திரைத் தாள்கள் கொள்முதல் மற்றும் வழங்கல்

ஆவணங்கள் முத்திரைத்தாள்களில் எழுதப்படுகின்றன. முத்திரைத்தாள்கள் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள நாசிக் இந்தியா செக்யூரிட்டி அச்சகத்திலும் ஆந்திர மாநில ஹைதராபாத்திலுள்ள செக்யூரிட்டி அச்சகத்திலும் அச்சடிக்கப்படுகின்றன. முத்திரைத் தாள்கள் இவ்வச்சகங்களிலிருந்து 3 மாதங்களுக்கு ஒருமுறை தேவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன. இப்பணி கருவூல கணக்குத் துறையால் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட முத்திரைத் தாள்கள் கருவூலங்கள் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள்மூலம் முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இவர்கள் பொது மக்களுக்கு முத்திரைத்தாள்களை விற்பனை செய்கின்றனர்.

தமிழ்நாட்டில் 31–3–2006 அன்றுள்ளவாறு 2,754 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். இவர்களால் பராமரிக்கப்படும் பதிவேடுகள் சார்பதிவாளர்கள்/மாவட்டப் பதிவாளர்களால் காலமுறை ஆய்வு செய்யப்பட்டு இவர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன.

சார்பதிவாளர்கள் அலுவல் முறையில் முத்திரைத்தாள் விற்கும் விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 41–ன்கீழ் முத்திரைத் தீர்வையினை எவ்வித உச்சவரம்பின்றி ரொக்கமாகப் பெற்று, ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் பெற்றவர்களாகவும் உள்ளனர். இதனால், பொது மக்கள் முத்திரைத்தாள்கள் பெறுவதில்



ஏற்படும் சிரமம் குறைந்துள்ளது. போலி முத்திரைத்தாள்களின் புழக்கத்தைத் தடுக்கும்பொருட்டு அவற்றைக் கண்டறிய அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் புற ஊதா விளக்குகள் (UV Lamps) வழங்கப்பட்டுள்ளன.

## 8. பாதுகாப்பு நடவடிக்கைகள்

(அ) போலியான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களால் அப்பாவிப் பொது மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். எனவே, அசல் மற்றும் போலி ஆவணம்/சான்றிதழ்களிடையேயான வித்தியாசத்தை அறிய ஏதுவாக அனைத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் துறையால் வழங்கப்படும் சான்றிதழ்களில் 'ஹாலோகிராம்' ஒட்டுவில்லைகள் ஒட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) போலியான மற்றும் பினாமி சொத்து பரிவர்த்தனைகளைத் தவிர்க்கும் நோக்குடன் பதிவு செய்யப்படும் அனைத்து ஆவணங்களிலும் ஆவணதாரர்களின் புகைப்படங்களை ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டு, அது இம்மாநிலத்தில் 1–7–2006 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பொது மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

## 9. ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள்

பதிவு செய்யப்படும் ஆவணங்களை எழுதித்தர ஆவண எழுத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்தில் தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்படுகின்றது. இவ்வாறான உரிமங்கள் மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம் மற்றும் சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகைகளாக வழங்கப்படுகின்றன. 31–3–2006 அன்றுள்ளவாறு 9,000 ஆவண எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர். 1967 ஆம் ஆண்டு இந்திய பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகளின்படி, கணினிமயமாக்கப்படாத அலுவலகங்களில் பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். எனவே, ஆவணங்களுக்கு நகல் எடுக்கவும் தட்டச்சு நகல் செய்யவும் நகல் எழுத்தர் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. 31–3–2006 அன்று உள்ளவாறு 5,275 நகல் எழுத்தர் உரிமதாரர்கள் உள்ளனர்.

## 10. சங்கங்கள்

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் சங்கங்களின் பதிவாளர் ஆவர். பதிவுத் துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின்கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும், மேல்முறையீடுகள்மீது இறுதியாணை பிறப்பிக்கும் அதிகாரமும் உள்ளது. இம்மாநிலத்தில் 31-3-2006 அன்றுள்ளவாறு 1,26,136 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன.

## 11. சீட்டுகள்

தமிழ்நாட்டில் சீட்டு நிதி செயல்பாடுகள் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச்சட்டம் மற்றும் அதன்கீழ் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளின்படி நிர்வகிக்கப்படுகின்றன. பதிவுத் துறைத் தலைவர் சீட்டுப் பதிவாளராவார். கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப் பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் சீட்டு நிதிப் பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவிபுரிகின்றனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் முறையே இணை சீட்டுப் பதிவாளர்களாகவும் மற்றும் துணை சீட்டுப் பதிவாளர்களாகவும் அவரவர் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் சீட்டுப் பணியைக் கவனிக்க 47 சார் பதிவாளர்கள் சீட்டு ஆய்வாளர்களாகச் செயல்படுகின்றனர். சீட்டு வழக்குகளைத் தீர்க்க சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு மற்றும் மையம்) மற்றும் கோவை ஆகிய இடங்களில் சீட்டு நடுவர்கள் மூவர் செயல்படுகின்றனர்.

மோசடி நோக்கங்கொண்ட சீட்டு நிறுவனங்களிடமிருந்து பொது மக்களைப் பாதுகாக்க, சீட்டு நடைமுறையில் உள்ள காலத்தில் ஒரு முறையாவது ஆய்வு நடத்த அரசு அறிவுறுத்தியுள்ளது. பதிவு செய்யப்படாத சீட்டுகள் நடைபெறுவதைத் தடுக்க துறை தீவிரக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. அங்கீகாரமற்ற மற்றும் பதிவு செய்யப்படாத சீட்டு நடைபெறுவதைக் கண்டுபிடிக்கவும், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு வட சென்னை, தென் சென்னை மற்றும் மத்திய சென்னை மாவட்ட சீட்டு ஆய்வாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படுகிறது.





## 12. கூட்டு நிறுவனங்கள்

இந்திய கூட்டு வணிகச் சட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ் படிவம் 1-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்படலாம். நிறுவனத்தால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் நிறுவனப் பதிவேட்டில் தேவையான குறிப்புகள் செய்தபின் பதிவாளர் கோர்வை செய்வார். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டுவருவது குறித்து, ஒவ்வோர் ஆண்டும் உறுதிமொழியை கட்டாயம் கோர்வை செய்திட வேண்டும். இம்மாநிலத்தில் 31-3-2006 அன்றுள்ளவாறு 4,76,080 பதிவு செய்யப்பட்ட கூட்டு நிறுவனங்கள் உள்ளன.

## 13. திருமணப் பதிவு

### (அ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்

இந்துக்களிடையே நடைபெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் தொடர்பான வடிப்புகள் சார் பதிவாளர்களால் வழங்கப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் அனைத்து சார் பதிவாளர்களும் திருமணப் பதிவாளர்கள் ஆவர்.

உச்ச நீதிமன்ற ஆணைப்படி அனைத்து இந்துத் திருமணங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு இந்து திருமண விதிகளுக்குத் தக்க திருத்தங்கள் செய்திட அரசு பரிசீலனை செய்து வருகிறது.

### (ஆ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்

இச்சட்டத்தின்கீழ் எத்தகைய முறையிலான திருமணங்களும் பதிவு செய்யப்படுகின்றன. அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார் பதிவாளர்கள் இச்சட்டத்தின்கீழ் திருமண அலுவலர்களாக, அவர்கள் எல்லையைப் பொறுத்து நியமிக்கப்பட்டுள்ளனர். திருமண அலுவலரிடம் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணத்திற்கான அறிவிப்பு அளிக்கப்படல் வேண்டும். 30 நாட்கள் கழித்து திருமணத்திற்கு எவ்வித எதிர்ப்பும் வராத நிலையில் அடுத்துவரும் 60 நாட்களுக்குள் திருமணம் முறைப்படுத்தப்படும்.

### (இ) கிறித்துவ திருமணச் சட்டம்

கிறித்துவ பாதிரியார்களாலும், உரிமம் பெற்றவர்களாலும் இந்திய கிறித்துவ திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்கீழ் திருமண வடிப்புகள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன.

## 14. பதிவுத் துறையில் மின்னணு ஆளுமை

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவான மற்றும் வெளிப்படையான சேவையை பொதுமக்களுக்கு வழங்கும்பொருட்டு அனைத்து சார் பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் படிப்படியாகக் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 558 சார் பதிவாளர் அலுவலகங்களில் 450 அலுவலகங்களும், அனைத்து மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும் இதுகாறும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை தகவல் தொழில்நுட்ப வசதியுடன் விரைவாக பரிசீலித்திட 'ஸ்டார்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**கணினி செயல்பாடுகளின் சிறப்பம்சங்கள்**

- ஆவணங்கள் பாதுகாப்பு–ஸ்கேன் செய்யப்பட்டு குறுவட்டுக்களில் சேமித்தல்
- இணையதளம்மூலம் கோரப்படுபவை உள்ளிட்ட அனைத்து வில்லங்கச் சான்றுகள் வழங்கல்
- ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கல்
- சொத்து மதிப்பீடு அறிக்கை தயார் செய்தல்
- திருமணப் பதிவு/சங்கப் பதிவு/நிறுவனங்கள் பதிவு/சீட்டுப் பதிவு கண்காணிப்பு
- இணையதளத்தில் (http://www.tnreginet.net) காலமுறையில் திருத்தி அமைக்கப்படும் வழிகாட்டி மதிப்புகள்

கணினி மயமாக்கப்பட்ட பின் பதிவுத் துறை ஒரு பெரிய மாற்றத்தை அடைந்துள்ளது. அதற்குச் சான்று பின்வருமாறு:



| வ. எண் | செயல் | கணினிமய மாக்கப் படுவதற்கு முன் | கணினிமய மாக்கப் பட்ட பின் |
|---|---|---|---|
| 1 | வில்லங்கச் சான்று வழங்கல் | 8 நாட்கள் | 5 நிமிடங்கள் |
| 2 | சொத்து மதிப்பீடு | 30 நிமிடங்கள் | 5 நிமிடங்கள் |
| 3 | சான்றிட்ட நகல் வழங்கல் | 4 நாட்கள் | 5 நிமிடங்கள் |
| 4 | ஆவணப் பதிவு | 4 நாட்கள் | 60 நிமிடங்கள் |
| 5 | திருமணச் சான்றுகள் வழங்கல் | 1 நாள் | 15 நிமிடங்கள் |

**'ரெஜிநெட்' சேவை**

'ரெஜிநெட்' என்பது தகவல் தொடர்பு தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட தனிப்பட்ட ஒரு வலைப்பின்னல் (network) ஆகும். வலைப்பின்னல் இணைப்பின் பலனால் தகவல்கள் பரிமாற்றம் மற்றும் எந்த ஓர் அலுவலகத்தின் வில்லங்கச் சான்று பற்றிய தகவல்களையும் வேறு அலுவலகத்தில் பார்க்கலாம். இதன் விளைவாக எந்த ஒரு சொத்தைப் பொறுத்த வில்லங்கச் சான்றும் கணினிமயமாக்கப்பட்ட எந்த அலுவலகத்திலும் பெறலாம்.

இணையதளம் வழி வில்லங்கச் சான்று/பதிவுற்ற ஆவணங்களின் நகல்/சங்கங்களால்/ சீட்டு நிறுவனங்களால் கோர்வை செய்யப்பட்ட அறிக்கைகள்/இந்து திருமணப் பதிவு வடிப்பு ஆகியவை பெற, மனு செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரரால் அளிக்கப்படும் தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, வில்லங்கச் சான்று தயார் நிலையில் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் தேவையான கட்டணத்தை மையத்தில் நேரடியாகச் செலுத்தி சான்று பெறலாம் அல்லது வில்லங்கச் சான்று மனுதாரரின் வீட்டிலேயே கோரிக்கைப்படி கூரியர் சேவை வழி, உரிய கட்டணம் மற்றும் அனுப்புகை செலவுகள் வசூலிக்கப்பட்டு வழங்கப்படும்.

துறைக்கென தனிப்பட்ட இணையதளம், (http://www.tnreginet.net) அமைக்கப்பட்டுள்ளது. பதிவுச் செயல்பாடுகளை வெளிப்படையாக்கும் நோக்குடன், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளின் வழிகாட்டி மதிப்புகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பொதுவான தகவல்கள் மட்டுமின்றி பதிவு நடைமுறை விவரங்கள், பொதுப் பயன்பாட்டுப் படிவங்கள் மற்றும் மாதிரி ஆவணப் படிவங்கள் ஆகியவை

இணையதளத்தில் பொதுமக்கள் பயன் பெற அளிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுற்ற சங்கங்களின் சமீபத்திய நிலையை துறையின் இணையதளத்தில் அறிந்திடலாம்.

இந்த இணையதளம் பதிவுற்ற சீட்டுக்களின் விவரங்களையும் அளிக்கிறது. இதனை சரிபார்த்து பொதுமக்கள், தாம் சேர உத்தேசித்துள்ள சீட்டின் உண்மைத் தன்மையை அறிந்திடலாம்.

சொத்துரிமை பெயர் மாற்றங்கள் வருவாய் பதிவேடுகளில் உடனுக்குடன் செய்ய ஏதுவாக மாநிலம் முழுவதும் இணைப்பு வசதி ஏற்படுத்துதல் எதிர்காலத் திட்டமாகும். இந்த இணையதளத்தை, சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் இணையதள தொழில்நுட்ப வசதியால் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய மின்னணு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட திருவாளர்கள் 'விப்ரோ' எனும் ஆலோசனை நிறுவனம் துறை மின்னணு மேலாண்மை பற்றி அளித்துள்ள வரைவு அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. இந்த அறிக்கையில் தமிழ்நாடு மாநில வலைப்பின்னல் (TNSWAN) வசதியைப் பயன்படுத்தி அனைத்துப் பதிவு அலுவலகங்களையும் இணைத்தல், மாநில தகவல் தொகுப்பு மையம் (SDC) வசதியுடன் பதிவுத் துறை தகவல் தொகுப்பு மையம் ஏற்படுத்துதல், பதிவுத் துறையின் கணினி திட்டங்களுக்குத் திறன் வளர்ப்பு கருத்து ஆகியவை அடங்கியுள்ளன.

## 15. 2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்ட அறிவிப்புகள்

2006–2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பின்வரும் அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன:

1. 108 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும்
2. முத்திரைத் தீர்வையைச் செலுத்த மாற்று முறை அறிமுகப்படுத்தப்படும்
3. விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோர்கள் பயனடையும்விதமாக உரிமை ஆவண, ஒப்படைப்பு ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு வழங்கப்படும்

மேற்கூறிய முத்திரைத் தீர்வை விலக்களிப்பை 22–7–2006 முதல் நடைமுறைப்படுத்தி, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் உரிய அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.





## 16. பகுதி 2 திட்டம்

2006–2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:

1. சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் வசதிகள் ரூ.60 இலட்சம் செலவில் 300 சார் பதிவாளர் அலுவலகங்களில் செய்யப்படும்

2. ரூ.60 இலட்சம் செலவில் 60 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் நகல் எடுக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்

3. பதிவு அலுவலகங்களுக்கு ரூ.38.25 இலட்சம் செலவில் 510 அலமாரிகள் வழங்கப்படும்

4. பதிவுத் துறை தலைவர் அலுவலகத்திற்கு ரூ.10 இலட்சம் செலவில் மின் ஆக்கி இயந்திரம் (Generator) அமைக்கப்படும்

ரூ.225 இலட்சம் செலவில் 15 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

[2006 ஆகஸ்ட் 7

# இணைப்பு IV

*(90ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. முன்னுரை

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"*
*– திருக்குறள்*

*(பொருளுரை: முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.)*

தமிழகத்தில் புதிய அரசு கடந்த 13–5–2006 அன்று டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்றதும், பல்வேறுதரப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் அமல்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதை மக்கள் அறிவர். மேற்கூறிய திட்டங்களுக்குத் தேவைப்படும் அதிக அளவு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிக வரித் துறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. விற்பனை வரி இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் 1939 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விற்பனை வரிமூலம் வருவாய் படிப்படியாக உயர்ந்து தற்போது மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 70 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய முதல் மூன்று மாதங்களில் ஈட்டப்பட்ட வருவாய் ரூபாய் 4,705 கோடியாகும். சென்ற நிதி ஆண்டில் இதேகாலத்தில் ஈட்டப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் வருவாய் 21.40 விழுக்காடாக வளர்ச்சி பெற்றுள்ளது.



2006 ஆகஸ்ட் 7]

### 2. வணிக வரித் துறை நிருவகிக்கும் வரிச் சட்டங்கள் பின்வருமாறு:–

1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959
2. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970
3. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
4. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகன நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் பொருட்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

### 3. வருவாய்

கடந்த ஆண்டுகளின் வரி வருவாய் ஒப்பீடு.

அனைத்து வணிக வரிச் சட்டங்கள்மூலம் ஈட்டிய வரி வருவாய் விவரம் வருமாறு:–

| ஆண்டு | வரி வருவாய் (ரூபாய் கோடியில்) | வளர்ச்சி வீதம் (%) |
|---|---|---|
| 2000–2001 | 8,664 | 17.38 |
| 2001–2002 | 8,905 | 2.78 |
| 2002–2003 | 10,200 | 14.55 |
| 2003–2004 | 11,757 | 15.27 |
| 2004–2005 | 13,907 | 18.29 |
| 2005–2006 | 16,616 | 19.47 |
| 2006–2007 (31–6–2006 வரை) | 4,705 | 21.40 |

[2006 ஆகஸ்ட் 7

சட்ட வாரியாக வருவாய் விவரம் வருமாறு :-

(ரூபாய் கோடியில்)

| சட்டம் | 2000–2001 | 2001–2002 | 2002–2003 | 2003–2004 | 2004–2005 | 2005–2006 | 2006–2007 (ஜூன் 2006 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (கூடுதல் விற்பனை வரி உட்பட) | 7,354 | 7,541 | 8,507 | 9,790 | 11,462 | 13,658 | 3,846.29 |
| 2. மத்திய விற்பனை வரிச் சட்டம் | 862 | 904 | 982 | 1,186 | 1,495 | 1,799 | 506.54 |
| 3. கேளிக்கை வரிச் சட்டம் | 74 | 68 | 71 | 75 | 59 | 44 | 9.84 |
| 4. பந்தய வரிச் சட்டம் | 6 | 6 | 5 | 5 | 6 | 6 | 1.23 |
| 5. ஆடம்பர வரிச் சட்டம் | 92 | 89 | 82 | 63 | 78 | 92 | 28.33 |
| 6. நுழைவு வரிச் சட்டம் (வாகனம் மற்றும் பொருட்கள்) | 276 | 297 | 553 | 638 | 808 | 1,016 | 312.82 |
| மொத்தம் | 8,664 | 8,905 | 10,200 | 11,757 | 13,908 | 16,615 | 4,705.00 |

**வருவாயும் செலவும்**

வணிக வரித் துறையின் நிர்வாகச் செலவு வரி வருவாயில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான தொகையே ஆகும்.

## 4. மத்திய அரசு 06–06–2006–ல் அறிவித்த டீசல் மீதான விலை உயர்வில் விற்பனை வரிக் குறைப்பு

6–6–2006 அன்று மத்திய அரசு அறிவித்த டீசல் மீதான விலை உயர்வுமீது விதிக்கப்படும் விற்பனை வரி நீக்கப்படும் என்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11–6–2006 அன்று அறிவித்தார்கள். மேற்குறிப்பிட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், டீசல் மீதான விற்பனை வரிவீதத்தை 25%-லிருந்து 23.43% ஆகக் குறைத்து 12–6–2006 முதல் அமலுக்கு வரும் என்ற அறிவிக்கை ஒன்றை 11–6–2006–ல் அரசு வெளியிட்டது. இதனால் டீசல் விலை லிட்டருக்கு ரூ.0.45/- குறையும்.



2006 ஆகஸ்ட் 7]

## 5. 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகைகள்

- மறு விற்பனை வரி 1–1–2007 முதல் நீக்கப்படும்.
- வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்களுக்கு எந்தவித வரியும் விதிக்கக்கூடாது என்ற இவ்வரசின் கொள்கை அடிப்படையில், மாநிலத்திற்குள் விற்பனையாகும் பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்தவாறே, 22–7–2006 முதல் முழுமையாக விலக்கப்பட்டது.
- வெளி மாநில உற்பத்தியாளர்களுடன் போட்டியிடும் வகையில், உள்ளூர் உற்பத்தியாளர்கள், உற்பத்தியின்பொருட்டு வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள பொருட்கள்மீது செலுத்த வேண்டிய நுழைவு வரி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து வரிக் கழிவு (Set off) செய்யப்பட்ட அறிவிக்கை 22–7–2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது.
- உயர் அடர்த்தி பாலி எத்திலின் (HDPE) பொருட்கள் மீதான நுழைவு வரியினை விற்பனை வரியில் ஈடு செய்வதற்கு தற்போது வழங்கப்படும் சலுகை, குறைந்த அடர்த்தி பாலி எத்திலின் (LDPE) பொருட்களுக்கும் பாலி புராப்பிலின் (PP) மணிகளுக்கும் 21–3–2003 முதல் வழங்க 22–7–2006 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- டீ செர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலைமீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவீத மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவீதமாக 22–7–2006 முதல் குறைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும், தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும் 22–7–2006 முதல் குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின்மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவையும் 22–7–2006 முதல் நீக்கப்பட்டுள்ளன.

- சிட்டா நூலுக்கு 22–7–2006 முதல் முழு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கழிவுத்தாளுக்கு கொள்முதல் வரி செலுத்தப்பட்டிருப்பின், அந்தப் பொருட்கள் வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும்போது, அந்த வெளிமாநில விற்பனைக்கு 22–7–2006 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழலைப் பேணும்வகையில், செங்கல் உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்யும் எரி சாம்பலுக்கு விற்பனை வரிவிலக்கு 22–7–2006 முதல் அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் உரிமம் அளிக்கப்பட்ட மென்பொருட்களுக்கு (Licensed Software) விற்பனை வரிவிலக்கு 22–7–2006 முதல் அளிக்கப்பட்டுள்ளது.
- சாம்பிராணிக்கு மீண்டும் விற்பனை வரி விலக்கு 22–7–2006 முதல் அளிக்கப்பட்டுள்ளது.
- வெளிமாநிலங்களில் பதிவு செய்யப்படாத வணிகர்களுக்கு விற்கப்படும் பின்னலாடைமீது விதிக்கப்படும் வரியில் 90 சதவீதத்தை வணிகர்களுக்கே திருப்பித் தரும் ஊக்குவிப்புத் திட்டம் 13–5–2002 முதல் 3–4–2005 வரையிலான காலத்திற்கு கைவிடுதல் (Waiver) மூலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- திரைப்படத் துறைக்கும் தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில், புதியப் படங்களுக்கு தமிழிலேயே பெயர்கள் சூட்டப்படுமானால், அந்தப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு 22–7–2006 முதல் அளிக்கப்பட்டுள்ளது.
- மீனவர்களின் கோரிக்கையை ஏற்று 5,000 மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்பட்டு வரும் டீசல் மாதம் ஒன்றுக்கு 1,000 லிட்டர் என்ற அளவினை 1,500 லிட்டர் என உயர்த்தி 1–8–2006 முதல் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் நிறுவ முன்வரும் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ரூ.100 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் கணினித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் கணினிகளின்மீது விதிக்கப்படும் பொது விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரியிலிருந்து உச்சவரம்பின்றி விலக்கு அளிக்கப்படும்.





## 6. சமாதானத் திட்டம்

நிலுவையில் உள்ள வரி பாக்கிகளை வசூல் செய்யும் வகையில் ஒரு சமாதானத் திட்டத்தினை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. நடப்புக் கூட்டத் தொடரிலேயே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சட்டமியற்றல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7. மதிப்புக் கூட்டு வரி (VAT)

நம் நாட்டில், தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் உத்திரப்பிரதேசம் நீங்கலாக, ஏற்கெனவே அனைத்து மாநிலங்களும் மதிப்புக் கூட்டு வரி முறையை அறிமுகப்படுத்தியுள்ளன.

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்ற உடனேயே தொழில் உற்பத்தியாளர்களும், வணிக சமூகத்தினரும் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு விரைந்து முடிவெடுக்குமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்தனர். கடந்த 5–7–2006 அன்று நடைபெற்ற, நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்பான உற்பத்தியாளர் மற்றும் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில், அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததற்கு இணங்க, முழுமையாக ஆய்வு செய்து, மதிப்புக் கூட்டு வரித் திட்டம் வரும் ஜனவரி 1, 2007 முதல் அறிமுகப்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

**மதிப்புக் கூட்டு வரி பொதுமக்கள், வணிகர்கள், தொழில்கள் மற்றும் அரசுக்கு உதவும் வரியாகும். மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தால் ஏற்படும் முக்கிய பயன்கள் பின்வருமாறு:–**

### வரி வீதங்கள்

தற்பொழுதுள்ள வரித் திட்டத்தில் 1%, 4%, 12%, 12.5%, 16% மற்றும் 20% ஆகிய வரிவீதங்கள் உள்ளன. விற்பனைவரிமீது 5 % மேல்வரி, மொத்த விற்பனைத் தொகை மீதான வரி (கூடுதல் விற்பனை வரி) மற்றும் 1% மறு விற்பனை வரி ஆகிய வரிகளும் விதிக்கப்படுகின்றன.

மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தில் 1%, 4%, மற்றும் 12.5% ஆகிய மூன்று வரிவீதங்கள் மட்டுமே இருக்கும். தங்கம், வெள்ளிக்கட்டிகள் மற்றும் ஆபரணங்களுக்கு சிறப்பு வரி 1% இருக்கும். பொதுப் பயன்பாட்டிற்கானப்

பொருட்களான மருந்து வகைகள், அனைத்து வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளுக்கான இடுபொருட்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்டப் பொருட்கள் (declared goods) ஆகியன 4% வரிவிதிப்பிற்கும், எஞ்சிய அனைத்துப் பொருட்களும் 12.5% வரி விதிப்பிற்கும் உட்படும்.

## வரி விதிப்பு

தற்போதுள்ள பொது விற்பனை வரிச்சட்டத்தில், 'இடு பொருட்கள்' மீது சலுகை வரியாக 3% விதிக்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட பொருள், முதல் விற்பனை முனையில், பல்வேறு வரிவீதங்களில் (1%–லிருந்து 20% வரை) வரி விதிப்பிற்குள்ளாகும். இரண்டாம் மற்றும் அடுத்தடுத்த விற்பனை நிலைகளில் 1% மறு விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. விற்பனையாளர் இந்த வரியினை பொருள் வாங்குவோரிடமிருந்து வசூலித்து அரசுக்குச் செலுத்துகிறார். எனினும், விற்பனையாளர் வாங்குவோரிடமிருந்து கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax) வசூலிக்க இயலாது. தற்பொழுதுள்ள சட்டத்தில், இடுபொருட்கள்மீது வரி செலுத்திய பின்னர், ஒரு பொருளின் மொத்த மதிப்பின்மீதும், அப்பொருள் மறு விற்பனையின் போதும், வரி வசூலிக்கப்படுவதால் வரிச் சுமை அதிகமாக இருக்கும்.

மதிப்புக் கூட்டு வரியானது, ஒரு பொருளின் ஒவ்வொரு விற்பனையிலும், கூடுகின்ற மதிப்பின்மீது மட்டும் செலுத்தப்பட வேண்டும். மதிப்புக் கூட்டு வரி முறையில் மொத்த விற்பனைத் தொகைமீதான கூடுதல் விற்பனை வரி, மேல்வரி மற்றும் மறு விற்பனை வரி ஆகியன இருக்காது. எனவே, வரிச் சுமை குறைவாக இருக்கும். குறைவான வரிச் சுமை உள்ளதால் பொருட்களின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளீட்டு வரிக் கழிவு (Input Tax Credit)

தற்பொழுதுள்ள வரிச் சட்டத்தில், இடு பொருட்கள் (மூலப் பொருட்கள், நுகர் பொருட்கள் முதலானவை) மீது, அவை தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும்போது, 3% சலுகை வரி விதிக்கப்படுகிறது. பொதுவாக, இந்த இடுபொருட்கள் மீதான வரி, உற்பத்தியாளருக்கு திருப்பியளிக்கப்படவோ அல்லது தயாரிக்கப்பட்ட பொருட்கள்மீது செலுத்தப்படும் வரியிலிருந்து கழித்துக்கொள்ளப்படவோ முடியாது.



மதிப்புக் கூட்டு வரி முறையில் தொழிற்சாலைகளுக்குரிய இடுபொருட்கள்மீது 4% வரி விதிக்கப்படும். உற்பத்தி செய்வோர் இடுபொருட்கள்மீது செலுத்தப்பட்ட வரியினை தயாரிக்கப்பட்டப் பொருட்கள் மீது செலுத்தப்படும் வரியிலிருந்து கழித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று, வணிகர்களும் (Traders) தங்களது பொருட்களை விற்பனை செய்யும்பொழுது, செலுத்த வேண்டிய வரியிலிருந்து, அவர்கள் பொருட்களைக் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியினை, கழித்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

- பொருட்களை மறு விற்பனை செய்யும் வணிகர்களும் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியினை உள்ளீட்டு வரிக் கழிவு செய்துகொள்ளலாம்.
- ஏற்றுமதியாளர்கள், உள்மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கியப் பொருட்கள், வெளிநாடுகளுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது, உள்மாநிலத்தில் செலுத்தப்பட்ட வரி முழுவதுமாக மூன்று மாதங்களுக்குள் திருப்பியளிக்கப்படும் (Refund). சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள தொழிற்சாலைகள், தங்களின் இடுபொருட்கள்மீது விற்பனை வரி விலக்கு பெறலாம் அல்லது இடுபொருட்கள் மீது செலுத்தப்பட்ட வரியினை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.
- வெளிமாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் இடுபொருட்கள்மீது செலுத்திய நுழைவு வரியினை உள்ளீட்டு வரிக் கழிவு செய்துகொள்ள இயலும்.
- விற்பனைப் பட்டியல், இரசீது ஆகிய ஆதாரங்களின அடிப்படையில் உள்ளீட்டு வரிக் கழிவு வழங்கப்படும்.
- மதிப்புக் கூட்டு வரி அமலாவதற்கு ஓராண்டிற்கு முன்னர் கொள்முதல் செய்த இருப்புச் சரக்கின்மீது உள்ளீட்டு வரிக் கழிவு உண்டு.

## மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தில் சுய வரிவிதிப்பு

தற்பொழுதுள்ள வரி முறையில், ஒவ்வோர் ஆண்டும் வணிகர்களின் கணக்குகள், பேரேடுகள், சான்றுகள் மற்றும் பல்வேறு வகையான வணிகர்களின் படிவங்களை ஆய்வு செய்து வரி விதிப்பு அலுவலர்களால் வரி விதிப்பு செய்யப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 7

மதிப்புக் கூட்டு வரி முறையில் வணிகர்கள் எளிமையாக்கப்பட்ட மாதாந்திர நமூனாக்கள்மூலம் அவற்றுடன் அவர்களின் கொள்முதல்கள், விற்பனை விவரங்களுடன் உள்ளீட்டு வரி கழித்தபின் செலுத்தப்பட்ட வரி விவரங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். அனைத்து வணிகர்களும் நமூனாக்களின் (Returns) அடிப்படையில் சுய வரி விதிப்பு செய்துகொள்ளலாம்.

வணிகர்களின் கணக்குகளை அதிகாரிகள் ஆய்வு செய்து வரி விதிப்பு செய்யும் முறை இல்லை. எனினும், வரி விதிப்பாண்டில் மொத்த வரி விதிப்புகளில் 20%-க்கு மிகாமல் வணிக வரி ஆணையரால் தேர்வு செய்யப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.

**வணிகராகப் பதிவு செய்தல்**

தற்பொழுதுள்ள வரி முறையில், வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 3 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால் அவர்கள் வணிகர்களாகப் பதிவு செய்வதற்கும், வரி செலுத்துவதற்கும் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

மதிப்புக் கூட்டு வரி முறையில் தமிழகத்தில் இந்த விலக்கு வரம்பு ரூ.10 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பிட்ட சில இனங்களுக்கு இணக்க வரி முறை**

தற்பொழுதுள்ள வரி முறையில், ரூ.50 இலட்சம் வரை மொத்த விற்பனைத் தொகையுடைய ஒப்பந்தப் பணி செய்வோர், ஓட்டல் மற்றும் உணவகங்களில் உணவு மற்றும் பானங்கள் விற்பனை செய்யும் வணிகர், விரும்பினால் இணக்க வரி முறையில் வரி செலுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மதிப்புக் கூட்டு வரித் திட்டத்திலும் தற்போதுள்ளவாறே இணக்க வரி முறையில் தொடர்ந்து வரி செலுத்தலாம்.

மதிப்புக் கூட்டு வரி முறையில், இம்மாநிலத்திற்குள்ளேயே விற்கும் வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால், அவர்கள் விரும்பினால், 1% மிகாமல் இணக்க வரி செலுத்தலாம். இணக்க வரி முறையை தேர்ந்தெடுக்கும் வணிகர்கள் உள்ளீட்டு வரிக் கழிவு செய்துகொள்ள இயலாது.



2006 ஆகஸ்ட் 7]

**தொழில் ஊக்கமளிக்கும் திட்டங்கள் (வரி விலக்கு, வரித் தள்ளிவைப்பு மற்றும் வரித் தள்ளுபடி ஆகியன)**

தற்பொழுதுள்ள தொழில் ஊக்கமளிக்கும் திட்டங்களான வரித் தள்ளிவைப்பு, (Deferral) விற்பனை வரி விலக்கு, (exemption) வரித் தள்ளுபடி (waiver) ஆகியவற்றை அனுபவித்து வரும் தொழிற்சாலைகள். அச்சலுகைகளை அரசு அனுமதித்துள்ள காலம் முடியும்வரை தொடர்ந்து அனுபவிக்க அனுமதி அளிக்கப்படும்.

**மதிப்புக் கூட்டு வரி விதிப்பிற்குள்ளாகும் பொருட்கள்**

பெட்ரோல், டீசல், வானூர்தி எரிபொருள், ஆலைக் கரும்பு, இந்தியாவில் தயாராகும் அயல் நாட்டு மதுவகைகள் முதலான பொருட்கள் தவிர அனைத்து வகைப் பொருட்களும், அறிவிக்கப்பட்ட பொருட்கள் உட்பட மதிப்புக் கூட்டு வரி முறையில் அப்பொருட்களுக்கு உள்ளீட்டு வரிக் கழிவு செய்துகொள்ளலாம்.

**மதிப்புக் கூட்டு வரிக்கு உட்படாத பொருட்கள்**

பெட்ரோல், டீசல், வானூர்தி எரிபொருள், ஆலைக் கரும்பு மற்றும் இந்தியாவில் தயாராகும் மது வகை ஆகிய பொருட்கள் மதிப்புக் கூட்டு வரிக்குட்படாத பொருட்களாகும். அவை தனி வரிவீதங்களுக்கு உட்படுத்தப்படும்.

**நுழைவு வரி விதிப்பைத் தொடர்தல்**

நுழைவு வரி தொடர்ந்து விதிக்கப்படும். பொருட்களின் மீது விதிக்கப்பட்ட நுழைவு வரியை அப்பொருட்களின் விற்பனையின்போது செலுத்தப்படும் மதிப்புக் கூட்டு வரியிலிருந்து கழித்துக்கொள்ளலாம் (Set off).

**தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரித் திட்ட தயார் நிலை**

இம்மாநிலத்தில் மதிப்புக்கூட்டு வரியினை அறிமுகம் செய்வதற்குத் தயாராக, மற்ற மாநிலங்களின் மதிப்புக் கூட்டு வரிச் சட்டங்களின் முக்கியக் கூறுகளைக் கவனத்தில்கொண்டு, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி வரைவுச் சட்டமுன்வடிவு ஒன்று தயாரிக்கப்பட்டு நடப்புக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

**மதிப்புக் கூட்டு வரி அமல் செய்யும்போது வருவாய் இழப்பினை ஈடு செய்தல்**

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்காக விரிவான நலத் திட்டங்களை வழங்குவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, மதிப்புக் கூட்டு வரி முறை அறிமுகத்தால் வருவாயில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்ட மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடிதம்மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

**மத்திய விற்பனை வரி நீக்கம்**

பொருள் உற்பத்தியில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி வருவாய் ரூ. 2,000 கோடி அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது 4 சதவீதமாக உள்ள மத்திய விற்பனை வரியை, ஆண்டுக்கு 1 சதவீதமாக குறைத்து, நான்காம் ஆண்டு இறுதியில் மத்திய விற்பனை வரி முழுவதுமாக நீக்கப்படுவது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இதனால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய வேண்டுமென இவ்வரசு மத்திய அரசைக் கோரியுள்ளது.

## 8. வணிக வரித் துறையின் அமைப்பும் செயல்பாடுகளும்

மாநில அளவில் வணிக வரித் துறை சிறப்பு வணிக வரி ஆணையரின் தலைமையில் திறம்பட செயல்படுகிறது. அவருக்கு உதவியாக ஒரு கூடுதல் ஆணையர் (நிர்வாகம்), ஐந்து இணை ஆணையர்கள், ஐந்து துணை ஆணையர்கள், நான்கு உதவி ஆணையர்கள் ஒரு புள்ளியியல் ஆய்வு இணை இயக்குநர் ஆகிய அலுவலர்கள் உள்ளனர்.

## 9. வணிக வரித் துறையின் பல்வேறு செயல்பாடுகள் கீழ்க்கண்ட பிரிவுகளில் நடைபெறுகின்றன:

**வரி விதிப்பு**

மாநிலத்தில் மொத்தம் 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. வரி விதிப்புப் பணி, மாவட்ட அளவில் 40 உதவி ஆணையர்களாலும், கோட்ட அளவில் 10 துணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகிறது.



**தணிக்கைப் பிரிவு**

ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும் ஓர் உள்ளீட்டுத் தணிக்கைக் குழு உள்ளது.

**மேல்முறையீட்டுப் பிரிவு**

இத்துறையில் உள்ள இருபது மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள், இரண்டு மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் முன்பாக முதல் மேல்முறையீடு செய்யப்படுகிறது.. சென்னை, கோவை, மதுரையில் உள்ள விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாவது மேல்முறையீடு செய்யப்படுகிறது. முதல் நிலை மாவட்ட நீதிபதியின் தலைமையில் இந்த விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன.

**செயலாக்கப் பிரிவு**

செயலாக்கப் பிரிவு ஏழு துணை ஆணையர்கள் கட்டுப்பாட்டில் இயங்குகின்றது. இதுத்விர, இடை மாநில ஆய்வுப் பிரிவில் ஒரு துணை ஆணையரும் உள்ளார்.

துறையின் செயலாக்கப் பிரிவில், உதவி ஆணையர்களும், வணிக வரி அலுவலர்களும் உள்ளனர். இவர்களின்கீழ் துணை வணிக வரி அலுவலர் மற்றும் உதவி வணிக வரி அலுவலர் அடங்கிய குழு அலுவலர்களும் உள்ளனர்.

**தணிக்கைச் சாவடிகள்**

மாநில எல்லையில், இருபத்தாறு எல்லைத் தணிக்கைச் சாவடிகளும், மூன்று இடை மாநில தணிக்கைச் சாவடிகளும் உள்ளன.

## 10. பணியாளர் பயிற்சி மையம்

வணிக வரித் துறையில். அலுவலர் மற்றும் பணியாளருக்குப் பயிற்சி அளிக்க வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம் 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இத்துறையில் பணிபுரியும் ஊழியர் மற்றும் அலுவலர்களுக்கு அனைத்து வரி விதிப்புச் சட்டங்களின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய கணினி பயிற்சி மையங்களில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கும் கணினி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## 11. கணினிமயமாக்குதல்

1973 ஆம் ஆண்டிலேயே இத்துறையில் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, கிண்டியிலுள்ள அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலுள்ள வசதிகளை முன்னர் துறை பயன்படுத்தியது. 1988–ல் சொந்தமாக இத்துறைக்கு கணினி மையங்கள் சென்னை, கிரீம்ஸ் சாலை, வணிக வரி கட்டடத்திலும் 1994–ல் திருச்சி, மதுரை மற்றும் கோவை ஆகிய 3 துணை மையங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது பல நிலைகளில் கணினிமயமாக்கும் பணி விரிவாக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் உள்ள வணிக வரி அலுவலகங்கள் (சோதனைச் சாவடிகள் உள்பட) அனைத்தும், ஒரே உள்வலை அமைப்பின் (Intranet)கீழ் இணைக்கப்பட்டு தகவல் பரிமாற்றங்கள், பதிவுகள், மின்னஞ்சல் போன்ற செயல்பாடுகள்மூலம் மின் ஆளுமை (e-Governance) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கும், வணிகர்களுக்கும் பயனளிக்கும்வகையில் இத்துறை செயல்படுத்தும் பல்வேறு சட்டங்கள்பற்றிய விளக்கங்கள், படிவங்கள், பொருட்களின்மீதான அவ்வப்போதைய வரிவீதங்கள், அரசு மற்றும் ஆணையர் அலுவலக முக்கிய ஆணைகள், அறிவிக்கைகள், சுற்றறிக்கைகள், படிவங்கள் இணையத்திலிருந்து இறக்கிக் (download) கொள்வதற்கான வசதி, அலுவலக மற்றும் அலுவலர் விவரங்கள் "www.tnsalestax.com" என்ற இணையதளம் (internet website) மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மதிப்புக் கூட்டு வரி அறிமுகப்படுத்தியபின், மின் ஆளுமையின்கீழ் வணிகர்களுக்கு இவ்வலைத்தளம் மூலம் பதிவுகள், நமூனாக்கள் சமர்ப்பித்தல், வரி செலுத்துதல், சுய வரி விதிப்பு ஆணைகளை இணையதளத்தின் மூலமே பெற்றுக்கொள்ளல் போன்ற வசதிகள் செய்யப்படவுள்ளன.

## 12. வணிகர் நல வாரியம்

வணிகர் நலன் கருதி வணிகர் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்கான வணிகர் நல வாரியம் 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தற்போது வணிகர் நல வாரியத்தை வணிகர்களுக்கு அதிக பயனளிக்கும் வகையில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாரியத்தின் உறுப்பினர்களாக, அலுவலர்–உறுப்பினரன்றி வணிகர்கள் சார்பாக அலுவல்–சாரா உறுப்பினர்களாக நியமிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**31–03–2006 வரை வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வரிசை எண் | உதவி விபரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1. | குடும்ப நல உதவி<br>ரூ.20,000/– வீதம் இறந்து போன உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு உதவி | 279 | 70.55 |
| 2. | மருத்துவ உதவி<br>ரூ.25,000/– வரை உறுப்பினர்களுக்கு மட்டும் மருத்துவ உதவி | 33 | 7.36 |
| 3. | கல்வி உதவி<br>ரூ.3,000/– வீதம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி | 77 | 1.38 |
| 4. | விளையாட்டு உதவி<br>ரூ.3,000/–லிருந்து ரூ.25,000/– வரை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 5. | திருமண உதவித் தொகை<br>(தற்போது அமலில் இல்லை) | 2 | 10.00 |
| 6. | தீ விபத்து உதவி<br>ரூ.5,000/– வீதம் உறுப்பினர்களின் கடைகள் மற்றும் கிடங்குகளுக்கு தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 7. | ஊனமுற்றோருக்கான உதவி<br>ரூ.20,000/– வரை உடல் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவி | 2 | 0.15 |
| 8. | உயர்மதிப்பெண் பெற்றவர்களுக்கான உதவி<br>ரூ.5,000/– வரை<br>உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான உதவி | 6 | 0.20 |
| | மொத்தம் | 430 | 91.84 |

## 13. பகுதி II திட்டம், 2006–2007

2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு மாநில திட்டக் குழு/நிதிநிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது:-

1. ஓசூரில் ரூ. 154 இலட்சம் செலவில் வணிக வரி அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவது.

2. திருச்சியிலுள்ள வணிக வரி அலுவலகக் கட்டடத்தில் மின்தூக்கி ரூ. 30 இலட்சம் செலவில் நிறுவுதல்.

**14. மக்கள் சாசனம்**

*2006–2007* ஆம் ஆண்டிற்கான வணிக வரித் துறை தொடர்பான "மக்கள் சாசனம்" இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

227420
சென்னை-600 008